His Holiness
Sri Kanchi Kamakoti Peetadhipathi
JAGADGURU SRI SANKARACHARYA
SWAMI MUTT
Kancheepuram.

Camp ஆலஞ்சோலை Date 29-3-1978.

"கலௌ ஸ்கந்த:" என்ற புராண வாக்கியத்தின்படி கலியுகத்திலே பிரத்யக்ஷமாக அருள் பாலிப்பவர் முருகன். அந்த முருகனைப்பற்றி ஸ்கந்த புராணம் என்று ஒரு புராணம் உண்டு. முருகனைப் பற்றி ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாத ஆசார்யாளும் 'ஸுப்ரமண்ய புஜங்கம்" என்று ஒரு நூலை அருளியுள்ளார்கள். கந்தர் அலங்காரம்—கந்தர் அனுபூதி கந்தர் கலி வெண்பா—திருமுருகாற்றுப்படை என்று பல நூல்கள் தமிழிலும் வந்திருக்கின்றன. ஸ்ரீ கோபாலகிருஷ்ண கவியினால் இயற்றப்பட்ட சம்ஸ்கிருதத்திலுள்ள "ஸ்ரீஸுப்ரமண்ய கர்ணாமிர்தம்" என்ற நூலுக்கு திருவனந்தபுரம் குருஸ்வாமி சாஸ்திரிகளால் குகப்பிரியை என்னும் பெயருடன் தமிழிலே வியாக்யானம் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த நூலிலே ஸுப்ரமண்யர் கருணை—சூரபத்மன், தாரகாசுரன் போன்றவர்களுக்காக முருகப்பிரானின் அவதாரம் போன்ற பல விஷயங்கள் இருக்கின்றன. எல்லா ஆஸ்திக அன்பர்களும் இந்த நூலைப் படித்து முருகனுடைய பெருமையை அறிந்து—முருகனிடம்பக்தி செய்து இகபரச்ரேயஸை அடையும்படி ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயணஸ்மிருதி

# பதிப்புரை

ஆடும் பரிவேல் அணிசேவலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடும் தனியானை சகோதரனே

காஞ்சியில் சிவாஸ்தானத்தில் தவமே உருவாய் அமர்ந்து அருள் பாலித்துவரும் ஸ்ரீ காஞ்சி பெரியவாளின் அன்புக் கட்டளையை சிரமேற்கொண்டு மலர்கிறது இக்காவிய மலர். ஆசிரியர் "ஸ்ரீ ஸதாசிவப் பிரம்மேந்திராள்" என்கிற மகானின் ஸமகாலத்தவர். புதுக்கோட்டை மகாராஜாவிடம் மேலே குறிப்பிட்ட பெரியவர்கள் "சாஸ்திரிகளிடம் போய்க் கேட்டுக்கொள்" என்று சொன்னார்கள் என்றால் இந்தக் காவிய ஆசிரியரின் பெருமையை நன்கு உணர்ந்து கொள்ளலாம். பொதுமக்களால் "மஹாபாஷ்யம் கோபாலகிருஷ்ண சாஸ்திரிகள்" என்று அழைக்கப்பட்டதிலிருந்து, அன்னார் இயற்றிய இந்த பக்திமலரின் சிறப்பையும் ஊகிக்க முடியும்.

இந்த அற்புதமான இலக்கியப் படைப்பிற்கு அன்பும் பண்பும் அறிவாற்றலும் ஒருங்கே திகழ்ந்து விளங்கும் ஆஸ்த்திக உலகம் போற்றும் ஸ்ரீ குருஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் தமிழ்ப்படுத்தி உரையும் எழுதி உள்ளார்கள்.

பக்தியால் உள்ளம் நிறைந்து பக்தர்கள் பாராயணம் செய்யும்போது இந்த ஸ்துதிகள் "மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினுல் அளக்கொணுமல் நிறைவுடன்யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி" யாகிய முருகப்பெருமானின் திருச் செவிகளில் அமிருதமாய்ப் பாய்ந்து அருள் மழையைப் பொழியவைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எங்களுடைய செயல் எல்லாம் இராமாயணத்தில் ஸேதுபந்தன கட்டத்தில் "அணில்" செய்தது போன்ற எளிய கைங்கர்யம் மட்டுமே.

அருளாசியோடு ஸ்ரீ காமாக்ஷி அம்பாளே உருக்கொண்டு நம்மிடையே உலவிவரும் ஸ்ரீ காஞ்சி புதுப்பெரியவாளின் திவ்ய பாதாரவிந்தங்களில் மிகுந்த பக்தி சிரத்தையுடன் ஸாஷ்டாங்க பிரணாமங்களை ஸமர்ப்பித்துக் கொள்கிறேன்.

உயர்திரு டாக்டர் S. வெங்கடசுப்ரமண்ய அய்யர், M.A., Ph. D., அவர்கள் கேரள சர்வகலா சாலையில் ஸம்ஸ்கிருதப் பிரிவின் தலைமை பீடத்தை அலங்கரிப்பவர். அன்னுர் இலக்கிய உலகத்திற்கும் ஸனுதன தர்மத்திற்கும் செய்துள்ள ஸேவைகள் கணக்கிலடங்கா. மிகுந்த அன்புடன் இந்நூலுக்கு சிறப்புரை வழங்கிய பெருந்தன்மைக்கு அவர்கள்பால் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக அழகான முகவுரை எழுதியுள்ள உயர்திரு. மு. அருணுசலம் அவர்கள் சென்னையில் செயல்பட்டு வரும் தமிழ்—ஸம்ஸ்கிருத ஆராய்ச்சி பீடத்தின்

தலைவர். "தூரம் அதிகம் இருந்த போதிலும் உங்கள் குடும்பம் என் சொந்த குடும்பமாகி விட்டது" என்று எழுதுமளவுக்கு மிகப் பெரிய உள்ளம் படைத்த பெரியார். ரசிகமணி டி. கே. சி. அவர்கள் போன்ற உள்ளன்பும் ரசிகத்தன்மையும் மிகச் சிறந்த தமிழ்த் தொண்டும் ஒன்றிய நிகரற்ற கல்வியாளர். அவர்கள் என்னிடமும் எங்கள் குடும்பத்தாரிடமும் காட்டும் அன்புக்கு எவ்வாறு நன்றி செலுத்துவது என்பதில் உள்ளம் திகைக்கின்றது.

என் சிரம் தாழ்ந்த வணக்கங்களை உரிமைப் படுத்தி திருப்தி அடைந்து கொள்கிறேன். அடியேனுக்கு இப் பிறவியில் கிடைத்த பெரும் பேறு எல்லா வகைகளிலும் மிகப் பெரிய தன்மை படைத்த உயர்திரு குருஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களோடு நெருங்கிப் பழகி அவர்களுடைய அன்பையும் ஆசியையும் பெற்று வரும் வாய்ப்புத்தான். ஸ்ரீ மகா பாஷ்யம் சாஸ்திரிகளின் காவியத்தை படித்து அனுபவித்து "யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற உயர்ந்த நோக்கோடும் ஸ்ரீ காஞ்சிப்பெரியவாளுடைய ஆக்ஞையை அனுசரித்தும் இந்த பக்திமலரை அச்சுப் போட்டு வெளியிட என்னை ஊக்குவித்தார்கள். இந்தத் தெய்வீகப்பணியில் எம்மை ஈடுபடுத்திய இந்த பெரியவர் பால்

அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை
ஆனந்தமாய்க் கசிந்துருக
என் பரமல்லாதின்னருள் தந்தாய்
யானிதற்கிலனோர் கைம்மாறு"

என்று ஸ்ரீ மாணிக்க வாசகப் பெருமான் பாடிய பாடலைப் பாடி தாழ்மையுடன் வணக்கங்களையும் ஸமர்ப்பித்துக் கொள்கிறேன்.

இந்தப் புத்தகத்தை அச்சிடுவதற்கு வேண்டி பரிசோதித்தும் அச்சகத்தாரோடு ஒத்துழைத்தும் உதவிகள் செய்த திரு. கணேச சர்மா அவர்களுக்கு எங்கள் நன்றி உரியதாகுக.

நல்ல முறையில் அச்சுப் போட்டுத் தந்த M/s. சாஸ்தா அச்சகத்தாருக்கு எங்கள் கடப்பாட்டை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆஸ்திகப் பெருமக்கள் அனைவரும் இந்த ஸ்ரீ சுப்ரமண்ய கர்ணாம்ருதத்தை பாராயணம் செய்து அருள்பெற்று ஆத்ம ச்ரேயஸ் அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

"ஆயும் பழைய அடியாருடன் கூட்டித்
தோயும் பரபோகந்துய்ப் பித்துச்–சேய
கடியேற்கும் பூங்கமலக்கால் காட்டி
ஆட்கொண்(டு)
அடியேற்கு முன்னின்(று) அருள்."

ஸ்ரீ அழகிய கன்னி விநாயகர் டிரஸ்ட்டுக்காக

ஏ. சுப்ரமண்யோம்.

திருவனந்தபுரம்
29–3–1978

# முகவுரை

M. ARUNACHALAM
Director,
Tamil, Sanskrit and other Indian
Languages Research Institute
Madras 8

எங்கும் நிறைந்த பரம்பொருளை மெய்யடியார் பல வடிவங்களில் வழிபடுகிறார்கள்; 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம்' பாடுகிறார்கள். அப்படிப்பாடிப் பரவுகின்ற வடிவங்களில் சுப்பிரமணியர் வடிவம் மிகவும் முக்கியமானதொன்று.

பிரம்மண்யம் என்றால் பிரமத்தோடு தொடர்புடையது, பிரம ஞானம் பெறுவதற்குத் தொடர்புடையது, பிரமஞானத்தைச் சொல்லுகின்ற வேதமறிந்தவன் என்றெல்லாம் பொருள்கள் வழங்கும். இச்சொல்லோடு சு என்ற பிரத்தியயம் முதலில் சேரும்போது அக்கருத்துப் பின்னும் சிறப்புடையதாகிறது. சுப்பிரமணியன் என்றால் குமரக்கடவுள் என்று பொருளாகும். குமாரக்கடவுளே பரம்பொருள் ஆதலால் அப்பெருமானுக்குச் சுப்பிரமணியன் என்ற பெயர் பொருந்தியுள்ளது.

தமிழ் இலக்கியத்தில் சுப்பிரமணியன் என்ற பெயரைச் சேந்தனார் என்ற அடியவர் திருவிடைக் கழி என்ற தலத்தின் திருக்கோயிலில் எழுந்தருளி யுள்ள முருகப்பெருமான் மீது பாடிய திருவிசைப் பாவில் முதன்முதல் உபயோகிக்கிறார்.

தேவின்நற் றலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூரும்
சுப்பிர மண்ணியன் தானே.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் தொல்காப் பியம் முதல் சங்கநூல்கள் வரையில் எல்லா நூல் களும் முருகன் என்ற பெயரால் இந்தப் பெரு மானைக் குறிப்பிடுகின்றன. தொல்காப்பியம் குறிஞ்சி நிலத்துக்கு இவன் தலைவன் என்று கூறிய போது, 'சேயோன மேயமைவரை உலகம்' என்று குறிப்பிடுகிறது. சிவந்த நிறம் உடையவன் ஆத லால், சேயோன். ஆறு தீப்பொறிகளிலிருந்து இவன் உருக்கொண்டவன் ஆதலால், சிவந்த நிறம் அமைந்தது. பிற்கால இலக்கியங்கள் இவனைச் செவ் வேள் என்று குறிப்பிடும்.

முருகப்பெருமானின் புகழாக அமைந்த தனிச் சங்கநூல் திருமுருகாற்றுப்படை என்பது. இது சங்க நூலாகிய பத்துப்பாட்டில் முதல் பாட்டு. இதனுள் முருகப்பெருமான் அமர்ந்து உறையும் கோயில்களும் அவனுடைய அருள் இயல்புகளும் விரித்துச் செல்லப்படுகின்றன. ஓர் அடியில் முரு

கப் பெருமான் இயல்புகள் அனைத்தையும் இந்நூல் தொகுத்துக் காட்டுகிறது. அது 'மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி, என்பது. இங்குப் பெருமானுடைய நான்கு இயல்புகள் சுட்டப் பெறுகின்றன. முதலாவது, மணம்—அவனுடைய திருமேனி மணம் பொருந்தியது. மணமாவது இங்கு ஒளி. ஒளி, ஞானத்தின் அடையாளமாகச் சொல்லப் பெறும். இதன் கருத்தாவது, முருகன் ஞானவடிவினன் என்பது. இரண்டாவது தெய்வத்தன்மை: அவனே பரம்பொருள் என்பது. மூன்றுவது அவனுடைய இளமைத்தன்மை; அவன் என்றும் இளையவன். நான்காவது அழகு. முருகு என்றுலே அழகு என்ற பொருள் வந்திருக்கிறது. சத்தியம் சுந்தரம் சிவம் என்பதுபோல இவன் சுந்தரமான வடிவினன்.

இடைக்காலத்தில் முருகன் அருள்பெற்ற சந்தக் கவியாகிய அருணகிரி நாதர் முருகன்மீது கணக்கற்ற திருப்புகழ்ப் பாடல்களும் கந்தரலங்காரம் கந்தர் அனுபூதி, திருவகுப்பு முதலான சுவை மிகுந்த பாடல்களும் பாடினர். தமிழ் இலக்கிய வரலாற்றில் முருகனைப் போற்றி அவனருளைப் பெற்ற அரும்புலவர் அனேகர் — கச்சியப்பசிவாசாரியர், பகழிக்கூத்தர், குமரகுருபா சுவாமிகள் முதலியோர்,

இவ்வாறு முருகப்பெருமானுடைய வடிவநலங்களையும் அருள் நலங்களையும் போற்றிப்புகழ்ந்து அவனுடைய அருளை வேண்டித் துதிக்கின்ற நூல்கள் தமிழில் எண்ணற்றவை. இவை யாவும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்களை நன்கு நெறிப்படுத்தி வந்திருக்கின்றன.

தமிழைப் போலவே வடமொழியிலும் முருகனைத் துதிக்கின்ற நூல்கள் பல. அவற்றுள் இப்போது வெளியிடுகின்ற சுப்பிரமணிய கர்ணாமிருதம் என்பதும் ஒன்று.

கர்ணாம்ருதம் என்பது இறைவனுடைய திருச்செல்விகளுக்கு அமிர்தம் போல இன்பம் அளிப்பது என்று பொருள்படும். இறைவனுடைய பல வடிவங்களையும் புகழ்ந்து பலர் பல கர்ணாம்ருதப் பிரபந்தங்கள் பாடியிருக்கிறார்கள். ஸ்ரீ அப்பைய தீட்சிதர் பாடிய சிவகர்ணாம்ருதமும், லீலாசுகர் பாடிய கிருஷ்ண கர்ணாம்ருதமும் மிக்க பிரசித்தி பெற்றவை. பின்னும் இராம கர்ணாம்ருதம், சீனிவாச கர்ணாம்ருதம் முதலான நூல்களும் உள்ளன. இந்த வரிசையில் வந்த ஒரு சிறப்பான நூல் ஸ்ரீ சுப்பிரமணிய கர்ணாம்ருதம் என்ற நூல். இதைப் பாடியவர் ஸ்ரீ கோபாலகிருஷ்ண சாஸ்திரிகள். இவர் முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டு வாழ்ந்தார் என்று சொல்லுவர்.

இவர் சதா சிவப்பிரம்மேந்திரர் திரு விசநல்லூர் ஸ்ரீதர அய்யாவாள் முதலியோருக்குப் பின் காலத்தவர் என்பது வரலாறு. இந்த நூல் 116 சுலோகங்கள் கொண்டது. இது முன்னவே மூலம் மட்டும் அச்சிடப்பட்டிருப்பினும், பக்தர்கள் பொருள் உணர்ந்து படித்துப்பாடிப் பயன் பெறவேண்டும் என்ற நோக்கோடு, இதை இப்போது ஸ்ரீ குருஸ்வாமி சாஸ்திரிகள் எழுதிய தமிழ் உரையுடன் அன்பர் திரு அ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் வெளியிடுகிறார்கள்.

சாஸ்திரிகள் சிறந்த வடமொழிப்பண்டிதரும் வேதாந்த விற்பன்னரும் ஆவர். மிகுந்த பக்தியோடு இந்த அரிய நூலுக்கு உரை எழுதியிருக்கிறார். நூலின் சிறப்பும், அதன் பொருட்சிறப்பும் ஆசிரியர் வரலாறும் சாஸ்திரிகள் எழுதிய முன்னுரையாலும் நூல் உரையாலும் நன்கு விளங்கும்.

இதனுள் வடமொழியில் வேதம் ஸ்மிருதி இராமாயணம் பாரதம் புராணம் பிரம்ம சூத்திர பாஷ்யம் முதலியவற்றில் முருகப்பெருமான் எவ்வாறு போற்றப் பெறுகிறான் என்பதை நயம் படத் தொகுத்துச் சொல்லியிருக்கிறார். திருச்செந்தூர் திருப்பதி பழனி திருத்தணிகை ஆகிய தலங்களை எடுத்துக் காட்டியிருப்பதும், திருப்பதி முருகன் தலம் என்று தெளிவித்திருப்பதும் சிறப்பு.

சுப்பிரமணிய கர்ணும்ருதம் என்ற நூல் அப் பெருமானின் மறு பெயராகிய குருஸ்வாமி என்று பெயரைத் தாங்கிய சாஸ்திரிகள் உரையுடன் அப் பெருமான் பெயரையே தாங்கிய சுப்பிரமணியப் பிள்ளை வெளியிடுவது எத்தனையோ பொருத்த முடையது.

இதனை அழகாக இப்பொழுது வெளியிடுகின்ற பிள்ளை அவர்களுக்கு அவர்கள் வழிபடும் தெய்வ மாகிய ஸ்ரீ அழகிய கன்னி விநாயகப் பெருமான் எல்லா நலன்களையும் அருள் வாணுக. அன்பர்கள் இந்நூலை வாங்கிப் பெருமான் அருளுக்குப் பாத்தி ரம் ஆவார்களாக.

மு. அருணசலம்

Dr. VENKITASUBRAMONIA IYER M.A., Ph.D.,
Professor and Head of the Department of Sanskrit
Dean of Faculty of Oriental Studies
University of Kerala, Trivandrum.

# FOREWORD

Religious poetry has always been popular with the devout. It enables the devotee to comtemplate on his favourite deity conceived in personal form and as the embodiment of all excellence and grace through felicitous expressions. Prayers and praises are resorted to for gaining material or spiritual ends. In them the more philosophically inclined find a means to transcend, in due course, the limitations associated with a personal conception of god with various attributes and rise to a level to view God as the impersonal, the absolute.

Of the different types in Stotra literature, narrative, descriptive, eulogistic, expository and lyrical, the last is particularly appealing by its intense emotional content and charm of spontaneous expression. The deep devotional fervour and the sweet experience of the soul revelling in ecstatic enjoyment of the divine, find apt and ample outflow in measured strains in effortless ease. It, therefore, arrests attention and catches the imagination.

Among the religious lyries in Sanskrit, the most outstanding are Krishna Lilasuka's Krishnakarnamrita, and Sankara Bhagavatpada's Sivanandalahari. There are, of

course, several other works like Sankara's own Saundaryalahari, Muka's Panchasati, Pushpadanta's Mahimnastava and Jayadeva's Gitagovinda, but they come under one or other of the rest of the types mentioned above, although the lyrical content in them is high.

The Subrahmanyakarnamrita is a lyrical stotra in the main, in 116 verses on Lord Skanda on whom stotras in Sanskrit are not as numerous as those on Vishnu, Siva or Ambika. As is discernible from the last sloka in the work, it is also known as Surapushpamala and is written by Gopalakrishna Kavi. From other sources we are able to know that this author was known as Mahabhashyam Gopalakrishna Sastri in view of his remarkable proficiency in the great grammatical work Mahabhashya of Patanjali, that he was a fellow-student of the celebrated saint Sadasivabrahmendra and was guru in the Pudukotta royal house.

The work extols the greatness and glory of Subrahmanya identified in the characteristic Hindu way as the Supreme Being manifesting in personal form for the benefit of the devotees. The first thirty slokas which are in Sikharini metre and the next twenty which are in Arya and allied metres are general in content. The next twenty which are in Mandakranta metre and have the fourth foot in common as प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै form a distinct unit and may be taken as the Central part of the work. It indicates the yogic worship of Skanda by invoking the Kundalini sakti, the contemplation in the six chakras beginning with Muladhara, the breaking of the three granthis-Brahmi, Vaishnavi and Raudri, the Tantric meditation of the mantra 'Saravanabhava' preceded by Pranava and other mystic syllables

and the result brought about by each like pleasure, wealth, health, learning. poetic power and liberation and related matters. The next thirty one stanzas are in Sardulavikridita metre and form another unit with the verbal embllishment called ashtaprasa in each verse, the same syllable occuring as the second and fourteenth in each pada of the verse. This alliteration imparts a special grandeur by its assonance and musical flow. The theme is the praise of the mercy, magnanimity and other virtues of the deity. If we may hazard a conjecture, the author has the covert idea to string a kind of pictorial pattern (Chitrabandha) by the prasa syllables in these verses indicating the qualities of his work as well as of his deity. The easy possibility of getting words like द्राक्षापाका. सालंकारा, पाता, दाना etc,,'from these syllables lends support to this view. The last fifteen verses are in diverse metres and are a prayer to the Lord for forgiveness, protection and upliftment of the devotee whatever be his failings and faults.

Although the work cannot claim the loftiness of Sivanandalahari or the mellifluence of the Krishnakarnamrita, it is impressive by its ardour and conviction and is elevating by its reiterating assertions of the potentialities of unflinching devotion to the six-faced god. It actuates intellectual exercise and generates emotional profusion. We feel we are in the presence of the resplendant god with sakti in his hand, enjoying His merciful glances. The poet-devotee has succeeded in communicating to us his inner experience, at least in part. He is so steeped in devotional tradition and in the hymns of the great masters that his poem echoes stanzas in some of them. Compare for instance verse 26 here

पतन्ती रुद्राद्रेः श्रुतिभुवि गलन्ती श्रितरुजो
दलन्ती शूरादीनपि परिक्रुषन्ती तटतरून् ।
हरन्ती सन्तापान् पुनरपि पुनन्ती स्मृतिवशात्
स्रवन्ती काप्येषा विलसति वहन्ती मम पुरः ॥

with verse 2 in the Sivanandalahari

गलन्ती शम्भो त्वच्चरितसरितः किल्बिषरजो
दलन्ती धीकुल्यासरणिषु पतन्ती विजयताम् ।
दिशन्ती संसारभ्रमणपरितापोपशमनं
वसन्ती मच्चेतोह्रदभुवि शिवानन्दलहरी ॥

How close is the similarity between the two in idea and expression! How telling is the metaphor of the majestic river applied to the respective deities in characteristic actions! The line

यस्यैकांशाज्जगति सकलाः प्राणिनः प्राणवन्तः

in sloka 52 reminds us of the words यया प्राणिनः प्राणवन्तः In the Nandisloka in praise of Siva in Kalidasa's Sakuntala. A sloka like 13,

मयि क्रोशत्येवं सपदि न दयां यद्वितनुषे
निदानं किं तत्र ज्वलनजनिमत्त्वं तु भवतः ।
उताद्रेः कन्यायाः कठिनजठरान्तर्विलुठनं
न वै जाने म्लानेऽसितकुशलयोनेऽल्पघिषणः ॥

is typical of the author's poetry as his devotional fervour. He cries for mercy but gets none. The reason, he fancies, is the lack of coolness to generate compassion because of the element of heat in the deity as a result of His having been born in fire, or the hardness of heart consequnt upon His being within the womb of the daughter of the mountain. But he hastens to state that he really

does not know, he being a man of limited intellect and his deity really a benefactor of the frustrated.

Two observations in the work are particularly interesting. One is in verse 73 that Subrahmanya is the deity at Tirupati शेषाद्रीश्वरमौलिकेलिसदना This is in support of a section of popular opinion, especially in South India, regarding the identity of this god and the view that the original Subrahmanya came to be considered as Vishnu at the instance of the Vaishnavas headed by Ramanujacharya. It may, however, be incidentally noted that the Lord of the Seven Hills is a combination of different elements like Vaishnava, Saiva and Sakteya and the fact remains unexplained why the identity was changed and how it was accepted. The second is in verse 86 and in a few others that Valli, the consort of Subrahmanya, is the daughter of Vishnu. This has its support in some legends.

The commentary Guhapriya, in Tamil by Prof. V.S.V. Guruswamy Sastri, the profound scholar and renowned discourser, brings out the import of every stanza clearly and explains the meanings of obscure words of which the poem has quite a few. The average reader will find it difficult to know that कल्हाराद्रि is Tiruchendur, मन्देहासुरहर means Surya, नासाप्रीणन means flower, लङ्केश is Surapadmasura and त्रियुग stands for the number six. The Upanishadic basis of several statements, as in stanzas 55 and 57, is pointed out, so too the implied idea in many places, as for instance, in verse 81 that all human beings are women and God alone is man. The erudition of the commentator is particularly apparent when he advances as many as fifteen arguments in

favour of the statement in the poem that the Lord of Tirupati is Subrahmanya, when he cites the not-so well-known Valliparinayachampu wherein we get the legend recorded that Valli was born to Vishnu by Lakshmi disguised as a deer when he was performing penance near Kanchipura under the name Sivamuni, and when he points out the bijamantras meant in some of the verses. He has done a useful service.

The sponsors of this publication deserve the gratitude of the astikas in general and the Skandabhaktas in particular, for bringing to light this valuable stotra by a great devotee of Kaliyugavarada with the exposition by an out-standing scholar.

Trivandrum,
30-3-'78

**S. Venkitasubramonia Iyer**

# உரையாசிரியரின் முன்னுரை

பரமசிவன், பராசக்தி, மஹாகணபதி, ஸுப்ரம்ஹண்யன், சூரியன், விஷ்ணு ஆகிய ஆறு தெய்வங்களும் ஸச்சிதானந்தரூபமும் நிர்குணமுமான பரம்பொருளின் ஸகுண வடிவங்களே. இவர்கள் வேறு தெய்வங்களின் துணையின்றியே தனித்தனியே தங்களை வழிபடும் அடியார்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் அளிப்பவர்கள். இவர்களின் பெருமைகள் மறைகளிலும், அறநூல்களிலும், இதிஹாஸ புராணங்களிலும் புகழ்ந்து கூறப்பட்டுள்ளன.

பழம் பெரும் புகழ்மிகு புண்ணிய பாரதத்தில் காச்மீரத்தில் சிவனையும், வங்காளத்தில் பராசக்தியையும், மஹாராஷ்டிரத்தில் மஹாகணபதியையும், குஜராத்தில் சூரியனையும், தென்னாட்டில் சிவபெருமான், அம்பிகை, கணபதி, சுப்பிரமணியன், விஷ்ணு ஆகிய தெய்வங்களையும் வழிபடும் பழக்கம் உலகம் தோன்றிய நாள் முதல் இருந்து வருவதாகும். காலப்போக்கில் மாந்தர்களுக்கு தாங்கள் வழிபடும் தைவத்தின் மீது வைத்துள்ள அபார பக்தியின் காரணமாக, பிற தெய்வங்களை இகழ்ந்து கூறுவதும், அத்தகைய நூல்களை இயற்றுவதுமான கொடிய பழக்கம் வளரலாயிற்று. தைவ வழிபாடு

களிலும் வேதமார்க்கத்திற்கு முரண்பட்டவைக ளான மத்யம் மாம்சம் முதலியவைகளை நிவேத னம் செய்தல் பிராணிகளை உயிருடன் கொலைசெய்து பலியிடுதல் போன்ற துராசாரங்கள் புகுந்து விட் டன.

சுமார் ஆயிரத்திருநூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மஹாபுருஷரான ஸ்ரீ சங்கர பகவத் பாதர் ஆறுமதங்களும் அத்வைத நிலையைப் பெறு வதற்கு உபாயமானவைகள், இவைகளில் ஏற்றத் தாழ்வு இல்லை. எம்மதமும் ஸம்மதமே என்று பறை சாற்றி, சேதுமுதல் காசிவரை கால் நடையாகவே சென்று அம்மதங்களிலும், வழிபாட்டு முறைகளி லும் புகுந்திருந்த அனாசாரங்களையகற்றி வேதவழி யைத்தழுவி வழிபாட்டு முறைகளை அடியார்களுக்கு வகுத்துக் கொடுத்துள்ளார். ஆகையால் பகவத் பாதர் "ஷண்மதஸ்தாபனாசாரியர்" என்று புகழப் படுகிறார்.

## சுப்பிரமணியர் வழிபாடு

சைவம், சாக்தம், ஸௌரம், வைஷ்ணவம், காணபதம், கௌமாரம் என்ற அறுமதங்களுள் சுப்பிரமணியக்கடவுளின் வழிபாட்டுக் கொள்கை கௌமாரம் எனப்படும். தைத்திரீய - ஆரண்யகம் முதல் பிரச்னம் 12-வது அனுவாகத்திலும், ஸ்கந் தோபநிஷத்திலும், சாந்தோக்ய - உபநிஷத்தில் 7-வது பிரபாடகத்திலும் கந்தபெருமானைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

'नमो हिरण्यबाहवे सेनान्ये' ('நமோ ஹிரண்ய பாஹவே ஸேனுன்யே') என்ற முதலாவது நமகானுவாகத்திலுள்ள வாக்கியமானது, "தங்கவேல் தாங்கிய கையுடைய—ஜீவராசிகளின் புலன்களின் கூட்டமான படைகளை நடத்துகின்ற - உள்ளும் புறத்துமிருக்கின்ற பகைவர்களை அறவேயழிக்கும் தலைவனை - கந்தனுக்கு வணக்கம்" என்று அறிவித்துள்ளது.

ஸர்வேச்வரனிடமிருந்து முதலாவதாக தோன்றியது சுப்பிரமணிய மூர்த்தியே என்று 'या ते रुद्र शिवा तनूः' (யா தே ருத்ர சிவா தனூ:) என்ற ருத்திரமந்திரத்திற்கு ஸ்ரீ பட்டபாஸ்கராசாரியார் விளக்கமாக உரை செய்திருக்கிறார். மாமுனி யோக யாஜ்ஞவல்கியர், "आदित्यस्य सदा पूजां तिलकस्वामिनस्तथा। महागणपतेश्चैव कुर्वन् सिद्धिमवाप्नुयात् ॥" (ஆதித்யஸ்ய ஸதா பூஜாம் திலகஸ்வாமினஸ்ததா. மஹாகணபதேஸ்சைவகுர்வன் ஸித்திமவாப்னுயாத்) என்று கூறுகிறார். வேதவழியைத்தழுவி தனது கடமைகள் அனைத்தையும் செய்து முடிப்பதற்கு சக்தியற்றவன் எனினும் ஒருவன் இடையருது சுப்பிரமணியக் கடவுளை வழிபடுகிறவன் விரும்பியவற்றையனைத்தையும் அடைகிறான்.

ஆதிகவி வால்மீகி முனிவர் ஸ்ரீமத் ராமாயணம் பாலகாண்டத்தில் கந்தபெருமானின் திருவவதாரத்தையும் மஹிமையையும் விரிவாக வருணித்திருக்கிறார். மேலும் "कुमारसंभवश्चैव धन्यः पुण्यस्तथैव च। भक्तश्च यः कार्तिकेये काकुत्स्थ भुवि मानवः। आयुष्मान् पुत्रपौत्रैश्च स्कन्दसालोक्यतां व्रजेत् ॥ (குமாரஸம்பவஸ்சைவ தன்ய:

புண்யஸ் தகைதலச | பக்தஸ்சய: கார்த்திகேயே காகுத்ஸ்த புவிமானவ: | ஆயுஷ்மான் புத்ரபௌத்ரைஸ்ச ஸ் கந்தஸாலோக்யதாம் வ்ரஜேத்) 'குமாரக்கடவுளின் பிறப்பைப் படிப்பவர்களுக்கு செல்வம் செழிக்கும். பாவம் அகன்று புண்ணியம் வந்தடையும். குமாரப்பெருமானிடம் பேரன்பு கொண்டவன் மக்களையும் மக்களுக்கு மக்களையும் குறைவின்றியடைந்து முடிவில் கந்தபெருமான் இருக்கும் இடத்தையடைகின்றான்' என்று ஆதிகவி கூறியுள்ளது கவனத்திற்குரியது. அவர் ரகுகுமாரனுக்கு உபமானத்தைக் கூறுமிடத்து 'कुमाराविव पावकी' (குமாராவிவ பாவகி) என்று சிவகுமாரனையே குறிப்பிட்டிருக்கிறார்.

மாமுனி வேதவ்யாஸரும் தனது மஹாபாரதத்தில் போரை வருணிக்கும் ஸந்தர்ப்பங்களில் நிகரற்ற போர் வீரர்களுக்கும் படைத்தலைவர்களுக்கும் முருகப்பெருமானையே உபமானமாகக்கூறியுள்ளார். பத்து நாட்கள் கௌரவ சேனையின் தலைமைதாங்கி போர் புரிந்த மஹாவீரனான பீஷ்மாசாரியன் முருகக்கடவுளை வணங்கி வேண்டிக்கொண்ட பின்னரே படைத்தலைமையை ஏற்றுக் கொள்கிறார்.

"नमस्कृत्य कुमाराय सेनान्ये शक्तिपाणये ।
अहं सेनापतिस्तेऽद्य भविष्यामि न संशयः ॥"
[महाभा. उद्योग. १६५ अध्या: श्लो. ७]

(நமஸ்க்ருத்யகுமாராய ஸேனான்யே சக்திபாணயே
அஹம்ஸேனாபதிஸ்தேsத்யபவிஷ்யாமி நஸம்சய:

மஹாபா-உத்யோகபர்வம், 165 அத், 7 சுலோகம்

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா—படைத்தலைவர்களுள் நான் கந்தப்பெருமானாகிறேன் என்று அர்ஜுனனிடம் கூறுகிறார் "सेनानीनामहं स्कन्दः" (ஸேனானீனாமஹம் ஸ்கந்த:) [महाभा–भीष्म–१०]

திருதராஷ்டரர் ஸஞ்ஜயனிடம், विक्रीडितं कुमारस्य स्कन्दस्येवासुरैः सह ।" ',[महाभा द्रो–३९]

(விக்ரீடிதம் குமாரஸ்ய ஸ்கந்தஸ்யே வாஸுரை: ஸஹ)

அஸுரர்களுடன் கந்தப்பெருமான் போன்று கௌரவர்களுடன் போர்புரிந்த அபிமன்யுவின் வரலாற்றை விளக்குவாயாக என்று கேட்கிறார்.

துரியோதனன், தேவர்களின் படைக்கு முன்னதாக கந்தபெருமான் செல்வது போல தாங்கள் எனதுபடைக்குமுன் செல்லவேண்டுமென்று துரோணாசாரியனிடம் வேண்டிக்கொள்கின்றான்—

"प्रयातु नो भवानग्रे देवानामिवपावकिः"

(ப்ரயாதுநோ பவானக்ரே தேவானாமிவ பாவகி:)

கடோத்கசன் அச்வத்தமாவிடம், "கந்தப்பெருமான் கிரௌஞ்சாஸுரனைக் கொன்றதுபோல நான் உன்னை இப்பொழுது கொல்வேன்." என்று கூறுகிறான். "त्वामद्य निहनिष्यामि क्रौञ्चमग्निसुतो यथा ।" (த்வாமத்ய நிஹனிஷ்யாமி க்ரௌஞ்சம் அக்னிஸுதோ யதா).

ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுனனிடம் 'போர்க்களத்தில் சக்தியாயுதத்தைத் தாங்கி நிற்கும் கந்தப் பெருமானைப் போன்று சக்தியைக் கையில் ஏந்தி கடோத்கசனைக் கொன்று வெற்றியுடன் விளங்கும் கர்ணனைப் பற்றி புகழ்ந்து கூறுகிறார்.

"शक्तिहस्तं पुन: कर्णं को लोकेऽस्ति पुमानिह ।
य एवमभितस्तिष्ठेत् कार्त्तिकेयमिवाहवे ।।"

(சக்திஹஸ்தம் புன: கர்ணம் கோலோகேஸ்தி
புமானிஹ
ய ஏவமபிதஸ்திஷ்டேத் கார்த்திகேய
மிவாஹவே)

கர்ணன் துரியோதனனிடம்: — "கந்தப்பெருமான் இந்திரனுக்கு எங்ஙனம் வெற்றியை யளித்தாரோ அங்ஙனமே உனக்கு நான் வெற்றியை அளிக்கப்போகிறேன்" என்று மொழிந்துள்ளான்.

"जयं ते प्रतिदास्यामि वासवस्येव पावकि:" ।

(ஜயம் தே ப்ரதிதாஸ்யாமி வாஸவஸ்யேவ
பாவகி:)

அர்ச்சுனன் கடோத்கசனிடம் 'இந்திரன் கந்தனின் துணையோடு தாரகனை வென்றதுபோல ஸாத்வதன் என்ற யாதவனின் துணையுடன் கர்ணனைக் கொல்வாயாக! என்று உற்சாகமூட்டுகிறான்.

"जहि कर्णं रणे शूरं सात्वतेन सहायवान् ।
यथेन्द्रस्तारकं पूर्वं स्कन्देन सह जघ्निवान् ।।"

(ஜஹி கர்ணம் ரணே சூரம் ஸாத்வதேன
ஸஹாயவான்
யதேந்த்ரஸ்தாரகம் பூர்வம் ஸ்கந்தேன ஸஹ
ஜக்னிவான்)

துரியோதனன் தன் மாமனிடம், "கந்தபெருமான் அசுரர்களைக் கொன்றதுபோல் குந்தியின் பிள்ளைகளைத் தாங்கள் கொல்லவேண்டும்" என்று கூறுகிறான்.

"जहि मातुल कौन्तेयानसुरानिव पावकि:" (ஜஹி மாதுல கௌந்தேயானஸுரானிவ பாவகி:)

ஸஞ்சயன் திருதராஷ்டிரரிடம் கூறுமிடத்து "கந்தப்பெருமானால் மஹிஷாஸுரனும், பரமசிவனால் அந்தகாஸுரனும் கொல்லப்பட்டதுபோல அர்ச்சுனனால் கர்ணன் கொல்லப்பட்டான்" என்று குறிப்பிடுகிறார்:–

"यथा स्कन्देन महिषः यथा रुद्रेण चान्धकः ।
तथार्जुनेन स हतो द्वैरथे युद्धदुर्मदः ॥

(யதாஸ்கந்தேன மஹிஷ: யதாருத்ரேண
சாந்தக:
ததார்ஜுனேன ஸ ஹதோ த்வைரதே யுத்த
துர்மத:)

அவ்விதமே "முன்னொரு காலம் கந்தப்பெருமான் கிரௌஞ்சம் என்ற மலையை அம்புகளால்

பிளர்ந்து எறிந்தது போல அர்ஜுனன் கர்ணனை அம்புகளால் அடித்தான்” என்று கூறுகிறார்:—

'ततोऽर्जुनः कर्णमवक्रगैर्नवैः पुराऽभिनत् क्रौञ्चमिवाद्रिमग्निजः।"

(ததோऽர்ஜுன: கர்ணமவக்ரகைர் நவை: புராऽபினத் க்ரௌஞ்சமி வாத்ரிமக்னிஜ: )

ஸஞ்ஜயன் திருதராஷ்டிர மஹாராஜாவிடம் கூறுகிறார்— “வானவர்கள் கந்தப் பெருமானுக்கு படைத்தலைமையை யளித்துக் கௌரவித்ததுபோல உமது புதல்வர்களும் கர்ணனுக்கு அத்தகைய அபிஷேகத்தை முறைப்படி செய்தனர்”.

[सैनापत्येन सत्कर्तुं कर्णं स्कन्दमिवामराः।
ततोऽभिषिषिचुः कर्णं विधिदृष्टेन कर्मणा ॥
तव पुत्रैर्वृतः कर्णः शुशुभे तत्र भारत।
देवैरिव यथा स्कन्दः संग्रामे तारकामये ॥

ஸைனாபத்யேன ஸத்கர்த்தும் கர்ணம் ஸ்கந்த மிவாமரா:
ததோऽபிஷிஷிசு: கர்ணம் விதித்ருஷ்டேன கர்மணா
தவ புத்ரைர்வ்ருத: கர்ண: சுசுபே தத்ரபாரத
தேவைரிவ யதாஸ்கந்த: ஸங்க்ராமே தாரகாமயே)

சல்யராஜனைக் குறித்து துரியோதனன் “ஒரு பொழுதும் தோல்வியடையாத கந்தப்பெருமானை

யடைந்து தேவர்கள் வெற்றியடைந்தது போல நானும் வெற்றிபெறவேண்டும். எனவே எனது படையில் தாங்கள் தலைவனாக இருக்க வேண்டும்." இப்பொழுதே அபிஷேகம் செய்து கொள்ளுங்கள்" என்று கூறுகின்றான்.

(शक्य: प्राप्तुं जयोऽस्माभि र्देवै: स्कन्दमिवाजितम् ।
सोऽस्मान् पाहि युधां श्रेष्ठ स्कन्दो देवानिवाहवे ।।
अभिषिञ्चस्व राजेन्द्र देवानामिव पावकि: ।।"

சக்ய:ப்ராப்தும் ஜயோऽஸ்மாபிர் தேவை:
ஸ்கந்தமிவாஜிதம்
ஸோऽஸ்மான் பாஹியுதாம்ச்ரேஷ்டஸ்கந்தோ
தேவானிவாஹவே.
அபிஷிஞ்சஸ்வ ராஜேந்த்ர தேவானாமிவ
பாவகி:)

ஸஞ்ஜயன் திருதராஷ்டிரனிடம், கந்தபெருமானால் நாசம் செய்யப்பட்ட கிரௌஞ்சமலை போன்று தர்மபுத்திரரால் அடிக்கப்பட்ட சல்யன் ரக்தம் நனைந்த உடலுடையவனானான். என்று தெரிவிக்கிறார்

(संसिक्त गात्रो रुधिरेण सोऽभूत् क्रौञ्चो यथा स्कन्दहतो
महाद्रि: ।

ஸம்ஸிக்தகாத்ரோருதிரேண ஸோऽபூத்
க்ரௌஞ்சோயதா ஸ்கந்தஹதோ மஹாத்ரி:)

காந்தாரி கண்ணனிடம் போர்க்களித்தில் சர சயனத்தில் படுத்திருக்கும் புலன்களையடக்கிய புண்ணியவானான பீஷ்மாசாரியனைக் காண்பித்து

"கண்ணு, நாணற்காட்டில் பூஜிக்கத்தகுந்த கந்தப், பெருமான் படுத்திருப்பதுபோல சரப்படுக்கையில் பீஷ்மர் சயனித்திருக்கிறார். காண்பாயாக" என்று சொல்லுகிறாள்.

(शरतल्प गतं भीष्म मूर्ध्वरेतसमच्युतम् ।
शयानं वीरशयने पश्य शूरनिषेविते ॥
कर्णिनालीक नाराचै रास्तीर्य शयनोत्तमम् ।
आविश्य शेते भगवान् स्कन्दः शरवणं यथा ॥

சரதல்பகதம் பீஷ்ம மூர்த்வரேதஸமச்யுதம்
சயானம் வீரசயனே பச்ய சூர நிஷேவிதே
கர்ணி நாளீக நாராசை ராஸ்தீர்ய சயனோத்தமம்
ஆவிச்ய சேதே பகவான் ஸ்கந்த: சரவணம் யதா)

மேலும் ஸபாபர்வம் 4 முதல் 11 அத்தியாயங்களும், வனபர்வம் 225—233 வரை 9 அத்தியாயங்களும் சல்ய பர்வம் 44 முதல் மூன்று அத்தியாயங்களும், சாந்திபர்வம் 200—வது அத்தியாயமும் சுப்பிரமணியப் பெருமானுடைய மகிமையை விரிவாக வருணிக்கின்றன.

இங்ஙனமே மஹாபுராணங்களிலும் கந்தப்பெருமானின் பெருமை வருணிக்கப்பட்டுள்ளது. பிராஹ்மபுராணம் பூர்வபாகம் 32 முதல் 38 வரை ஏழு அத்தியாயங்களும், பாத்ம புராணம் 37 முதல் 41 வரை ஐந்து அத்தியாயங்களும், சிவபுராணம்—ஞான ஸம்ஹிதையில் 7 முதல் 19 வரை பதிமூன்று

அத்தியாயங்களும், கைலாஸஸம்ஹிதையில் 7,8 இரண்டு அத்தியாயங்களும் வாயவீயஸம்ஹிதையில் 16 முதல் 20 வரை ஐந்து அத்தியாயங்களும், பாகவதபுராணம் 10-வது ஸ்கந்தம் அறுபத்துமூன்றுவது அத்தியாயமும் லிங்கபுராணம் 93 முதல் 105 வரை ஏழு அத்தியாயங்களும், வாமனபுராணம் 51 முதல் 58 வரை எட்டு அத்தியாயங்களும், மத்ஸ்ய புராணம் 146 முதல் 160 வரை பதினைந்து அத்தியாயங்களும் காருட புராணம் முதல்கண்டம் ஐந்தாவது அத்தியாயமும், கூர்மபுராணத்தில் 11 முதல் 16 வரை ஆறு அத்தியாயங்களும் பிரம்ஹாண்ட புராணம் உபோத்காத பாதத்தில் பத்தாவது அத்தியாயமும், ஸ்காந்த மஹா புராணம் கேதார கௌமாரிகா, நாகர கண்டங்களில் முப்பத்திமூன்று அத்தியாயங்களும் குமாரக்கடவுளின் அனந்தகல்யாண குணங்களை வருணிக்கின்றன.

லக்ஷம் சுலோகங்கள் கொண்ட ஸ்காந்த—உப புராணம், ஸௌர உப புராணம், விஷ்ணுதர்மோத்தரம், மஹாபாகவதம் இவைகளிலும் கௌமாரம் முதலிய தந்திர நூல்களிலும், ஸ்மிருதிகௌஸ்துபம், காலஹேமாத்ரி, ஸ்ம்ருதிமுக்தாபலம் ஆகிய தர்மசாஸ்திரங்களிலும் கந்தனின் பெருமை விளக்கப்பட்டுள்ளது. மஹாகவி காளிதாஸரும் குமாரக் கடவுளின் பிறப்பை “குமாரஸம்பவம்” என்ற மஹா காவியமாகப் பாடியிருக்கிறார்.

ஸ்ரீ சங்கரபகவத் பாதர் செந்தில் ஆண்டவனை தரிசித்து “சுப்ரமண்ய புஜங்கம்” என்ற அரிய

துதிநூலை இயற்றியுள்ளார். அவர் இயற்றியுள்ள பிரம்ஹஸூத்திர பாஷ்யத்தில் மூன்றுவது அதியாயம் 3-வது பாதம் 19-வது அதிகரணம் 32வது சூத்திரத்தின் உரையில், "सनत्कुमारोऽपि ब्रह्मण एव मानस: पुत्र: स्वयं रुद्राय वरप्रदानात् स्कन्दत्वेन प्रादुर्बभूव" ஸனத்குமரோபி ப்ரஹ்மண ஏவமானஸ: புத்ர: ஸ்வயம் ருத்ராய வரப்ரதாணுத்ஸ்கந்தத்வேன ப்ராதுர்பபூவ" (பிரம்மாவின் மானஸபுத்திரனுன ஸனத்குமாரர் தான் சிவபெருமானுக்கு புதல்வனுகத் தோன்றுவதாக வரமளித்து அவ்விதமே ஸ்கந்தராகத் தோன்றினுர்.) என்று கூறுகிருர்கள். நாரதருக்கு பிரம்ஹோபதேசம் செய்த ஸனத்குமாரரை ஸ்கந்தர் என்று கூறுகிருர்கள். "तं स्कन्द इत्याचक्षते" (தம்ஸ்கந்த இத்யாசக்ஷதே) என்று சாந்தோக்ய உபநிஷத்து ஏழாவது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆறெழுத்து சுப்ரம்ஹண்ய மந்திரத்தைக் கண்டுபிடித்த காரணத்தால் ஸனத்குமாரர் அம்மந்திரத்தின் ரிஷியாகக் கூறப்படுகிருர். இவையனைத்தும் குஹப்பெருமானின் இணையற்ற பெருமையை எடுத்துக் காட்டுகிறது.

ஸங்கீதமும்மூர்த்திகளுள் ஒருவரான ஸ்ரீ முத்துஸ்வாமிதீக்ஷிதர் முருகக் கடவுளின் பேரில் "श्री सुब्रह्मण्य आगच्छ, अग्रगण्य; श्री सच्चिदानन्द नादवरेण्य',

"ஸ்ரீ ஸுப்ரம்ஹண்யாகச்ச, அக்ரகண்ய
ஸ்ரீ ஸச்சிதானந்த நாத வரேண்ய"।

"श्री सुब्रह्मण्याय नमस्ते"

" ஸ்ரீ ஸுப்ரம்ஹண்யாய நமஸ்தே" முதலிய

கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். ஸ்ரீ ஸ்வாதி திரு நாள் மஹாராஜா அவர்களும்"देव मामयि पाहि षडानन" (தேவ மாமயி பாஹி ஷடானன) என்று கந்தனைப் பாடியுள்ளார். தவிர ஸ்வாமி தீக்ஷிதர் என்ற பெரியார் கந்தபெருமானைக் குறித்து "வள்ளீபரிணய சம்பூ" என்று ஒரு வடமொழி நூலை இயற்றியுள்ளார்கள். அங்ஙனமே அழகிய தமிழ்மொழியிலும் திருப்புகழ், கந்தர் அலங்காரம், அனுபூதி, திரு வகுப்பு, திருமுருகாற்றுப்படை முதலிய எண்ணிறந்த நூல்கள் முருகனின் பெருமையைப் புகட்டுகின்றன.

## ஸ்ரீ கோபாலகிருஷ்ண கவி

'ஸுரபுஷ்பமாலை' என்ற மற்றொரு பெயர் கொண்ட ஸ்ரீ ஸுப்ரம்ஹண்ய கர்ணாம்ருதத்தை இயற்றிய ஸ்ரீ கோபாலகிருஷ்ணகவி மஹாபாஷ்யம் கோபால சாஸ்திரிகள் என்று புகழ்பெற்று விளங்கியவர். கி. பி. 17-வது நூற்றாண்டின் முற்பகுதியில், சோழநாட்டில் திருச்சிறுப்பள்ளி மாவட்டத்தில் காவேரிக்கரையிலுள்ள பிக்ஷாண்டார் கோவில் என்ற கிராமத்தில் அந்தணர் குலத்திலுதித்தவர் இளமையில் வேத-வேதாங்கங்களைக் கற்றுணர்ந்து, வியாகரண சாஸ்திரத்தில் நிகரற்ற புலமையைப் பெற்றார். ஜீவன் முக்தரான ஸதாசிவப் பிரம்ஹேந்திரர், ஜானகீபரிணயம் முதலிய காவியங்களை இயற்றிய மஹாகவி ராமபத்ரதீக்ஷிதர், பாகவதோத்தமரான ஸ்ரீ வெங்கிடேசுவரர் எனப்படும் "அய்யாவாள்" ஆகிய மூன்று பெரியார்களும்

கோபாலகிருஷ்ண கவியின் ஸஹமாணுக்கர்கள் ஆவார்கள்.

ஒரு சமயம் புதுக்கோட்டை ராஜ்யத்துள்ள திருவரங்குளம் கிராமத்திற்குப் பக்கத்திலுள்ள காட்டில் ஸதாசிவேந்திர பிரம்ஹேந்திராள் ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்தார்கள். புதுக்கோட்டை மன்னனை விஜயரகுநாத தொண்டமான் பிரம்ஹேந்திரரை வணங்கி தொடர்ந்து எட்டு வருட காலமாக வழிபட்டு வந்தான். அவனிடம் கருணைகொண்டு ஸ்ரீ பிரம்ஹேந்திரர் மணலில் விரலால் எழுதி அரசனுக்கு வேண்டிய உபதேசங்களை அருளி, "மீதமுள்ளவைகளை கோபாலகிருஷ்ண சாஸ்கிரிகளிடமிருந்து தெரிந்துகொள்" என்று கூறி மறைந்து விட்டார். பின்னர் அரசன் பிரம்ஹேந்திரரின் கைவிரல்பட்ட மணலை பக்தியுடன் பொற்பேடகத்தில் எடுத்துவைத்துக் கொண்டார். பிரம்ஹேந்திரரின் கட்டளைப்படி பிக்ஷாண்டார் கோவிலிற்சென்று சாஸ்திரிகளை வணங்கி தனக்கு குருவாக வேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்கிசைந்து அரசனின் குருஸ்தானம் வகித்தார். மன்னன் சாஸ்திரிகளை புதுக்கோட்டைக்கு அழைத்துச் சென்று அவருக்கு ஒரு கிராமத்தை மானியமாக அளித்துள்ளான். சாரதா நவராத்திரி காலத்தில் தக்ஷிணாமூர்த்திக்கும் பிரம்ஹேந்திராளின் கைவிரல் பட்ட மணலுக்கும் விசேஷ பூஜை செய்து, பின்னர் சாஸ்திரிகளுடைய தலைமையில் பல ஆண்டுகள் வித்துவத்சபையை நடத்திவந்தான். பிற்காலத்தில் வியாகரண பண்டிதர்களாக விளங்கிய சிதம்பரம்

ஸ்ரீ தண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதர், காளிரங்காசாரியார் முதலியோர்கள் ஸ்ரீ சாஸ்திரிகளுடைய சிஷ்ய பரம்பரையில் உள்பட்டவர்களே. ஸ்ரீ சாஸ்திரிகள் குஹப் பெருமானின் பரிபூரண கிருபைக்குப் பாத்திரமானவர்கள். அடியார்களுக்கு முருகனின் கிருபையை ஏற்படுத்துவதற்கென்றே "ஸுரபுஷ்ப மாலை'யென்ற சுப்பிரமணிய கர்ணாம்ருத ஸ்தோத்திரத்தை இயற்றியுள்ளார்கள்.

## ஸ்ரீ சுப்பிரமணிய கர்ணாம்ருதம்

அழகு பொருந்திய வடமொழிச் செய்யுட்களால் முருகனைப் புகழ்ந்து கூறுகின்ற நூலே "ஸுப்ரம்ஹண்ய கர்ணாம்ருதம்" என வழங்கப் படுகிறது. இதில் நூற்றிப்பதினாறு செய்யுட்கள் உள. மூன்றாவது செய்யுளில் "कथापीयूषं ते" (கதாபீயூஷம்தே) என்று கவி கூறுவதால் இதற்கு சுப்ரம்ஹண்ய கர்ணாம்ருதம் என்று பெயர் ஏற்பட்டது. நூற்றிப் பதினாறாவது சுலோகத்தில் "गोपालकृष्ण कविवाक्सुरपुष्पमाला" (கோபாலகிருஷ்ண கவி வாக்ஸுர புஷ்ப மாலா) என்று கவி கூறுவதால் சுரபுஷ்ப மாலையென்ற மற்றொரு பெயரும் ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர் இந்நூலில் முதலாவது செய்யுளில் 'குகப் பெருமான் நமக்கு மங்களத்தை அளிக்கட்டும்" என்று தனது நூலுக்கு மங்களம் செய்துள்ளார். இரண்டாவது செய்யுளில் "வேதங்களாலேயே பூரணமாக துதிக்க முடியாத குஹனை எங்ஙனம் துதிப்பது என அச்சமிருப்பினும், துதிக்கப்

போகிறேன்" என தனது உத்தேசத்தை அறிவிக்கிறார். மூன்றாவது செய்யுள் முதல் முப்பதாவது செய்யுள் முடிய 28 செய்யுட்களால் குஹனின் பல விதமான பெருமைகளை எடுத்துக்காட்டி தன்குறைகளை நீக்கும்படி குகனைத் துதிக்கின்றார். 31 முதல் 50 முடிய இருபது செய்யுட்களில் குஹபெருமானைக் குறிக்கும் சொல்லை பிரதமை முதல் ஸப்தமி வரை அனைத்து வேற்றுமைகளிலும் அமைத்து குகனை துதிக்கின்றார் 51 முதல் 70 முடிய இருபது செய்யுட்களால் மந்திரசாஸ்திரமுறைப்படி முருகனைத்துதித்து ஒவ்வொரு செய்யுளின் நான்காவது அடியில் "प्रेमासारः परमशिवयोरस्तु नस्तापशान्त्यै" (ப்ரேமாஸார: பரமசிவயோரஸ்து நஸ்தாப சாந்த்யை) பார்வதீ பரமேஸ்வரர்களின் ஆனந்தப்பெருக்கான குஹப் பெருமான் நமது துன்பங்களைத்தீர்த்து வைக்கட்டும் என்று பிரார்த்திக்கின்றார். 71 முதல் 101 முடிய 31 செய்யுட்களில் அஷ்டாக்ஷாப்ராஸம் என்ற சொல்லலங்காரத்தை அமைத்திருக்கின்றார். 102 முதல் 115 முடிய பதினான்கு செய்யுட்களால் கவி தன்னை, பாபி, துஷ்டன், ஏழை என்ற காரணத்தால் தவிர்க்கமுடியாதபடி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்குரிய காரணங்களைக் காட்டி தன்னைக் காப்பாற்ற வேண்டுகிறார். 116-வது செய்யுளில் கந்தனின் கல்யாணகுணங்களைக் கூறும் இந்நூலை ஸாதுக்கள் படித்து ஸந்தோஷமடையக் கேட்டுக் கொள்கிறார். ஸ்ரீ கோபாலகிருஷ்ணகவி 43-வது செய்யுளில் திருச்செந்தூரையும், 73-வது செய்யுளில் திருப்பதியையும், 106-வது செய்யுளில் பழனியையும் 110-வது

செய்யுளில் திருத்தணியையும் குஹப்பெருமானின் திருவிளையாடல்களுக்கு இருப்பிடமாகக் குறிப்பிட்டுள்ளார். திருப்பதி சுப்பிரமணிய க்ஷேத்திரம் என்ற கவியின் கருத்திற்குரிய காரணங்களை அவரதுசிஷ்ய பரம்பரையின் வாயிலாக அறிந்தவாறு 73-வது செய்யுளின் உரையில் காண்க.

இந்நூலானது கிரந்தலிபியில் மூலம் மாத்திரம் சாஸ்திரஸஞ்ஜீவனி அச்சகத்தில் அச்சிடப்பட்டு கி.பி. 1912–வது ஆண்டில் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. பின்னர் கி.பி. 1964-வது ஆண்டில் தேவநாகரலிபியில் மூலம் மாத்திரமாக ஸ்ரீரங்கத்தில் அச்சிடப்பட்டு பிரம்ஹ ஸ்ரீ P.S. ராமசர்மா அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் தமிழுரையுடன் வெளியிடப்படுவது இதுவே முதல்தடவையாகும். இதனை எழுதுகின்ற காலத்தில் அன்புடனும் பக்தியுடனும் எழுதியும் ஒத்து நோக்கியும் பெரிதும் உதவிய திரு. S. ராஜகோபாலன் M.Sc. திரு S. ராஜகோபாலன் M.A., திரு. G. வைத்தியநாதன் B. Arch. ஆகியவர்களுக்கு குமரக்கடவுளின் நல்லருள் மென் மேலும் கிட்டுவதாக. இந்நூலை நல்லமுறையில் அச்சிடுவதற்கு வேண்டிய ப்ரூப் திருத்தங்கள், பரிசோதனை முதலிய மிக அவசியமான உதவிகள் செய்த சிரோமணி ஸ்ரீ S. கணேசசர்மா M.A.; B.Ed., (Rtd. D.E.O, Kerala State) அவர்களுக்கும் எல்லாவித நலன்களையும் குஹப்பெருமான் அருள்வாராக.

தோவாளை அழகிய கன்னி விநாயகர் கோயில் தர்மஸ்தாபனத்திலிருந்து இந்நூலை தமிழ் உரையுடன் அச்சிட்டு வெளியிடுவதற்கு முன்வந்த திரு. A. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. திரு. A. சுப்பிரமணிய பிள்ளைக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் ஸகல நலன்களையும் முருகக்கடவுள் அருள்வாராக.

இந்நூலின் தமிழ் உரையில் காணப்படும் குணங்கள்யாவும் எனது குருநாதனின் அருளால் தோன்றியவையாகும். குறைபாடுகள் காணப்படின் அவையனைத்தும் அடியேனைச் சார்ந்தவைகளே. சமய உலகமும் அறிஞர் உலகமும் இவ்வுரையை ஏற்று குற்றங்களை அடியேனுக்கு அறிவித்தும் குணங்களைப் பாராட்டியும் ஊக்கம் தந்தருளுமாக.

இங்ஙனம்,

வ; ச. வை. குருஸ்வாமி சாஸ்திரி

திருவனந்தபுரம்
8-3-1978.

श्री:

ஓம்

# श्री सुब्रह्मण्य कर्णामृतम्

[सुरपुष्पमालास्तोत्रापरपर्यायम्]

गोपालकृष्णकवि विरचितम्

गुरुस्वामि शास्त्रिकृतया गुहप्रियाख्यया
द्राविडभाषामय्या व्याख्यया समेतम् ।

ஸுரபுஷ்பமாலை எனப்படும்

# ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய கர்ணாம்ருதம்

ஸ்ரீ கோபாலகிருஷ்ண கவி அவர்களால்
இயற்றப்பெற்றது.

குருஸ்வாமி சாஸ்திரிகளால் இயற்றபெற்ற
குஹப்ரியை எனப்படும் தமிழுரையுடன் கூடினது.

१. शिवं नश्शर्वाणीस्तन जनित मन्दोष्ण मधुरं
पयः षड्भिर्वक्त्रै रुपचितकपोलैरपि पिबन् ।
हसन्हर्यश्वादींश्चिरभवसुधालब्धधिषणान्
कुमारः पूर्वेषां कलयतु गुरूणामपि गुरुः ॥

சிவம் நச்சர்வாணீஸ்தநஜனிதமந்தோஷ்ண
மதுரம்

பய: ஷட்பிர்வக்த்ரைருபசித கபோலைரபி பிபன்

ஹஸந்ஹர்யச்வாதீம்ச்சிரபவ ஸுதாலப்ததி-
ஷணன்

குமார: பூர்வேஷாம் கலயது குருணமபி குரு:

[குஹப்ரியை எனப்படும் தமிழுரை ஆசிரியருடைய முன்னுரை]

वल्लभावल्लभं शिष्टसुलभं दुष्टदुर्लभम् ।
कलभाननमानन्द कन्दं वन्दे महन्महः ॥
नम्रानुकम्पमुद्दीप्रं वस्तु शम्पा सहस्रवत् ।
पञ्चास्य प्रियमश्चामः काञ्चीसञ्चारि किञ्चन ॥
ओङ्काररूपिणं वन्दे गुहं सर्वगुहाशयम् ।
वल्ली, शक्रसुता नाथं स्वामिनाथं मुहुर्मुहुः ॥
धर्माम्बिका - वैद्यनाथ - वैद्यनाथ बुधोत्तमान् ।
जननी - जनकाचार्यान् प्रणमामि दिवंगतान् ॥
नवसाल पुराधीश देशिकं शाब्दिकोत्तमम् ।
सदाशिवब्रह्मनिष्ठसतीर्थ्यं स्कन्द सेवकम् ॥
कर्तारं गुह कलयाण गुणकर्णामृतस्य च ।
गोपालकृष्णनामानं कविराजं नमाम्यहम् ॥
कर्णामृतस्य हृद्यस्य शब्दैरर्थैरलङ्कृतैः ।
गुहप्रियाख्यया कुर्वेऽहं व्याख्यां द्राविडवाङ्मयीम् ॥

[மஹாகணபதி, காமாக்ஷீதேவி, குஹக்கடவுள் எனது தாய், தந்தை, குருநாதன், இவர்களை முதலில் வணங்குகிறேன். பின்னர், புதுக்கோட்டை மஹாராஜாவின் குரு, வியாகரணசாஸ்திரத்தை

அறிந்தவர்களுள் சிறந்தவர், ஸதாசிவ பிரும்மேந்திரருடன்கூட வித்யாப்யாஸம் செய்தவர் கந்த பெருமானுடைய சிறந்த பக்தன் ஸுப்ரம்ஹண்ய கர்ணாம்ருதத்தை இயற்றியவர், சிறந்த கவி, கோபாலகிருஷ்ணன் என்ற திருநாமம் பூண்டவர் அத்தகைய மஹானை வணங்குகிறேன்.

அழகிய சொற்களாலும், பொருட்களாலும் மனதைக் கவருகின்ற ஸுப்ரம்ஹண்ய கர்ணாமிருதத்திற்கு—குஹப்ரியை என்ற பெயர் பூண்ட தமிழுரையைச் செய்கின்றேன்]

பரமசிவன் முதலிய பழம் பெரும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியராகத் திகழும் சுப்பிரமணயக் கடவுள் பெரும் பேராசிரியராவான். இனிமையும், இளஞ் சூடும் கொண்ட உமையவளின் முலைப்பாலைத் தன் ஆறுமுகங்களாலும் அருந்தும் அழகன் அவன். பல்லாண்டுகளுக்கு முன்பு தோன்றிய பழைய அமுதத்தில், புளித்த அமுதத்தில் ஆசை வைத்திருக்கும் இந்திரன் முதலிய தேவர்களைப் பரிஹாஸம் செய்யும் பரமன் அவன். இத்தகு இறைவன் நமக்கு எல்லாவிதமான மங்களங்களையும் தந்தருளட்டும்.

२. विलज्जन्तामज्ञाः पुरहरकुमारस्तुति विधौ
न जिह्रीमश्चास्मिन्नपि बहु बिभीमः कथमपि ।
पुराणी वाण्येतत्सविधसरणक्लान्त चरणा
मुहुः सुब्रह्मण्योमिति न किमवादीत्प्लुतयुतम् ॥

விலஜ்ஜந்தாமஜ்ஞா: புரஹர குமார ஸ்துதி
விதைள
ந ஜிஹ்ரீமச்சாஸ்மிந் நபி பஹூ பி பீம:
கதமபி ।
புராணீ வாண்யே தத் ஸவித ஸரண
க்லாந்த சரணு
முஹூ: ஸுப்ரஹ்மண்யோமிதி நகி
மவாதீத்ப்லுதயுதம் ॥

"புன்சிரிப் பொன்றினல் திரிபுரத்தை எரித்த விரிசடைக் கடவுளின் திருக்குமரன் பாலசுப்பிர மணியனை நாங்கள் வாயினுற் பாடி மனத்தினுற் சிந்திக்கப் போகின்ரேம். இப்பெருமானின் பெரு மையை அறியாத நாத்திகர்கள் அவனைத் துதிக்காம லிருக்கட்டும். அவர்கள் வாயிருந்தும் ஊமைகளா வர். முருகனைத் தோத்திரம் செய்ய முன் வந்திருக் கும் எங்களுக்கோர் தயக்கம் ஏற்படுகிறது. அவன் புகழ் பாடுதற்குரிய ஆற்றல் எங்களிடம் உள்ளதா என்று அஞ்சி நிற்கின்ரேம். வேத தேவதை "ருத்திரத்தால் சிவனையும் "புருஷ ஸூக்தத்தால் திருமாலையும் சிறந்த முறையில் தோத்திரம் செய் துள்ளாள். அத் தேவதையாலேயே ஆறுமுகக் கடவுளை அணுக இயலவில்லை. அரும்பாடுபட்டு உரத்த குரலில் மும்முறை "ஸுப்ரஹமண்யோம்" எனக் கூடியழைத்துள்ளாள். எனவேதான் எங்க ளால் முருகக்கடவுளை எங்ஙனம்துதித்துப் பாட இயலும் என அஞ்சுகிரேம்.

புருஷஸூக்தத்தில் வரும் "वेदाहमेतं पुरुषं महान्तं" வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்" எனும்அடி களைக் காண்க. இந்தப்பெருமானை (ஸ்ரீ மந் நாராய

ணனை) நான் அறிவேன்" என்று வேததேவதை கூறுகிறுள். नमस्ते रुद्र मन्यव उतोत इषवे नमः । नमस्ते अस्तु धन्वने बाहुभ्यामुत ते नमः ॥ "நமஸ்தே ருத்ர மந்யவ உதோத இஷவே நம: । நமஸ்தே அஸ்து தன்வனே பாஹுப்யாமுத தே நம: । எனும் மந்திரம் ருத்ரத்தில் அமைந்துள்ளது "ருத்ரப்பெருமானே! உமது சினத்திற்கு வணக்கம். உமது வில்லிற்கு வணக்கம். உமது அம்புக்கு வணக்கம் உமதுகைகளுக்கு வணக்கம்" என்று சிவபெருமானுக்கு வேததேவதை பல வணக்கங்களை சொல்கின்றுள். ஆற்றல் வாய்ந்த மறைக்கடவுளாலேயே முருகனின் தன்மை குறித்து எதும்கூற இயலவில்லை. வெகு தொலைவில் நிற்கும் ஒருவன் மற்ெருருவனைக் கூவியழைப்பது போன்று உரத்த குரலில் முருகன் பெயரை மட்டும் மும்முறை கூறி அழைக்கின்றுள். முருகனின் எல்லையில்லாச் சிறப்புக்களை வேத தேவதையால்கூடச் சொல்ல முடியவில்லை.

३. कथापीयूषं तेऽसदृशरसमातृप्ति पिबताम्
सतां स्तोकास्वादा शरभवमुधा नूतनसुधा ।
जनश्रुत्यामेवं परिवृतजगत्यां च बहुधा
प्रवर्तेरन् के वा न तव विततेऽपि स्तवपथे ॥

கதாபீயூஷம் தே஽ஸத்ருசரஸ மாத்ருப்தி பிபதாம்
ஸதாம் ஸ்தோகாஸ்வாதா சரபவ முதா நூதன ஸுதா ।
ஜனச்ருத்யாமேவம் ப்ரிவ்ருத ஜகத்யாம் ச பஹுதா

ப்ரவர்தேரன் கே வா ந தவ விததேSபி
ஸ்தவபதே ||

தேவகங்கையில் நாணற்காட்டில் தோன்றிய 'அரும்பெரும் ஜோதியே! சுப்பிரமணியனே! உங்கள் திருக்கதை அமுதம் இனிமையின் பேரெல்லையன் றோ! அவ்வமுதத்தைப்பருகும் நற்பேறு பெற்ற அடியார்கள் வானமுதத்தைவிட தங்கள் கதை அமுதம் சிறப்பாக இருக்கின்றது என்கின்றனர். பாற் கடலிலிருந்து தோன்றிய அமுது சுவை குறைந்தது என்றும், தரம் குறைந்தது என்றும் இயம்புகின்ற னர் இவ்வுண்மை இவ்வுலகெங்கும் பரவி விட்டது. மக்கள்எல்லோரும் உங்கள் சரித மாண்பினை சொல்லி; மகிழ்கின்ற. றர்.

னும் அன்னமும் பறக்கும் வானில் காக்கை குருவி களும் பறந்து செல்வதில்லையா? அதுபோல் வியா ஸர் முதலியோர் பாடி புகழ்ந்துள்ள குகப்பெரு மானை நானும் பாடப் போகிறேன்.

இச் செய்யுளில் 'கதாபீயூஷம்' கதாபீயூஷம் என்ற சொல்லைப் பிரயோகித்திருப்பதனாலேயே இந்த ஸ்தோத்திரம் 'கர்ணாம்ருதம்' என்று வழங்கப் படுகிறது என்று ஊகிக்க வேண்டியிருககிறது.

வியாஸ முனிவர் பாரதம், ஸ்காந்தம், ஆகிய நூற்களில்உங்கள் திருக் கல்யாண குணங்களை சிறப்பாகச் செப்பியுள்ளார். இலட்சத்திற்கு மேல் பாடல்கள் உள்ளன. அப்பாடல்கள் கரையிலாக் கடல் போல் எல்லையற்றவையாகும். ஈடிணையற்ற பாடல்கள் அவை.

எனினும் பிற அடியார்களும் தங்கள் ஆற்ற லுக்கு ஏற்றபடி உங்களை வாழ்த்தியுள்ளனர். கருட

४. अभीष्टं याचत्सु द्रुहिणहरिवाहादिषु पुरो
यतस्त्रातुं प्राप्तो ननु भवसि मामेव झटिति ।
ततस्ते पादाब्जं परिवहतु तान्तं मम मतिः
प्रपञ्चे विख्याता ध्रुव मुपकृतौ प्रत्युपकृतिः ॥

அபீஷ்டம் யாசத்ஸு த்ருஹிண ஹரிவாஹா
திஷு புரோ
யதஸ்த்ராதும் ப்ராப்தோ நநு பவஸி
மாமேவ ஜடிதி ।
ததஸ்தே பாதாப்ஜம் பரிவஹது தாந்தம்
மம மதி:
ப்ரபஞ்சே விக்யாதா த்ருவ முபக்ருதௌ
ப்ரத்யுபக்ருதி: ॥

"சரவணப்பெருமானே! தங்கள் திரு முன்னர் பிரமன் தேவேந்திரன் ஆகியோர் வணங்கி வாழ்த்தி நிற்கின்றனர். தாம் விரும்பிய பொருளை பெறுவதற்காக உங்கள் திருவருளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் அத்தகு தேவர்களையும் கவனியாமல் எனை காக்க நீ விரைந்து வந்தாய், உன்னருள் தந்தாய், எனைகாக்க விரைவாக நடந்த தங்கள் பாதமலர்கள் களைப்படைந்திருக்கும். என் உள்ளம் தங்கள் திருவடித் தாமரைகளைத் தாங்கி நிற்கட்டும்.

உபகாரம் செய்தவருக்குப் பிரதி உபகாரம் செய்ய வேண்டும் என்பது உலகறிந்த உண்மையன்றோ.

கதிர்குலத்தில் தோன்றிய சகர புத்திரர்களின் உதவியைக் கடல் பெற்றது. கடல் அவ்வுதவியை மறக்கவில்லை. கதிர் குலத்துதித்த இராமனின் தூதன் ஹனுமன் கடலைத்தாண்டிச் சென்றான். அனுமனுக்கு உதவி செய்ய தன்னுளிருந்த மைநாக மலையை மேலெழும்ப வைத்தது. உதவி புரிந்தோர்க்கு பதிலுதவி செய்யவேண்டுமென்ற கருத்துக்கு இக்கதைப் பகுதி தக்க எடுத்துக்காட்டாகும். कृते च प्रतिकर्तव्यं एष धर्मः सनातनः । 'கிருதே ச பிரதிகர்தவ்யம் ஏஷ தர்ம: ஸநாதன:' இது வால்மீகி முனிவருடைய ஸுபாஷித ரத்னமாகும்.

५. सकृन्नत्वा हि त्वां भजति कुटिलो वाऽप्यभिमतम्
तथापि क्लिश्नाति प्रकृतिगहने कर्मविपिने ।
जनोऽस्मिन्को हेतुर्भवति न विजने त्रिभुवने
न चोल्लंध्या दैवी सरणिरिह केनापि विषमा ॥

ஸக்ருந்தத்வா ஹி த்வாம் பஜதி குடிலோ
வாऽப்யபிமதம்
ததாபி க்லிச்நாதி ப்ரக்ருதிகஹனே கர்ம
விபினே ।
ஜனோऽஸ்மிந்கோ ஹேதுர்பவதி ந விஜனே
த்ரிபுவனே
ந சோல்லாங்க்யா தைவீ ஸரணிரிஹ
கேநாபி விஷமா ॥

சரவண பவப் பெருமானே! பிறர் பொருளைத் திருடும் கள்வர்களும், பிறர் பெண்டிரை தீண்டும் நெறி தவறியவர்களும், நல்லோரை ஏமாற்றி

வாழ்பவர்களும், ஒரே ஒருமுறை உங்களை வழிபட்டால் உங்கள் திருவருளைப் பெற்றிடுகின்றனர். தங்கள் அருளால் விரும்பியவற்றைப் பெற்று நல் வாழ்வில் மகிழ்கின்றனர். ஆனால் எப்பொழுதும் வினை புரியும் மனிதன் தங்களை மறந்து வாழ்ந்தால் சிக்கல்கள் நிறைந்த தீவினைக்காட்டில் உழல்கின்றான். இங்ஙனம் இரு வினைச் சுழலில் மனிதன் சிக்கி இன்னலுறுவதற்குரிய காரணத்தை என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை. மூவுலகிலும் வாழும் உயிர்களுக்கு இறைவன் வகுத்த மேடு பள்ளங்களையுடைய பாதையிலிருந்து விலகிச் செல்ல இயலாது. முற்பிறவியில் செய்தவினைப் பயனை அனுபவித்தே தீரவேண்டும்.

இச்செய்யுளின் நான்காவது அடியில் நூலாசிரியர்,

> विधिर्नूनमसंहार्यः प्राणिनां प्लवगोत्तम ।
> रज्ज्वेव पुरुषं बद्ध्वा कृतान्तः परिकर्षति ॥

> "விதிர் நூநம ஸம்ஹார்ய: ப்ராணிநாம்
> ப்லவகோத்தம ।
> ரஜ்ஜ்வேவ புருஷம் பத்வா க்ருதாந்த:
> பரிகர்ஷதி" ॥

என்ற வால்மீகி முனிவரின் பொன் மொழியை அழகாக மொழிந்திருக்கிறார்.

६. वचोबाला यस्यामलगुणमनीषासहचरी
रहस्थाने ध्याने विहरति तवांघ्रिप्रणयिना ।
स सन्तोषाम्भोधेरधि जठरमामज्जति चिरम्
निजापत्यामोदादपि च परितोषो जगति कः ॥

வசோபாலா யஸ்யாமல குணம நீஷாஸஹசரீ
ரஹஸ்ஸ்தாநே த்யானே விஹரதி தவாங்க்ரி
ப்ரணயிஞு ।
ஸ ஸந்தோஷாம்போ தேரதிஜடரமாமஜ்ஜதி
சிரம்
நி ஜாபத்யா மோதாதபி ச பரிதோஷோ
ஜகதி க: ॥

ஹே சரவண பவப் பெருமானே! தங்கள் அடியவன் மந்திர மொழிகளைச் சொல்லி இடைவிடாமல் ஜபம் செய்கின்றான். அம்மந்திரச் சொல்லாகிய பெண் சமம் தமம் முதலிய குணங்கள் நிறைந்தவள். அறிவென்னும் தோழி அவளுக்குண்டு அடியவன் தங்களைத்துதிக்கும் வேளையில் இப்பெண் தங்கள் திருவடியாகிய ஆசைநாயகனை அடைந்து அவனுடன் கேளிக்கைகள் புரிகிறாள். தன் வாக்காகிய மகள் கந்தப் பெருமானின் திருவடியாகிய கணவனுடன் இன்புற்றிருப்பதால் அந்தப் பக்தனும் ஆனந்தக் கடலில் நெடுநேரம் மூழ்கியிருக்கிறான்.

இவ்வுலகில் தங்கள் மகள் தக்க கணவனை அடைந்து நல் வாழ்வு வாழ்வதைக் காணவே பெற்றோர்கள் துடிக்கின்றனர். அதைவிட மேலான மகிழ்ச்சி அவர்களுக்கு வேறேதுமில்லை.

"முருகக் கடவுளின் பக்தன் முருகனின் திருநாமத்தை இடைவிடாமல் ஜபிப்பதால் சமம், தமம் முதலிய நற் குணங்களைப் பெறுவான். உள்ளத் தூய்மை பெறுவான். அவ்வுள்ளத்தை ஆறுமுக

னின் திருவடிகளில் ஒன்று படச் செய்வான். அதன் பயனாக அளவிலாப் பேரின்பம் பெறுவான்" என்ற கருத்தை விளக்கவே இவ்வுருவகத்தைக் கையாண்டுள்ளார். முருக பக்தனைத் தந்தையாகவும், அப்பக்தன் முருகனைக் குறித்து மொழியும் மந்திரச் சொற்களை மகளாகவும் பக்தனின், வாக்கும்-மனமும்' ஒன்று பட்டிருப்பதை மகளும் 'மருமகனும் ஒன்று சேர்ந்தனுபவிக்கும் இன்ப வாழ்வாகவும், பக்தனுக்குத் தியானத்தில் ஏற்படும் எல்லையிலா ஆனந்தத்தை மகளின் நல்வாழ்வு கண்டு தந்தை அடையும் பெரு மகிழ்ச்சியாகவும் கற்பனை செய்து அழகாக வர்ணித்துள்ளார்.

௭. मया ते विक्रीतश्चलहृदयदूतः पदतटी
निषेवार्थं स्वार्थं बहुकृप कृपामाप्य भवतः ।
समीकृत्य स्वार्थे घटनमुचितं तेऽस्य चलतो
बिधिर्विक्रेतुर्मे ध्रुवमवगुणाच्छादनमपि ॥

மயா தே விக்ரீதச்சல ஹ்ருதய தூத: பததடீ
நீ ஷேவார்த்தம் ஸ்வார்த்தம் பஹுக்ருப
க்ருபாமாப்யபவத: ।
ஸமீக்ருத்ய ஸ்வார்த்தே கடனமுசிதம் தேSஸ்ய
சலதோ
விதிர் விக்ரேதுர்மே த்ருவமவகுணச்
சாதனமபி ॥

சுப்பிரமணியக் கடவுளே! குறைவிலாக் கருணை உடையவரே! உங்களோடு நான் வாணிபத்தில் ஈடுபட்டுள்ளேன். உங்களிடம் ஏராளமாக் குவிந்

திருக்கும் பொருள் உங்கள் திருவருளாகும். அத் திருவருளைப் பெற்று நான் உயர்ந்தேன். திருவருள் தந்த தங்களுக்கு நான் என் உள்ளம் எனும் பணி யாளை உவந்து அளித்துள்ளேன். என் உள்ளம் உங்கள் உடமை. அப்பணியாளோ கட்டுக் கடங் காமல் ஓடுகின்றான். அவனை தண்டித்து ஒழுங்கு படுத்தித் தங்கள் தொண்டில் ஈடுபடச் செய்ய வேண்டும்.

வாணிபம் நடந்து விட்டது. குறைவிலாத் திரு வருளைத்தங்களிடமிருந்து பெற்றநான் மாசுடைய இதயத்தைத் தங்களுக்குக் கொடுத்து விட்டேன். இது முறையா? என்று கேட்காதீர். உலகில் பொ ருளை விற்பவன் அப்பொருளின் குற்றத்தை மறைத்து வாங்குபவனை ஏமாற்றி விற்பனை செய் வது வழக்கம் தானே, வாணிப முறைதானே!

அ. दुराराध्याः साध्याः कथमिव भवेयुर्मखभुजः
पदं ते पूर्वेषां भवति वचसामप्यविषयः ।
शुचा क्रूरेऽपारे भवजलधिपूरे परिपतन्
निरालम्बो लम्बोदरसहज कं यामि शरणम् ॥

துராராத்யா: ஸாத்யா: கதமிவ பவேயுர்மக
புஜ:
பதம் தே பூர்வேஷாம் பவதி
வசஸாமப்யவிஷய: ।
சுசா க்ரூரேऽபாரே பவஜலதி பூரே பரிபதன்
நிராலம்போ லம்போதர ஸஹஜ கம் யாமி
சரணம் ॥

ஆறுமுகப் பெருமானே! பெரும் பொருள் ஈட்டி, முறைப்படி வேள்விகள் செய்து, அன்னம்,

நெய், முதலிய பொருட்களைப் பெய்தால் இந்திரன் முதலிய தேவர்கள் பெருமகிழ்வு அடைவர். ஏழையாகிய என்னால் பெரு வேள்விகள் செய்ய இயலாது. வேதங்கள் தொன்மையானவை, அழிவற்றவை, சொல்லிற்கும், உள்ளத்திற்கும் தங்கள் திருவடிகள் எட்டாதவைகள் என்று வேதங்கள் அறிவிக்கின்றன. அதற்கு வேதங்களாலும் அறிந்து கொள்ள முடியாத திருவடியை நான் எங்ஙனம் வழிபடுவேன்? நான் அச்சந்தரும், கரையற்ற பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து தத்தளிக்கிறேன் துன்பத்தால் ஆதரவின்றித் தவிக்கின்றேன். விநாயகக்கடவுளின் தம்பியே: உமையன்றி வேறு யாரிடம் அடைக்கலம் புகுவேன். எனைக் காத்தருள்க.

९. समाधानैर्ध्यानै र्बहुविधविधानैरपि शुचीन्
परित्रातुं शक्ता जगति विबुधास्सन्ति बहुधा ।
अपि त्याज्यान्व्रात्याधम पतित पाषण्ड पिशुनैः
परित्रातुं शक्तस्त्वमिव जगति त्वं प्रभवसि ।

ஸமாதானைர்த்யானைர் பஹுவித விதானைரபி சுசீந்
பரித்ராதும் சக்தா ஜகதி விபுதாஸ்ஸந்தி பஹுதா ।
அபி த்யாஜ்யாந் வ்ராத்யாதம பதித பாஷண்ட பிசுனை:
பரித்ராதும் சக்தஸ்தமிவ ஜகதி த்வம் ப்ரபவஸி ॥

இவ்வுலகில் சமம் (மனத்தை அடக்குதல்) தமம் (புலன்களை அடக்குதல்) உபரமம் (துறவு) திதிட்சை

(பசி, தாகம், வெயில், மழை முதலியவற்றைப் பொ ருத்துக் கொள்ளுதல்) சிரத்தை (குருவின் சொல்லை யும், வேதாந்தத்தையும் நம்புதல்) சமாதானம் (மனத்தை பரமாத்மாவிடம் நிலை பெறச் செய்தல்) ஆகியவைகளை உடைய சான்றோர்கள் தெய்வத்தின் அருளைப் பெற்று உய்வர். அறநூல்கள் மனம், சொல் செயல் ஆகியவைகளை தூய்மை படுத்தும் நற்செயல்களை அறிவுறுத்துகின்றன. இச்செயல்க ளைச் செய்வோரும் நற்கதி பெறுவர். இவ்வாறு நல்லவர்களுக்கு அருள் புரிந்து முக்தியளிக்க எத் தனையோ தெய்வங்கள் இருக்கின்றன.

ஆனால் பெரும் பாவம் செய்தவர்கள் பலர் உண்டு. அறநூற்கள் விதிக்கும் பிராயச்சித்தங்கள் செய்தாலும் போக்க முடியாத பெரும்பாவங்களைச் செய்த மாபாவிகள் பலர் உள்ளனர் இவர்கள் "வ்ரா த்யர்கள்" எனப்படுவர் இன்னும் தீக்குணங்கள் நிறைந்த அதமர்களும் உள்ளனர். வேள்விக்காகச் சேர்க்கப்பட்ட பொன்னைக் களவாடுதல் பெரும் பாவமாகும். அந்தணனாகி இருந்து கள் குடித்தல், அந்தணனைக் கொல்லல் ஆசான் மனைவியைப் புணர் தல் முதலியன கொடும்பாவங்களாகும் இவற்றைச் செய்தோர் 'பதிதர்' எனப் படுவர். வேதங்களால் மறுக்கப்பட்ட அதர்மங்களைச் செய்பவர்கள் "பா ஷண்டர்கள்" எனப்படுவர். கோள் சொல்பவரும் மட்டமான பிறவிகளாவர். வ்ராத்யர்கள் அதமர் கள், பதிதர்கள், பாஷண்டர்கள் முதலிய பாவ காரிகளைக் காப்பதற்கு திறன் மிக்க முருகனாலேயே முடியும். முருகனை விட்டால் இவர்களுக்கு அடைக்க லம், கொடுத்துக் காக்க வேறு தெய்வங்கள் இல்லை எனவே முருகன் பெரும் தெய்வமாவான்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சூத்ரக கவியால் இயற்ற பெற்ற "மிருச்ச கடிகை" உஜ்ஜயினியில் சாருதத்தன் என்ற தனிகனுடைய இல்லத்தில் திருடுவதற்கு முற்பட்ட சர்விலகன் கன்னம் வைப்பதற்கு முன் 'नमो वरदाय कुमार कार्तिकेयाय' என்று கூறினன்" என்று வர்ணித்திருப்பது இதற்குச் சான்றாகும்.

இவ்வுலகில் தங்களை வழிபடும் பக்தர்கள் முனிவர்கள் ஆகியோர்களின் விருப்பங்களை நிறைவேற்றத் தெய்வங்கள் பலர் உண்டு. ஆனால் தாழ்ந்த ஜாதியிற் பிறந்த சண்டாளர் முதலியோரின் விருப்பத்தை நிறைவேற்றிக் கரை சேர்க்கும் கடவுள் கந்தனே யாவான். இத்துறையில் முருகன் போல் திறன் மிக்க வேறு தெய்வங்கள் இல்லை" என்று ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கத்தில் ஆதிசங்கரர் சொல்லும் கருத்து இங்கே ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

मुनिनामुताहो नृणां भक्तिभाजाम्
अभीष्ट प्रदाः सन्ति सर्वत्र देवाः ।
नृणामन्त्याजानामपि स्वार्थदाने
गुहाद्देवमन्यं न जाने न जाने ।।

[सुब्रह्मण्यभुजङ्गम्–२७]

முனீனு முதாஹோ ந்ருணும் பக்தி பாஜாம் ।
அபீஷ்டப்ரதா: ஸந்தி ஸர்வத்ர தேவா:
ந்ருணு மந்த்ய ஜானுமபி ஸ்வர்த்தானே
குஹாத்தேவமந்யம் ந ஜானே ந ஜானே ।

[ஸுப்ரமஹ்மண்ய புஜங்கம்–27]

१०. तवाधाराच्छूरासुरदमन सर्वामरवान्
तृणाग्रेभ्यो मत्वा सुखमवसमाजन्मदिवसम् ।
विलम्बश्चेदद्याप्यहह नव देवास्मदवने
कुमारत्वं श्व्यात तव सदसि जायेत महताम् ॥

தவா தாராச் சூராஸுர தமன ஸர்வாமரவரான்
த்ருணாக்ரேப்யோ மத்வா ஸுகமவஸ
மாஜன்மதிவஸம் |

விலம்பச் சேதத்யாப்யஹஹ தவ
தேவாஸ்மதவனே

குமாரத்வம் க்யாதம் தவ ஸதஸி ஜாயேத
மஹதாம் ||

சூர பத்மன் இவ்வுலகனைத்தையும் கட்டி ஆண்டான். உலகை ஆயிரம் பிரிவுகளாக்கிப் பெருஞ்சக்கரவர்த்தியாக ஆண்டான். அத்தகை மாவீரன் சூர பத்மனை வதைத்த முருகபெருமானே! நீங்கள் எந்தன் பெருந்துணை. உங்களையே நம்பி வழிப்பட்டு பிறந்த நாள் முதல் இன்றுவரை நல்வாழ்வுவாழ்ந்து வருகிறேன். உங்களைத் தவிர பிற தேவர்களை புல்லுக்கு சமமாக மதிக்கின்றேன. தாமதியாமல் எங்களைக் கரையேற்றிக் காத்து மறுமை நல்கிடுவீர். தாமதித்தால் உங்கள் பெயர் கெட்டுவிடும். "குமாரன்" என்ற சொல்லுக்குரிய "பொறுப் புணர்ச்சியில்லாத குழந்தை பருவத்தினன்" என்ற பொருள் அடியார் கூட்டத்தில் பரவி விடும்.

११. सदा सेवं सेवं सुरपरिबृढत्वाध्यवसितान्
परिश्रान्तेरन्यत्फलमह मवापं न कि मपि ।
इदानीं त्वत्पादव्यतिषजितकर्मव्रजममुम्
परित्रायञ्छंभोः प्रकटय सुतत्वं तव विभो ॥

ஸதா ஸேவம் ஸேவம் ஸுரபரிவ்ருடத்வாத்ய
வஸிதான்
பரிச்ராந்தேரந்யத் பல மஹ மவாபம் ந
கிமபி।
இதானீம் த்வத்பாத வ்யதி ஷஜித—
கர்மவ்ரஜமமும்
பரித்ராயஞ்சம்போ: ப்ரகடய ஸுதத்வம்
தவ விபோ॥

சரவணபவப் பெருமானே! நான் தேவர்களுட் சிறந்த தேவர்களை எப்போதும் வழிபட்டேன். ஆனால் பயன் ஏதும் கிடைக்கவில்லை. வழிபடும் பொழுது அனுபவித்த துயரம்தான் மிஞ்சியது. தலைவா! முருகா! இப்பொழுது உங்கள் பதங்களையே நான் உறுதியாகப் பற்றியுள்ளேன். நான் மேற்கொள்ளும் எல்லா வினைகளையும் தங்கள் திருவடிகளில் ஒப்படைத்து விட்டேன். காலந்தாழ்த்தாமல் எல்லாத் துயர்களிலிருந்தும் என்னைக் காத்திட வேண்டும். சிவ பெருமான் அனைத்து ஆனந்தங்களின் இருப்பிடமாவார். காலகூட விஷத்தின் கொடுமையிலிருந்து முனிகுமாரன் மார்க்கண்டேயனையும் காத்த கருணை வள்ளல் அவர். அத்தகு பரமனின் மைந்தன் நீர் என்பதை நும் செயலால் உலகுக்கு விளக்கிக் காட்டிடுங்கள்.

१२. पुरः प्रादुर्भूत्वा न भवसि भवांश्चेन्मम मुदे
कुमार प्रक्रीडन् झटिति गलति ख्यातिरनघा ।
पुनः प्राप्तुं नेदृक्किल मिषति कालस्तव मना-
गियं ते विज्ञाप्तिः पुनरपि पुनस्ते पुनरपि ॥

புர: ப்ராதுர்பூத்வா, ந பவஸி பவாம்ச்சேந்மம முதே
குமார ப்ரக்ரீடன் ஜடிதி களதி க்யாதிரநகா ।
புன: ப்ராப்தும் நேத்ருக்கில மிஷதி
காலஸ்தவ மநா-
கியம் தே விஜ்ஞப்தி:புனரபி புனஸ்தே புனரபி ॥

பரமன் மகனே! தாங்கள் என் முன் தோன்றி என் உள்ளத்தைக் குளிர்விக்க வேண்டும். பிள்ளைப் பருவத்திற்குரிய விளையாடல்களில் ஈடுபட்டு எனக்கு அருள்புரிய மறந்து விடாதீர்கள். அருள மறந்தால் "முருகன் அடியார்களை கைவிடமாட்டான்"என்ற திருப்புகழ் விரைவிலேயே பொய்யா விடும். நல்ல சமயம் இது. இப்போதே என்னைக் காத்தருள்வீர். என்னையும் காத்து "அடியார்க்கு நல்ல பெருமாள்" என்றதிருப்புகழையும் காத்துக் கொள்ளுங்கள். இதுவே என் வேண்டுகோள். பன் முறை மீண்டும் மீண்டும் இவ்வேண்டுகோளையே நான் வலியுறுத்துகிறேன்.

१३. मयि क्रोशत्येवं सपदि न दयां यद्वितनुषे
निदानं किं तत्र ज्वलनजनिमत्त्वं नु भवतः ।
उताद्रेः कन्यायाः कठिनजठरान्तर्विलुठनम्
न वै जाने म्लानेप्सितकुशलयोनेऽल्पधिषणः ॥

மயி க்ரோசத்யேவம் ஸபதி ந தயாம் யத்
விதனுஷே

நிதானம் கிம் தத்ர ஜ்வலநஜநிமத்வம் நு
பவத:!

உதாத்ரே: கன்யாயா: கடிநஜடராந்தர்
விலுடனம்

ந வை ஜானே ம்லானே ப்ஸிதகுசல
யோநே஽ல்பதிஷண: ||

சுப்பிரமணியக் கடவுளே! வாழ்க்கைத் துன்பச் சுழலில் சிக்கி தவித்து வாட்டமுற்ற அடியார்களின் விருப்பங்களை நிறைவேற்றும் செல்வனே! என் வாழ்க்கை நெடுந்துயர்களைப் பல முறை கூறிக் கதறியுள்ளேன். உங்களை அழைத்துள்ளேன். என் மீது மட்டும் ஏன் நீங்கள் இரக்கம் கொள்ளவில்லை? உங்கள் கருணையின்மைக்கு காரணம் என்ன? தெரிந்து கொண்டேன். அக்னி தன்னைச் சேர்ந்தவைகளை தவிக்கவும் தகிக்கவும் வைக்கும். நீங்களோ அக்னியின் புதல்வர். என்வே என்னை வாட்டுகிறீர். மேலும் நீர் மலை மகளின் புதல்வரும் கூட அவளின் கடினமான வயிற்றில் வசித்ததால் உங்கள் நெஞ்சமும் கல்லாகி விட்டதோ? அறிவுக் குறைவுடைய யான் இவ்வாறு சிந்தித்து உழல்கின்றேன்.

१४. अयंते भद्राप्त्यै कतिचन समाधीन्शुभधिय:
जयं ते कामादेर्विदधति शमाद्यै: प्रहरणै: ।
स्मयन्ते यागाद्यै: कतिचन विधानैरुपचितै:
वयं तेषु श्रान्तास्तव विरचयामोऽञ्जलिममुम् ॥

அயந்தே பத்ராப்த்யை கதிசன
ஸமாதீந் சுபதிய:
ஜயம் தே காமா தேர்விதததி சமாத்யை:
ப்ரஹரணை: !
ஸ்மயந்தே யாகாத்யை: கதிசன
விதானைருபசிதை:
வயம் தேஷு ச்ராந்தாஸ்தவ விரசயாமோS
ஞ்ஜலிமஹம் ||

சரவணபவப் பெருமானே! அறிவு மிக்க சான்றோர்கள் சவிகற்ப நிர்விகற்ப சமாதிகளால் உள்ளத்தை உங்களிடத்தில் ஒருமைப் படுத்துகின்றனர். அதனால் அவர்கள் பற்பல நன்மைகளைப் பெறுகின்றனர். சமாதிநிலையை உலக்கும் காமம், வெகுளி, மயக்கம் முதலியவைகளைச் சமம், தமம், உபரமம் முதலிய ஆயுதங்களால் அழிக்கின்றனர். வேறு சில சான்றோர்கள் வேதமுறைப்படி வேள்விகள் செய்கின்றனர். சிறந்த பொருட்களை இந்திரன் முதலிய தேவர்களுக்கு ஸோமம் முதலிய யாகங்களில் சமர்ப்பித்து 'தீட்சிதர்' என்ற சிறப்புப் பெயரையும், கர்வத்தையும் அடைகின்றனர். தங்கள் திருவடித் தொண்டர்களாகிய நாங்கள் யாகம் யோகம் முதலிய வழிகளிற் சென்று பார்த்தோம் பயன் ஒன்றும் கண்டிலோம். துன்பங்களிலேயே உழல்கின்றோம். இனி அவ்வழிகளிற் செல்லோம். தங்களையே கைகூப்பி வணங்கிக் கொண்டிருப்போம். எங்களை காத்தருள்வீராக.

१५. नगास्ते पञ्चत्वं दधति जडतां दैवतमणिः
पशुत्वं सा धेनुस्तव चरणदातृत्वयशसा ।

विना तं त्वां को नु स्पृहयति धनान्धान्नरपशून्
समराद्धुं धीमानिह जगति सर्वामर गुरो ॥

நகாஸ்தே பஞ்சத்வம் தததி ஜடதாம்
தைவதமணி:
பசுத்வம் ஸா தேனுஸ்தவ சரணதாத்ருவ
யசஸா ।
விநா தம் த்வாம் கோநு ஸ்பருஹயதி
தனாந்தாந்நரபசூன்
ஸமாராத்தும் தீமாநிஹ ஜகதி ஸர்வாமர
குரோ ॥

வானவர்களின் தேசிகனே தங்கள் திருவடிகள் அனைவருக்கும் விரும்பியவற்றை அளிக்கின்றன.

உங்கள் பத மலர்களின் புகழ் மூவுலகிலும் பரவி விட்டது. வேண்டுவோர் வேண்டியவற்றை அளிக்கும் கற்பகத்தருக்களின் பெரும் புகழ் மங்கிவிட்டது. அவை எண்ணிக்கையில் ஐந்தாகக் குறைந்து விட்டன அவை உயிர் அற்றவை போன்று ஆகிவிட்டன. வானுலகில் உள்ள சிந்தாமணி என்ற ரத்தினமும் கல்லுருவம் பெற்றுவிட்டது. தன்னை வந்தடைந்தோர்களுக்கு கேட்டதை கொடுக்கும் காமதேனுவும் பகுத்தறிவற்ற விலங்கினத்தில் சேர்ந்து விட்டது. இவ்வுலகில் வாழும் அறிவுள்ள மனிதன் ஒவ்வொருவனும் விரும்பியவைகளைப் பெறுவதற்கு பெருமை மிகு தங்களையே வழிபடுவான். செல்வச் செருக்கு மிக்க ஈனர்களை மனித உருக்கொண்ட விலங்குகளை அறிவும் அன்புமற்ற இழ் பிறவிகளை நாடவே மாட்டான்.

१६. श्रुतेर्वज्ञ्रायन्ते प्रथममतिथीनां किल कथा:
यमायन्ते देहि त्वमिति लिपयो यस्य कुधियः ।
कुरुक्षेत्रायन्ते नटविटसमाजा: सगणिका:
कथं नाथन्त्थेनं त्वयि सति जगन्नाथ कृपणा: ।

ச்ருதேர்வஜ்ராயந்தே ப்ரதமமதிதீனும்
கிலகதா:
யமாயந்தே தேஹி த்வமிதி லிபயோயஸ்ய
குதிய:।
குருக்ஷேத்ராயந்தே நடவிடஸமாஜா:
ஸகணிகா:
கதம் நாதந்த்யேனம் த்வயி ஸதி ஜகந்நாத
க்ருபணு: ॥

அன்பும் அறிவுமற்ற ஈனமனிதன் "விருந்தினர்" என்ற சொல்லைக் கேட்ட அளவிலேயே இடியோசையைச் செவியுற்றவன்போல் அஞ்சுகின்முன். தனக்கு ஏதேனும் வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கும் ஏழை அவன் கண்களுக்கு எமனுகவே காட்சியளிக்கிமுன். இரப்போர்க்கு ஒன்றும் ஈயாத இழிகுணம் படைத்தவன் நாடகங்களுக்கும், கூத்தாடிகளுக்கும் பெண் பித்தர்களுக்கும் நாட்டிய மகளிர்க்கும் அளவற்ற பொருட் குவியல்களைச் செலவு செய்கின்முன். அடியார்களை காப்பதற்கு என்றே முருகப் பெருமான் தோன்றியுள்ளான். இனிமேல் ஏழைகளாகிய நாங்கள் கெட்ட குணமுடைய மாந்தர்களை நாடி நிற்கமாட்டோம்.

१७. विधत्तां व्यासङ्गं सरसिजभवः श्रौतशिखरे
समाधत्तां निद्रां जलधिजठरे श्रीपतिरपि ।
समेधन्तां लीलानटनचटुला धूर्जटिकृताः
विधीयन्ते दीक्षा गुहचरणधूल्यास्मदवने ॥

*விதத்தாம் வ்யாஸங்கம் ஸரஸிஜபவ: ச்ரௌதசிகரே*

*ஸமாதத்தாம் நித்ராம் ஜலதிஜடரே ஸ்ரீபதிரபி ।*

*ஸமேதந்தாம் லீலா நடன சடுலா தூர்ஜடிக்ருதா:*

*விதீயந்தே தீக்ஷா குஹசரண தூல்யாஸ்மதவனே ।*

இவ்வுலகைப் படைத்த பிரம்ம தேவன் மறை முடிகளில் மறைந்து கிடக்கும் பரம்பொருளை அறியும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கட்டும். இவ்வுலகைக் காக்கும் பொறுப்பை ஏற்றுள்ள திருமகளின் கணவன் நாராயணன் பாற்கடல் நடுவே நன்கு துயிலட்டும். பிரபஞ்சம் அனைத்தையும் அழித்து மறைத்து அருளும் செயல் நடத்த வேண்டிய சிவபெருமான் எப்போதும் பல்வகையான ஆனந்த நடனங்கள் ஆடிக்கொண்டிருக்கட்டும். குஹப்பெருமானுடைய திருவடிப் பொடிகள் எனைக்காக்க கங்கணம் கட்டி காத்திருக்கின்றன. எனவே பெருந்தெய்வங்களாகிய பிரமன், திருமால், பரமசிவன் ஆகியோர் துணையை நான் நாடவில்லை(குஹப் பெருமான் அவதரித்த பின்னர் ஆக்கல், அளித்தல், அழித்தல் மறைத்தல்,

அருளல் ஆகிய தொழிற்களை குகநாதனின் திருவடிப்பொடியே நடத்தி வந்தது. எனவே பிரமன் முலியோர் கவலையற்றிருந்தனர்.)

१८. प्रतिष्ठन्तां सार्धं सपदि मधुमत्या दिविषदो
न चाद्याकांक्षामस्तदनुसरणं तत्कृतफलम् ।
अपाङ्गाः स्वर्गङ्गाचटुलतरवीचीसहचराः
तिरश्चक्रुस्तृष्णाकलित परितापं मम विभो ॥

ப்ரதிஷ்டந்தாம் ஸார்தம் ஸபதி மதுமத்யா
திவிஷதோ
ந சாத்யா காங்க்ஷாமஸ்ததனுஸரணம்
தத்கருதபலம் ।
அபாங்கா: ஸ்வர்கங்காசடுலதரவிசீ ஸஹசரா:
திரச்சக்ரு ஸ்த்ருஷ்ணு கலித பரிதாபம்
மம விபோ ॥

எட்டு வசுக்கள், பதினொரு ருத்திரர்கள் பன்னிரண்டு ஆத்தியர்கள் நாற்பத்தொன்பது மருத்துக்கள், பன்னிரண்டு சாத்யர்கள் முதலிய தேவர்கள் சூரிய மண்டலத்திலிருக்கும் தேன் போன்ற ஆதித்ய ஸ்வரூபமான அமுதத்தைப் பருகிக் கொண்டேயிருக்கட்டும். இவ்வாறு அமுதம் பருகுவது 'மதுவித்யை' எனப்படும். இதை முறைப்படி உபாசிப்பவர்களுக்கும் அந்தத் தேன் போன்ற அமுதம் கிடைக்கும் என்று "சாந்தோக்ய உபநிடத" த்தில் கூறப்பட்டுள்ளது. இம்மது வித்யையை உபாஸனை செய்வதற்கோ, அமுதத்தைப் பருகுவதற்கோ, நான் ஆவல் கொள்ளவில்லை. நான் என் உயிர்த்

தலைவன் முருகனையே நாடி நிற்கிறேன். தேவ லோகத்துக் கங்கையான மந்தாகினியில் அழகான அசைந்தாடிவரும் அலைகள் போன்று அவன் விளங் குகின்றான். அவனது கருணை நிறைந்த கடைக்கண் பார்வை துன்பத்தைத் தரும் பயனற்ற பொரு ளாசைகளை என் உள்ளத்திலிருந்து முற்றிலும் அகற்றி விட்டது.

१९. नमस्ते स्वर्धेनोऽमर पुरतरुभ्यो ऽञ्जलिरयम्
नमश्चिन्ता रत्नापसरत यथायातमधुना ।
प्रसादे सेनान्यस्सति जगति कः प्रार्थयति वः
सुधासिन्धोस्तीरे कथमिव भवेत्काञ्जिककथा ॥

நமஸ்தே ஸ்வர்தேனோऽமர புரதருப்யோऽஞ்
ஜலிரயம்
நமச்சிந்தா ரத்னாபஸரத யதாயாத மதுனா ।
ப்ரஸாதே ஸேநாந்யஸ்ஸதி ஜகதி க: ப்ரார்த
யதி வ:
ஸுதாஸிந்தோஸ்தீரே கதமிவ பவேத்
காஞ்சிககதா ॥

தூயபக்தி உள்ளம் மிகுந்த கவியின் துதிப் பாடல்களைச் செவிகளால் பெருகி மகிழ்ந்த கந்தப் பெருமான் கவியை காத்தருள அவருடைய அருகே வந்தார். இக்காட்சியைக் கண்ட தேவலோகத்துக் காமதேனு, கற்பகத்தரு, சிந்தாமணி, ரத்தினம் முதலியவைகளும் கவியின் விருப்பத்தை நிறை வேற்றி அவரை மகிழ்விப்பதற்காக அவரிடம் ஓடி

வந்தன. இதைக் கண்ட கவி கூறுவது கீழே தரப் பட்டுள்ளது.

"காமதேனுவே உனக்கு வணக்கம். உன் உதவி எனக்குத் தேவையில்லை. கற்பக மரங்களே இரு கரம் கூப்பி உம்மை வணங்குகிறேன். நீங்களும் என்மீது இப்பொழுது இறக்கம் கொள்ள வேண்டாம். சிந்தாமணி ரத்தினமே உனக்கும் என் வணக்கம் உரித்தாகுக. நீங்கள் மூவரும் வந்த வழியே தேவலோகத்திற்குத் திரும்பிச் சென்றிடுங்கள். தேவையை நிறைவேற்றிக் காத்தருள சுப்பிரமணியக் கடவுளின் அருள் காத்திருக்கும்போது எந்த மனிதனாவது உங்களிடம் தன் விருப்பை வெளியிட்டு வேண்டிக் கொள்வானா? பாற்கடலின் கரையில் இருப்பவன் தன் வேட்கையைத் தணித்துக் கொள்வதற்கு சாக்கடையில் உள்ள அழுக்கு மிக்க நீரை ஒருபோதும் விரும்ப மாட்டான். (முருக பெருமானின் அருள் பாற்கடலுக்கு ஒப்பானது. மற்ற தேவர்களின் அருள் அனைத்தும் சாக்கடை அழுக்கு நீருக்கு நிகரானது).

२०. स्वपादस्मर्तारं सपदि कलयन्नात्मसदृशम्
पुनस्तोषाभावान्मृगयति वरं दातुमपरम् ।
यदाख्यापीयूषं पिबति सवने दिव्यपरिषत्
स सुब्रह्मण्यो नः स्फुरति पुरतः पूर्णकरुणः ॥

ஸ்வபாதஸ்மர்தாரம் ஸபதி கலயந்நாத்ம
ஸத்ருசம்
புனஸ் தோஷாபாவாந் ம்ருகயதி வரம்
தாதுமபரம் ।

யதாக்யாபீயூஷம் பிபதி ஸவனே திவ்ய பரிஷத்
ஸ ஸுப்ரஹ்மண்யோ ந ஸ்புரதி புரத:
பூர்ணகருணை: |

தன்னை மிகுந்த பக்தியுடன் தியானித்து தன் திருவடியை வணங்கும் அடியார்க்கு முருகன் விரைந்து அருள் புரிகின்றான். பக்தனுக்கு தன்னைப் போன்ற உருவத்தையே அளித்து விடுகிறார். அத்துடன் அமைதி கொள்ளாமல் அடியார்க்கு இன்னும் என்னவெல்லாம் அளிக்கலாம் என்று ஆராய்கின்றார். யாகங்களில் இந்திரன் முதலிய தேவர்கள், குகப் பெருமானின் திருநாமம் சேர்ந்த "ஸுப்ரஹ்மண்யாஹ்வானம்" என்ற அமுதத்தைச் செவிகளால் பருகி மகிழ்கின்றனர். இத்தகு பெருமை வாய்ந்த முருகக் கடவுள் என் முன்னிலையில் கருணை நிறைந்தவராக இருக்கிறார்.

२१. प्रभावस्मिन्दीक्षां वहति मम रक्षाध्वरविधौ
लभन्ते शोकाग्नौ सपदि पशुतां शात्रवजना: ।
भजन्ते मोदाब्धाववभृथविधां बन्धुनिवहा:
दिवान्धाश्चक्राङ्का: कथमिव समानप्रकृतय: ॥

ப்ரபாவஸ்மிந்தீக்ஷாம் வஹதி மமரக்ஷாத்வர
விதௌ
லபந்தே சோகாக்னௌ ஸபதி பசுதாம்
சாத்ரவஜநா: |
பஜந்தே மோதாப்தாவ வப்ருத விதாம் பந்து
நிவஹா:
திவாந்தாச்சக்ராங்கா: கதமிவ ஸமாந
ப்ரக்ருதய: ||

என் அருமைத் தலைவனாகிய முருகக் கடவுள் எனைக்காக்கும் செயலாகிய வேள்வியைச் செய்ய முற்பட்டவுடன், வேள்வித்தீயில் ஆடு முதலிய விலங்குகள் வீழ்ந்து எரிவதுது போன்று துன்பத்தீயில் என் பகைவர்கள் வீழ்ந்து எரிந்து விடுகின்றனர். என் உறவினர்கள் அனைவரும் ஆனந்தக் கடலில் மூழ்கி அவபிருத ஸ்நானத்தைச் செய்கின்றனர். பக்தன் ஒருவன் கந்தனின் கருணைக்குப் பாத்திரமாகும்பொழுது பக்தனின் நண்பர்கள் இன்பத்தையும், பகைவர்கள் துன்பத்தையும் அடைகின்றனர்.

முருகன் பக்தனுக்கு அருளும்போது சிலர் துன்பத்துக்கும், சிலர் இன்பத்துக்கும் ஆளாகின்றனரே, இதுதகுமா? என்ற ஐயம் எழும். கவி அதை விளக்குகிறார். கோட்டானுக்கு பகலில் கண் தெரியாது. இரவில் அதற்கு பார்வை கிடைக்கும். பார்வை கிடைத்தவுடன் அது காக்கை முதலிய எளிய உயிர்களை துன்புறுத்திக் கொல்கிறது. சக்ரவாகப் பறவைக்குப் பகலில் கண் தெரியும். இரவு வேளையில் அது பார்வை இழந்துவிடும். சக்ரவாகப் பறவை ஒரு பொழுதும் பிற உயிர்களைத் துன்புறுத்தாது. மனிதருள்ளும் பிறரைத் துன்புறுத்தும் கோட்டான் போன்றவர்கள் உண்டு. இத்தகையோர் துன்புத்திற்கு ஆளாவது மிகவும் பொருத்தமே.

२२. सुपर्याप्ता गोप्तुं जनमतिविपन्नं सुरगणाः
पटोयान्रेणुर्वा गुह चरण पाथोजमथितः।

न सन्दिग्धेऽद्यास्मान् जगति जनतालोक्य तव तद्
रजो लेश प्राप्ताखिल सुरवराकाङ्क्षितशिवान् ।।

ஸுபர்யாப்தா கோப்தும் ஜனமதிவிபந்நம்
படியாந்ரேணுர்வா குஹசரண பாதோ ஜ
மதித: ।

ந ஸந்திக்தேடத்யாஸ்மான் ஜகதி ஜனதா
லோக்ய தவதத்-
ரஜோ லேசப்ராப்தாகில ஸுரவராகாங்க்ஷித
சிவான் ॥

இவ்வுலகில் பெருந்துன்பத்திற்கு ஆளான மனி தனை விரைந்து காக்கும் ஆற்றல் வாய்ந்தவர் இந்தி ராதி தேவர்களா? அல்லது குஹப்பெருமானின் தூயத்திருவடித் தாமரையில் சேர்ந்திருக்கும் பொ டியா? என்ற கேள்வி மக்கள் மன்றத்தில் எழுந்தது. இது குறித்து இங்கு ஆராய்ச்சிகள் நடந்தன. அடி யாரின் தீராத வினைகள் யாவும் முருகப்பெருமா னின் திருவடிப் பொடியின் மகிமையால் தீர்கின் றன என்றும் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்ற அடியார்கள் எல்லாத் தேவர்களும் அருளும் நன்மை களையும் திருவடிப் பொடியின் அருளால் அடைகின் றனர் என்றும் கண்டறிந்தனர். முருகனின் திரு வடித் தாமரையே துன்பங்களை அகற்றும் ஆற்றல் வாய்ந்தது என்ற உண்மையை உலகறிந்தது.

२३. चिरं भ्रामं क्वचन मरुदेशे भवमिषे
परिश्राः शान्ताः शृणुत वचनं किञ्चन शिशोः ।
समाप्यैतत्सर्वं सपदि विधिवाक्यादधिगतम्
पदे भूमानन्दे ददत हृदयं घूर्जटिभुव :।।

சிரம் ப்ராமம் ப்ராமம் க்வசன மருதேசே
பவமிஷே

பரிச்ராந்தா: சாந்தா: ச்ருணுத வசனம்
கிஞ்சன சிசோ: ।

ஸமாப்யைதத்ஸர்வம் ஸபதி விதிவாக்யா
ததிகதம்

பதே பூமாநந்தேததத ஹ்ருதயம்.
தூர்ஜடிபுவ: ॥

பிறப்பும் இறப்பும் இடைவிடாது நிகழ்ந்து கொண்டிருக்கும் ஸம்ஸாரம் எனும் பாலைவனத்தில் பல்லாண்டு பல்லாண்டுகளாக அலைந்து திரிந்து களைப்புற்றவர்களே! "आत्मा वारेद्रष्टव्य: श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्य:" "ஆத்மா வாரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோமந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: '(ஆத்மாவை முறைப்படிக் கேட்பாயாக கேட்டபடி சிந்திப்பாயாக: அதன் பின் தியானம் செய்வாயாக ஆத்மாவை நேரில் காண்பாயாக) என்ற உபநிஷத உபதேசத்தைக் கேட்டு அமைதியுற்ற மாந்தர்களே! நான் சொல்லும் கருத்துக்களை ஆதரவுடன் கேளுங்கள். அழிவுகளுள்ள ஸ்வர்கம் முதலியவைகளைப் பெறுவதற்கு வேதங்களில் கர்ம காண்டத்தில் சொல்லப்படும் விதிகளை பின்பற்றுகிறீர்கள். சிவபெருமானின் குழந்தை குகன் அழிவிலா ஆனந்த வடிவம் கொண்டவன். அக்குகனின் திருவடித்தாமரையில் உங்கள் உள்ளத்தை நிலை நிறுத்துங்கள்.

२४. प्रियच्छायापायांस्त्यजत कुशलायातिमहते
फलायामोहायार्जयत सदुपायानपि च वः ।
उमा दायादाङ्घ्रे रतिभयद मायामय भया-
दपायादुद्धर्ता न भवति परस्त्विर्ननु शपे ॥

*ப்ரியச்சாயாபாயாம் ஸ்த்ய ஜத குசலாயாதி மஹதே*
*பலாயாமோஹாயார்ஜயத ஸதுபாயாநபி சவ: ।*
*உமா தாயா தாங்க்ரே ரதிபயத மாயாமயபயாத்*
*அபாயாதுத்தர்தா ந பவதி பரஸ்த்ரிர்நநு சபே ॥*

அறிவுமிக்க மாந்தர்களே! இவ்வுலகப் பொருட்கள் அனைத்தும் முதலில் இன்பத்தை அளிக்கும். முடிவில் தீராத பெருந்துன்பத்தை தரும். எனவே அப்பொருட்களின் மீதுள்ள ஆசையை விரைவிலேயே விலக்கி விடுங்கள். உயர்வும் ஆனந்தமும் உடைய அறிவின் பயனை அடையத் தேவையான சாதனங்களைச் சேகரித்து வையுங்கள். மாயை எனும் பிணி பேரச்சத்தை தரும். அதிலிருந்து பாதுகாப்பை பெற பார்வதி தேவியின் திருக்குமாரனின் பாதத்தாமரைகளைப் பற்றிக் கொள்ளுங்கள். உங்களை காக்க அத்திருவடிகளை விட திறம் வாய்ந்தவைகள் வேறொன்றும் இல்லை.

२५. अभूम प्रागेते वयममितकाङ्क्षा जल निधा-
वहो मज्जं मज्जं भृशमलभमानास्तटभुवम् ।

इदानीं स्वाराज्यं तृणमपि समं यच्चरणजात्
प्रसादात्पश्यामः किमिह वरयामोऽद्य वरदम् ॥

அபூம ப்ராகேதே வயமமித காங்க்ஷா ஜலநிதா
வஹோ மஜ்ஜம் மஜ்ஜம் ப்ருசமல பமாநாஸ்
தடபுவம் ।
இதா நீம் ஸ்வாராஜ்யம் த்ருணமபி ஸமம்
யச்சரணஜாத்
ப்ரஸாதாத்பச்யாம: கிமிஹ வரயா–
மோऽத்ய வரதம் ॥

பலவிதமான ஆசை அலைகளால் அலைந்கழிக்கப்பட்டேன். சம்சாரக்கடலில் மூழ்கி மூழ்கிப் பெருந் துன்பத்திற்கு ஆளானேன். அக்கடலின் கரை காண இயலாமல் திக்கற்று திகைத்து நின்றேன். இன்று என் தெய்வமான சுப்பிரமணியத் கடவுளின் திருவடி திருவருளைப் பெற்றேன். அச்சம் எனை விட்டகன்றது. பேரானந்தம் அடைந்தேன். மோட்சமும் எனக்குப் புல்லுக்குச் சமமாக தோன்றுகிறது. இந்நிலையில் எனக்கு எம்பெருமானிடத்திலிருந்து வேண்டிப் பெறுவதற்குரிய பொருள்யாதுமே இல்லை. அவன் திருவருளே எனக்குப் போதுமானது. நான் தன்யனுனேன்.

२६. पतन्ती रुद्राद्रेः श्रुतिभुवि गलन्ती क्षितरुजो
दलन्ती शूरादीनपि परिकृषन्ती तटतरून् ।
हरन्ती सन्तापान्पुनरपि पुनन्ती स्मृतिवशात्
स्रवन्ती काप्येषा विलसति वहन्ती मम पुरः ॥

பதந்தீ ருத்ராத்ரே: ச்ருதிபுவி களந்தீ ச்ரிதருஜோ
தளந்தீ சூராதீனபி பரிக்ருஷந்தீ தடதருன் ।
ஹரந்தீ ஸந்தாபாந் புனரபி புநந்தீ ஸ்ம்ருதி வசாத்
ஸ்ரவந்தீ காப்யேஷா விலஸதி வஹந்தீ மம புர: ॥

பரமசிவன் என்னும் மலையிலிருந்து குஹப்பெருமான் எனப்படும் அற்புத பெருநதி உற்பத்தியானது. வேதங்கள் ஆகிய பூமியில் அந்நதி வீழ்ந்தது. தன்னடியார்களின் பிணிகளாகிய கரைகளை கரைத்து விரைந்தோடியது. தாரகன் சூரபத்மன் முதலிய அரக்க மரங்களை வேருடன் வீழ்த்தியது. அந்நதி அருகே சென்ற மாந்தர்களின் அகத்திலும் புறத்திலும் உள்ள தாபம் தணிந்தது. தன்னை நினைப்போரின் பாவத்தைப் போக்கி அவர்களைத் தூய்மைப் படுத்துகிறது. இத்தகு பெருமை மிகு குஹ மஹாநதி என் முன்னால் எப் பொழுதும் ஓடிக்கொண்டிருக்கிறது. என் பாக்கியமே பாக்கியம்.

२७. अतिक्रूरोऽरातिष्वमितशमपूरो मुनिजने
कठोरो वीरत्वे कुसुमसुकुमारोऽपि हृदये।
रुचोद्यत्सूरोऽसावमृत कर पूरोऽल्पहसिते
सुमन्दारोऽस्माकं जयति स कुमारो गिरिभुवः॥

அதிக்ரூரோ஽ராதிஷ்வமித சமபூரோ முனிஜனே
கடோரோ வீரத்வே குஸுமஸுகுமாரோ஽பி ஹ்ருதயே ।

ருசோத்யத்ஸூரோSஸாவம்ருதகரபூரோSல்
பஹஸிதே
ஸூமந்தாரோSஸ்மாகம் ஜயதி ஸகுமாரோ
கிரிபுவ: ||

மலைமகளின் அருமை மைந்தனாகிய குஹப்பெருமான் பகைவர்களிடம் மிகக் கடுமையாக நடப்பவர். தன்னை வழிபடும் முனிவர்களுக்கு நிலையான எல்லையற்ற அமைதியை அளிப்பவர். போர்க்களத்தில் திண்ணிய நெஞ்சு மிக்கத் தீரனாகத் திகழ்வார். அடியார்களுக்கு அருளும் பொழுது மலரைவிட மெல்லிய இதயத்துடன் இருப்பார். உதயசூரியனை ஒத்த உடல் வனப்புடன் ஒளிர்வார். புன்னகை புரியும் பொழுது அமுதக் கதிர்களை உடைய அழகு மதியென விளங்குவார். எனக்கருளும்பொழுது தேவலோகத்தில் உள்ள மந்தாரம் எனப்படும் கற்பகத் தருவாகக் காட்சியளிப்பார். இவ்வாறு எங்கும் எப்பொழுதும் வெற்றிக்கொடியுடன் விளங்குகிறார்.

२८. नमोवाकं ब्रूमो नयनरमणीयाय शिवयोः
तदङ्कालङ्कारं कमपि विदधानाय च मुहुः ।
तयोः प्रेमाम्भोधेः शरदुदितराकाशशभृते
परस्मै कस्मैचित्त्रियुगवदनायादिमहसे ।।

நமோவாகம் ப்ரூமோ நயனரமணீயாய
சிவயோ:

ததங்காலங்காரம் கமபி விததாநாய
சமுஹு: |

தயோ: ப்ரேமாம் போதே: சரதுதிதராகா
சசப்ருதே
பரஸ்மை கஸ்மை சித் த்ரியுக வதநாயாதி
மஹஸே ||

குஹன் எனும் ஒளித் தொகுதி பார்வதி – பரமேஸ்வரன் ஆகியோரின் கண்களைக் குளிரச் செய்கின்றது. அவர்களின் மடியிலமர்ந்து அழகுப் படுத்துகின்றது. சரத் கால பூரணசந்திரன் போல் திகழ்ந்து அவர்களது வாத்ஸல்யமாகிய ஆனந்தக் கடலைப் பொங்க வைக்கிறது. ஆறு முகங்களுடன் திகழும் அச் சோதி மேன்மை மிக்கது. வியப்பை ஊட்டுவது இத்தகு சிறப்பு மிகு சோதிக்கு ப்பல முறைகள் பணிவு நிறைந்த வணக்கங்களைச் சொல்வோமாக.

२९. तुलाकोटिक्वाणस्फुरणललिताभ्यां त्रिजगताम्
परं पित्रोर्नेत्रोत्सवदनटनाभ्यां च कृतिनाम् ।
मनोहर्म्ये राजत्कनककलशाभ्यां श्रुतिशिरो-
विमृग्याभ्यां पद्भ्यां नतसुरतरुभ्यां नतिरियम् ॥

துலாக் கோடிக் வாணஸ் புரண லலிதாப்யாம்
த்ரிஜகதாம்
பரம் பித்ரோர் நேத்ரோத்ஸவதநட
நாப்யாம் சக்ருதிநாம் |
மனோ ஹர்ம்யே ராஜத் கனக கலசாப்யாம்
ச்ருதிசிரோ–
விம்ருக்யாப்யாம் பத்ப்யாம் நதஸுரதருப்
யாம்நதிரியம் ||

முருகன் திருவடிகளில் ஒளி மிகு ஒளிச்சிலம்புகள் அழகுக்கு அழகு செய்கின்றன. திருவடிகளின் நடம் கண்டு மூவுலகின் தாய் தந்தையரான பரமசிவன் பார்வதி ஆகியோர் கண்கள் குளிர்கின்றன. இத்திருவடிகள் அளவற்ற புண்ணியம் செய்த மகான்களின் மனமாளிகையின் கோபுரத்தில் தங்கக் கலசங்களாக ஒளிர்கின்றன. இத்திருவடிகளை உணர மறைகளை நன்கு ஆராய வேண்டும். கற்பக மரங்கள் கந்தனின் திருவடிகளை வணங்கி நிற்கின்றன. இத்தகைய மாண்புமிகு பாதமலர்களை யானும் வணங்குகிறேன்.

३०. क्वणद्भ्यां पाणिभ्यां रणितचरणाभ्यां मणितले
स्खलद्भ्यां जानुभ्यां कलितगमनं सार्धवचनम् ।
अनाद्योर्दम्पत्योः सुकृतमिव मूर्तं नयनयोः
अदृष्ट्वेदं तेजः कथमिव कृती खल्विह जनः ।।

க்வணத்ப்யாம் பாணிப்யாம் ரணித சரணப்
யாம் மணிதலே
ஸ்கலத்ப்யாம் ஜானுப்யாம் கலிதகமனம்
ஸார்தவசனம் ।
அநாத்யோர் தம்பத்யோ: ஸுக்ருதமிவ மூர்த்
தம் நயனயோ:
அத்ருஷ்ட்வேதம் தேஜ: கதமிவ க்ருதீ
கல்விஹ ஜன: ||

கந்தப் பெருமானின் கைகளில் வளையல்கள் குலுங்குகின்றன. கால்களில் பாதசரங்கள் ஒலிக்கின்றன. கயிலையில் பளிங்குக் கற்கள் பதிக்கப்

பெற்ற தரையில் கந்தன் முழங்கால்களால் மண்டியிட்டுச் செல்வான். அழகிய மழலையில் மிழற்றுவான். நித்திய தம்பதிகளான பார்வதீ-பரமேஸ்வரர்களின் கண்களுக்குப் புண்ணியக் குவியலின் மொத்த உருவாகக் காட்சியளிப்பான். இத்தகைய கந்த பெருமான் என்னும் பேரொளி பெருஞ்சுடரை நேரில் காண்பவன் பெரும் பாக்யசாலியாவான். கந்தப் பெருமானை நேரில் காணுதவன் பாக்யக் குறைவு உள்ளவனுவான்.

३१ पायात्कुशलकरण्डः पुष्करमालापरीवृतशिखण्डः ।
ताडिततामसषण्डः तारकतामिस्रतरुणमार्तण्डः ॥

பாயாத் குசலகரண்ட: புஷ்கர மாலாபரீவ்ருதசிகண்ட: ।
தாடித தாமஸ ஷண்ட: தாரக தாமிஸ்ர தருண மார்த்தாண்ட: ॥

முருக பெருமான் நண்பகல் கதிரவனுக இருந்து தரகாசுரன் எனும் கும்மிருட்டை அழித்தார். தமோகுணம் நிறைந்த அறிவிலிகளின் கூட்டத்தைத் தண்டிக்கும் தலைவர் அவர். அப்பெருமானின் சிரத்தைத் தாமரச மலர் மாலைகள் பொலிவுறுத்துகின்றன. அவர் அனைத்துக் கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமானவர். அவர் நம்மை காக்கட்டும்.

३२ नेत्रीभूतः शिवयोः कश्चन पत्री कृतोरगाहारः ।
पात्रीभवतु पुरो मे धात्रीकृत कृत्तिकोऽक्षियुगलस्य ॥

நேத்ரீபூத: சிவயோ: கச்சன பத்ரீ க்ருதோ-
ரகாஹார: |
பாத்ரீபவது புரோ மே தாத்ரீக்ருத க்ருத்
திகோக்ஷியுகளஸ்ய ||

கதிர்வேல் முருகன் சிவபெருமானுக்கும் உமா தேவிக்கும் கண்ணுகத் திகழ்கிருன். பாம்பைப் புசிக்கும் மயிலே அவனது வாஹனமாகும் கிருத் திகைகள் என்ற தேவமகளிரால் முருகன் பாலூட்டி வளர்க்கப்பட்டான். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவன் முருகன் என் முன் தோன்றி என் கண்களைக் குளிரச் செய்யட்டும்.

३३ अंभोजपत्रनेत्र: कुम्भोद्भूतादितामरसमित्र: ।
शंभो: प्रमोदपुत्रस्तंभो: जगतां समेधतां चित्र: ।।

அம்போஜ பத்ர நேத்ர: கும்போத் பூதாதி
தாமரஸமித்ர:
சம்போ: ப்ரமோத புத்ர ஸ்தம்போ: ஜக
தாம்ஸமேத தாம்சித்ர: ||

முருகன் கண்ணழகன் ஆவான். அவனது நய னங்கள் தாமரை இதழ் போன்று எழில் மிகுந் தவை. குடமுனி அகத்தியரின் உள்ளமெனும் தாம ரையை மலர்விக்கும் கதிரவன் அவன். இவ்வுலகு அனைத்தையும் தாங்கும் தூணுகத் திகழ்கின்ருன். பேரின்பத்தின் உறைவிடமான சிவனுக்கும் முருகன் பேரானந்தத்தை அளிக்கின்ருன். இங்ஙனம் வியப் பூட்டும் பெருமைகள் பொருந்திய கந்தப்பெரு மான் அடியார்களைக் காப்பவராய் வளரட்டும்.

३४ क्षन्ता नतमन्तूनां गन्ता गजराजमदभरं भञ्जन् ।
कान्त्या कनकनियन्ता क्रौञ्चनिहन्ता कदा नु हृदि रन्ता ॥

*க்ஷந்தா நதமந்தூநாம் கந்தா கஜராஜமதபரம் பஞ்ஜன் |*
*காந்த்யா கனகநியந்தா க்ரௌஞ்சநிஹந்தா கதாநு ஹ்ருதிரந்தா ||*

தன்னை நாடிவந்து அடிபணிந்து நிற்கும் அடியார்களின் குற்றங்களை பொறுக்கும் கோமான். சிறந்த யானையின் நடையை பழிக்கும் நடையழகு உடையவன். அவனது மஞ்சள் நிற மேனி பத்தரை மாற்றுத் தங்கத்தைக் காட்டிலும் மேன்மை உடையது. 'கிரௌஞ்சம்' எனும் மலையைப் பிளந்த கீர்த்தி மிக்கவன். இத்தகு பெரும் பெயர் முருகன் என் மனத்தை மகிழ வைப்பது எப்பொழுது? அதை யான் அறியேன்.

३५ निगमशिखरालवालो वल्लीमल्लीताञ्चित स्कन्धः ।
कश्चन सुरसालो नो वृश्चतु पाश्चात्यजन्मसन्तापम् ॥

*நிகமசிகராலவாலோ வல்லீமல்லீ லதாஞ்சித ஸ்கந்த:-*
*கச்சன ஸுரஸாலோ நோ வ்ருஸ்ச்சது பாச்சாத்ய ஜன்மஸந்தாபம்*

குஹப்பெருமான் மறைமுடிகளாகிய பாத்தியில் தோன்றிய தேவ விருக்ஷமாவார். அவரது தோளாகிய கிளையில் வள்ளிதேவி எனும் மல்லிகைக் கொடி படர்ந்திருக்கும். தெய்வத்தருவாகிய

முருகப்பெருமான் பிறவிப் பெருந்துயரிலிருந்து என்னைக் காத்தருள் வாராக.

३६ शासितदैत्यकदम्बः शमधनचेतस्तटाक कादम्बः ।
आसीन्ममावलम्बः शक्रतनूजालसाक्ष्यलि कदम्बः ॥

சாஸிததைத்யகதம்ப: சமதனசேதஸ்தடாக
காதம்ப: ।
ஆஸீன்மமாவலம்ப: சக்ரதநூஜாலஸாக்ஷ்யளி
கதம்ப: ॥

குஹப்பெருமான் உலகிற்குத் தீங்கிழைக்கும் கொடிய அரக்கர் கூட்டத்தை தண்டிப்பவர். அமைதியெனும் பெருஞ்செல்வத்தையுடைய பெரியோர்களின் மனமாகிய தாமரைக்குளத்தில் அன்னப் பறவையைப் போல் இயங்குபவர். தேவ சேனையின் கண்களாகிய வண்டுகளுக்கு மணமலர்கள் நிறைந்த கடம்ப மரமாகக் காட்சியளிப்பவர். இத்தகு பெருமை வாய்ந்த பெருமானை நான் அடைக்கலம் சென்று விட்டேன்.

३७ यज्ञावघुष्टनामा प्राज्ञालापाभिरामगुणसीमा ।
परमेश्वरयोः प्रेमालंकृतसामा ममास्तु शुभभूमा ॥

யஜ்ஞாவகுஷ்டநாமா ப்ராஜ்ஞாலா பாபிராம
குணஸீமா ।
பரமேஸ்வரயோ: ப்ரேமாலங்க்ருதஸாமா
மமாஸ்து சுபபூமா ॥

வேள்விகளை இயற்றுபவர்கள் வேள்வி நடைபெறும்போது "ஸுப்ரம்ஹண்யோம்" என்று அடிக்கடி கூறுவர். அறிவாளிகள் திருமுருகனின் திருக்கலியாண குணங்களை சொல்லிச்சொல்லி மகிழ்வர். பேரழகு படைத்தவர் இந்நகரிலா நிமலனைக் கண்டு பார்வதியும் பரமசிவனும் பெருமகிழ்ச்சியடைகின்றனர். இத்தகு மாட்சிமைகள் பல உடைய இன்ப வடிவினனாகிய முருகன் என் முன் தோன்றுவான். எனைக் காப்பான்.

३८ सनकादिसिद्धसेव्यो जनको जगतां शिवङ्करः शिवयोः ।
कनकद्रवनीकाशः शनकैः शनकैरुदेति पुरतो नः ॥

ஸநகாதிஸித்தஸேவ்யோ ஜனகோ ஜகதாம் சிவங்கரச் சிவயோ: ।
கனகத்ரவநீகாச: சனகை: சனகைருதேதி புரதோ ந: ॥

முருகக் கடவுள் உருக்கிய தங்கம் போன்று ஒளி வீசும் பொன்மேனியுடையவர். ஸனகர் முதலிய ஆதியோகிகளும இவரை மகிழ்ச்சியுடன் வழிபட்டனர். சிவனுக்கும் சிவைக்கும் (பார்வதி) மங்களத்தைத் தருவர். பதினான்கு உலகுக்கும் தந்தையாகத் திகழ்பவர். இத்தகைய முருகக் கடவுள் மெல்ல மெல்ல என் முன் வந்து தரிசனம் தந்து அருளுகின்றார்.

३९ षण्मुख! मुखजितशशधर! धरजाङ्कवास! वासवाद्यर्च्य ।
अर्चिष्मदधिककान्ते! कान्ते जगतां पदे विधेह्यस्मान् ॥

ஷண்முக ! முகஜிதசசதர ! தரஜாங்க
வாஸ ! வாஸவாத்யர்ச்ய |
அர்சிஷ்மததிக காந்தே! காந்தே ஜகதாம் பதே
விதேஹ்ய ஸ்மான் ||

ஆறுமுகப் பெருமானே ! மதியைப் பழிக்கும் எழில் மிகு திருமுகம் உடையோனே ! இந்திரன் முதலிய வானவர்களால் வணங்கி வழிபடப்பட்டவனே கதிரவன், சந்திரன் அக்நி ஆகியவர்களை காட்டிலும் சிறப்பாக மிளிர்கின்ற ஒளிகளுடன் கூடியதும் உலகங்களுள் மிக உயர்ந்ததுமான பதவியில் இருக்கச் செய்வாயாக.

४० कञ्जभव वचनगेहं काञ्चनसहकारिकिरण सन्दोहम् ।
श्रितरक्षासन्नाहं शिवयोर्मूर्त्तं श्रयामहे स्नेहम् ।।

கஞ்ஜபவ வசனகேஹம் காஞ்சனஸஹகாரி
கிரணஸந்தோஹம் |
ச்ரிதரக்ஷாஸந்நாஹம் சிவயோர்மூர்த்தம்
ச்ரயா மஹே ஸ்நேஹம் ||

நான்முகனுடைய நான்கு முகங்களிருந்தும் நான்கு வேதங்களும் தோன்றின. நான்மறைகளே முருகன் விரும்பி வாழும் இல்லமாகும். பத்தரை மாற்றுத்தங்கத்தைஒத்த நிறம் முருகப் பெருமானுக்கே உரியதாகும். அடியார்களை காக்கவேண்டும் என்ற பேரார்வம் கொண்டவர். அதற்காக எப்போதும் தயாராக இருப்பவர். பரமசிவனுடையவும், பார்வதியினுடையவும் அன்பின் திருஉருவமாகத் திகழ்கின்றார். அத்தகு குகப்பெருமானையே நாம் தஞ்சம் அடைந்துள் ளோம்.

४१ वन्देमहि मन्देहासुर हर सन्देहदायि देहरुचिम् ।
कुरुविन्द कान्तिचेलं बालं शिवयोः किमन्यदवशिष्टम् ॥

வந்தேமஹி மந்தேஹாஸுர ஹரஸந்தேஹ
தாயிதேஹருசிம் |
குருவிந்த காந்திசேலம் பாலம் சிவயோ: கிமந்
யதவசிஷ்டம் ||

மந்தேகாசுர்களை அழித்துக் கொண்டு நாள் தோறும் மேலெழும்பி வரும் செங்கதிர்களைக் கொண்ட கதிரவன் போன்று சிவந்த திருமேனியைக் கொண்டவர். அவர் அணிந்திருக்கும் பட்டுடை செம்பொன் போன்று சிவப்பாக இருக்கும். உமையுடையவும், மகேசனுடையவும் திருக்குமாரனை நாங்கள் பணிந்து தொழுகின்றோம். எங்களுக்கு அதுவே போதும். வேறு எதுவுமே வேண்டாம். அவனை அணுகி அன்புடன் வணங்கி அடைய வேண்டிய செல்வங்களை யெல்லாம் அடைந்திடுவோம்.

४२ मण्डितवेदशिखण्डैः खण्डितदनुजौघचण्डभुजदण्डैः ।
चण्डीश भाग्यषण्डैः दण्डितदुरितोऽस्मि मङ्गलकरण्डैः ॥

மண்டிதவேதசிகண்டை: கண்டிததனுஜௌக
சண்டபுஜதண்டை: |
சண்டீச பாக்யஷண்டை: தண்டிததுரிதோ
ஸ்மி மங்கல கரண்டை: ||

வேதாந்தங்கள் வேல்முருகனின் திருக்கல்யாண குணங்களை மொழிகின்றன. அந்த வேதாந்தங்க

ளுக்கு முருகன் தனிப்பொலிவைத் தருகின்றார். சாத்வீக குணம் உடைய நல்லோரைத் துன்புறுத்தும் தீயோர்களாகிய அரக்கர் கூட்டத்தை நீண்ட, உருண்ட பன்னிருகைகளால் அடியோடு அழித்திடும் அழகர் அவர். அன்பரைக் காக்கும் திரிபுர சுந்தரியுடையவும் காமேஸ்வரருடையவும் பாக்கியத்தின் குவியலாக விளங்குகிறார். இவ்வுலகில் எல்லோருக்கும் ஏற்படும் எல்லாவித நன்மைகளுக்கும் இவரே காரணமாவார். இத்தகைய முருகப் பெருமான் எங்கள் பாவங்கள் அனைத்தும் அழித்து விட்டார்.

४३ फुल्लारविन्ददाम्ना कल्हाराद्रीन्द्रशृङ्गकृतधाम्ना ।
नाम्ना रञ्जितसाम्ना केनचिदाराजि मङ्गलमहिम्ना ॥

புல்லாரவிந்ததாம்நா கல்ஹாராத்ரீந்த்ர-
ச்ருங்கக்ருததாம்நா ।
நாம்நா ரஞ்ஜிதஸாம்நா கேனசிதாராஜி
மங்கலமஹிம்ணு ॥

எம்பெருமான் எழிலும் மலர்ச்சியையும் உடைய தாமரை மலர்களை சூடியுள்ளார். 'கந்தசைலம்' எனப்படும் திருச்செந்தூரில் கோயில் கொண்டுள்ளார். இந்த பெருமானின் திருப்புகழ் பாவத்தைப் போக்கிப் புண்ணியத்தை நல்கும். ஒப்பற்ற திருநாமம் கொண்ட குகப் பெருமான் எல்லோருக்கும் மேலான பரம் பொருளாகத் திகழ்கின்றார்.

४४ अलमलमशक्तिहस्तैः अमुकुटमस्तैरवेदविन्यस्तैः ।
भक्तानामसमस्तैः अपरैरमहेश्वराङ्कतलशस्तैः ॥

அலமலமசக்திஹஸ்தை: அமுகுடமஸ்தை-
ரவேதவிந்யஸ்தை: |
பக்தாநாம்ஸமஸ்தை: அமரைரமஹேச்வரா-
ங்கதலசஸ்தை: ||

வேல் தாங்கும் கைகள் இல்லாத கடவுள் எங்களுக்கு வேண்டாம். மகுடங்களால் அலங்கரிக்கப்பட்ட ஆறுதலைகள் இல்லாத ஆண்டவனை நாங்கள் விரும்பமாட்டோம். வேதங்களால் பாராட்டப்படாத பிற தெய்வங்களை நாங்கள் வணங்க மாட்டோம். பரமனுடையவும் பராசக்தியுடையவும் மடியிலிருந்து மழலை மொழியாத தெய்வங்கள் எங்களுக்குத் தேவையில்லை. அடியார்கள் விரும்பும் அனைத்தையும் அள்ளி வழங்காத கடவுள்கள் எங்களுக்கு வேண்டாம். முருகப் பெருமானின் மகிமைகளை மறைகள் பறை அறைகின்றன. உலகின் பெற்றோர்களான பரமனும் பார்வதியும் முருகனைச் சீராட்டி பாராட்டி வளர்ந்துள்ளனர். அடியார்க்கு நல்ல பெருமானாகிய முருகன் எல்லோருடைய மன விருப்பங்களையும் நிறைவேற்றி வைக்கின்றார். அவரே எங்களின் துணையாவர்.

४५ दूराददाहि दुरितं शूराद्यसुरौघतूलदहनेन ।
सारेण केनचिन्मे मारारातेर्गृहस्थभावस्य ।।

தூராததாஹி துரிதம் சூராத்யஸுரௌக தூல
தஹனேன |
ஸாரேண கேனசின்மே மாராராதேர்
க்ருஹஸ்தபாவஸ்ய ||

முருகன் அரக்கர் இனத்தை வென்ற அழகனு வான். அரக்கர் கூட்டமாகிய பஞ்சுப் பொதிக்கு அவன் நெருப்பாக இருந்தான். காமனைக் கண்ணுல் எரித்த திரியம்பகனின் திருக்குமாரனுகிய முருகன் நிகரிலாப் புகழாளனுவான். அப்பெருமானின் தனிப் பெருங்கருணையால் என் பாவங்கள் அனைத்தும் பொசுங்கிச் சாயபலாயின.

४६ आशास्महे सदा वयमाशाधीशोच्चमौलिपीठाय ।
श्रुतिचूडोत्तंसाय प्रमथाधीशात्मजांघ्रिकमलाय ॥

அசாஸ்மஹே ஸதா வயமாசாதீசோச்ச
மௌலி பீடாய ।
ச்ருதி சூடோத்தம்ஸாய ப்ரமதா தீசாத்ம
ஜாங்க்ரிகமலாய ॥

இந்திரன், அக்கினி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், ஆதிசேஷன், பிரம்மதேவன் ஆகியோர் பத்து திசைகளுக்கும் தலைவராவர். இவர்கள் தம் தலைகளால் முருகனின் தாளை வணங்குகின்றனர். உபநிஷதங்கள் வேதங்களின் தலைகளாகும். அந்த உபநிஷதங்களுக்கு முருகனின் திருவடிகள் அணிகலன்களாக விளங்குகின்றன. பிரமதகணங்களின் தலைவரான சிவனார் மகனின் திருப்பாதங்களை எப்போதும் வணங்கி வாழ்த்துகிறோம்.

४७ आम्नायशिखरवेद्यादानतसल्लोकभवरुजां वैद्यात् ।
आद्याच्चराचराणां हृद्यात्पित्रोः किमन्यदवलम्बे ॥

ஆம்நாயசிகரவேத்யா தானதஸல்லோக பவ–
ருஜாம் வைத்யாத்

ஆத்யாச்சராசராணும் ஹ்ருத்யாத்பித்ரோ:
கிமன்ய தவலம்பே ||

மறை முடிகளால் மட்டுமே முருகனை அறிய இயலும். தன்னை அடிபணிந்து வழிபடும் அடியவர்களின் பவப்பிணியை தீர்த்திடும் தலைசிறந்த மருத்துவனாக முருகன் திகழ்கின்றான். அசையும் பொருட்களாலும். அசையாப் பொருட்களாலும் ஆகிய உலகின் பெற்றோர்களான சிவனும் சிவையும் செல்வக்குமாரனையே மிகவும் விரும்புகின்றனர். முழுமுதற்கடவுளான முருகனைத் தவிர வேறு ஒரு தெய்வத்தையும் நான் வழிபட மாட்டேன்.

४८ अमराभयङ्कराणां तिमिरारीणामपाङ्गसुषमासु ।
चमराणां श्रुतिवन्या वयमिह दासाश्चिदिन्दुकिरणानाम् ।

அமராபயங்கராணும் திமிராரீணுமபாங்க
ஸுஷமாஸு !
சமராணும் ச்ருதிவந்யா வயமிஹ தாஸாச்சி
திந்துகிரணுணும் ||

கந்தப்பெருமானின் கடைக்கண் பார்வை வானவர்களின் அச்சத்தை அறவே போக்கி அவர்களுக்கு அபயத்தை அளித்தது. அடியார்களின் அகத்திலும் புறத்திலும் உள்ள இருளை ஓட்டுகிறது. வேதங்களாகிய காடுகளில் உலவும் எழில்மிகு கண்கள் உள்ள சமரி எனப்படும் மான்களாக இப்பெருமான் கண்பார்வை திகழ்கிறது. ஞான வடிவமான, பரம் பொருளாகிய சந்திரனின் ஒளியாக முருகனின் கண் பார்வை திகழ்கிறது. இத்தகைய மேன்மை உடையகடைக்கண் பார்வைக்காக நான் ஏங்குகிறேன்.

४९ पर्याप्तचन्द्रवदने पर्वतपुत्रीशुभाङ्कमणिसदने ।
परिहृतसुरारिकदने मदने वल्लया मनोऽवलग्नं नः ॥

பர்யாப்தசந்த்ரவதனே பர்வதபுத்ரீசுபாங்க
மணிஸதனே ।
பரிஹ்ருதஸுராரிகதனே மதனே வல்லயா
மனோऽவலக்னம் ந: ॥

முருகனின் திருமுகம் பௌர்ணமி திதியில் விளங்கும் பூரண நிலவைப் போன்று திகழ்கின்றது. மலைகளின் மங்கலமான மடியாகிய மணி மண்டபத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றார். தேவர்களுக்கு அரக்கர்களால் ஏற்பட்ட அளவற்ற அல்லல்களை அகற்றியவர் இவரே. வள்ளித்தேவியின் ஆருயிர் காதலராகிய இம்முருகப் பெருமான் "என் உள்ளம் கவர் கள்வனாக"த் திகழ்கின்றார்.

५० तरुणारुण किरणावलि परिणामस्फुरणचरण तरुणाब्जे ।
चरणायुधध्वजेऽहं करुणाम्भोधौ निमग्नभावोऽस्मि ॥

தருணாருண கிரணாவளி பரிணாமஸ்புரணசரண
தருணாப்ஜே ।
சரணாயுதத்வஜேऽஹம் கருணாம்போதௌ
நிமக்னபாவோऽஸ்மி ॥

எழுகின்ற கதிரவன் செக்கச்சிவந்திருப்பான். கந்தப்பெருமானின் திருவடித் தாமரைகள் உதய சூரியனைப் போலச் சிவந்து ஒளிரும். கோழி தன் கால்களால் பிற கோழிகளோடு போரிடும். காலையே ஆயுதமாகக் கொண்டு போரிடும் கோழியைத் தன் கொடியில் முருகன் கொண்டுள்ளான். ("சேவற்

கொடியோன்” என்ற சிறப்புப் பெயரும் முருக னுக்கு ஏற்பட்டது) கருணைக் கடலாக விளங்கும் கந்தப்பெருமானின் திருவடிகளில் என் உடல், பொருள், ஆவிஆகிய மூன்றுடன் என் உள்ளத் தைச் சமர்ப்பித்து விட்டேன்.

५१. यस्मिंस्त्रेधा विलसति मृषा जागती वृत्तिरेषा
यस्य स्फूर्त्या व्रजति सहसा चिन्मयी तन्मयीत्वम् ।
योऽस्तं याते स्फुरति हृदये निर्विकलपे समाधौ
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

யஸ்மிம் ஸ்த்ரேதா விலஸதி ம்ருஷா ஜாகதீ
விருத்திரேஷா
யஸ்ய ஸ்பூர்த்யா வ்ரஜதி ஸஹஸா
சின்மயீ தன்மயீத்வம் ।
யோஸ்தம் யாதே ஸ்புரதி ஹ்ருதயே
நிர்விகல்பே ஸமாதௌ
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோ஽ஸ்து
நஸ்தாபசாந்த்யை ॥

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணத்திலும், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலத்திலும், நினைவு, கனவு, தூக்கம் என்ற மூன்று நிலையிலும், நம்மால் அனுபவிக்கப்படும் இவ்வுலகமானது, சிப்பியில் வெள்ளிபோன்று எந்த ஒரு தத்வத்தில் பொய்யாகவே துலங்குகின்றதோ, வேதாந்தங்களில் வருணிக்கப்படும் சித் எனப் படும் பிரும்ஹ ஜோதியானது எந்தத் தத்துவத் தின் பிரகாசத்தில் இரண்டறக் கலந்து துலங்குகின்

றதோ, மனமும் ஒடுங்கிய நிர்விகல்ப ஸமாதியில் எந்த தத்துவம் ஒளிகளுடன் விளங்குகின்றதோ, அத்தகைய (குஹப் பெருமானுகிய) பார்வதீ பரமேஸ்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய ஆத்யாத்மிக (உடலில், கை, கால், தலை, கண், காது முதலிய உறுப்புக்களில் தோன்றும் பிணியால் ஏற்படும்) ஸந்தாபத்தையும், ஆதிபௌதிக (பகைவன், பறவை, விலங்கு முதலியவைகளால் நேரிடும்) ஸந்தாபத்தையும், ஆதிதெய்விக (இடி, மழை, பூதம், பிசாசம், ராக்ஷஸன் முதலியவைகளால் ஏற்படும்) ஸந்தாபத்தையும் தணித்து நம்மைக் குளிரச் செய்யட்டும்.

५२. यस्यैकांशाज्जगति सकलाः प्राणिनः प्राणवन्तः
यस्याख्याने निगमशिखरं नाप कां कामवस्थाम् ।
नान्तश्शोको भवति भजतां यस्य लेशोपलब्धेः
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

ய்ஸ்யைகாம்சாஜ்ஜகதி ஸகலா: ப்ராணின: ப்ராணவந்த:
யஸ்யாக்யானே நிகமசிகரம் நாப காம் காமவஸ்தாம் ।
நாந்தச்சோகோ பவதி பஜதாம் யஸ்ய லேசோபலப்தே:
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து நஸ்தாபசாந்த்யை ॥

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், புருஷன் எனப்படும் எட்டு வடிவங்களில் இருப்பதால் சிவபெருமான் அஷ்ட-

மூர்த்தி எனப்படுகின்றார். சிவகுமாரன் சிவபெருமானைக் காட்டிலும் வேறுபடாதவராகின்றார். எனவே அவருடைய எட்டு மூர்த்திகளில் ஒன்றான காற்றிலேயே இவ்வுலகில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் உயிரை அடைந்திருக்கின்றன. குமரப் பெருமானின் புகழைப்பற்றிப் பேசுவதற்கு மறைமுடிகள், சொல்லொணாத கஷ்டத்தை அனுபவிக்கின்றன. அவரை தியானம் செய்ய வழிபடும் அடியார்களின் உள்ளத்தில் குமரப் பெருமானுடைய திருவுருவம் சிறிது தோன்றிய உடனேயே அடியார்களின் உள்ளத்திலுள்ள துன்பம் மறைந்து விடுகின்றது. அத்தகைய சிறப்பு வாய்ந்த குஹப்பெருமானாகிய பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய மூன்று விதமான ஸந்தாபத்தைத் தணித்து நம்மைக் குளிரச் செய்யட்டும்.

५३. क्लान्ताः क्लान्ता यमनु निगमाः सङ्गिरन्ते गिरं ते
यन्निर्णेतुं सपदि मुनयः साध्वसं ते लभन्ते ।
मौनेनैवाभिनयति जगद्देशिको यस्य तत्त्वं
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

க்லாந்தா: க்லாந்தா யமனு நிகமா:
ஸங்கிரந்தே கிரம் தே
யந்நிர்ணேதும் ஸபதி முனய: ஸாத்வஸம்
தே லபந்தே ।
மௌனேனைவாபிநயதி ஜகத்தேசிகோ யஸ்ய
தத்த்வம்
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நஸ்தாபசாந்த்யை ॥

எந்த ஷண்முகப் பெருமானுடைய பெருமையை வேதங்கள் அனைத்தும் மெல்ல சிரமத்துடனேயே வருணிக்கின்றனவோ, எந்தக் குமரப்பெருமானுடைய உண்மையான உருவத்தை உடனேயே ஆராய்ந்து தீர்மானித்துக் கூறுவதற்கு, முக்காலமுணர்ந்த முனிவர்களும்கூட அச்சமுற்றிருக்கின்றனரோ, உலகத்திற்கு ஆதிகுருவும், கைலயங்கிரியில் ஆலமரத்தடியில் தென்திசை நோக்கி அமர்ந்திருப்பவரும், தக்ஷிணாமூர்த்தியுமான ஸதாசிவனும் எந்த குமரக் கடவுளின் உண்மை ஸ்வரூபத்தை (வாய் திறந்து கூற முடியாமல்) மௌனமாக இருக்கின்றாரோ, அத்தகைய பெருமை வாய்ந்த குஹப் பெருமானாகிய பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய மூன்று விதமான தாபத்தையும் தணித்து நம்மை குளிரச் செய்யட்டும்.

५४. यस्यावाप्त्यै शमधनततिर्याति नानापथेन
प्राप्तो यो यैर्जगति विरलाः सर्वथा सर्वदा ते ।
यः प्राप्येताश्रितशमदमैः संयमे स्वात्मरूपः
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

யஸ்யாவாப்த்யை சமதனததிர்யாதி நாநா
பதேன
ப்ராப்தோ யோ யைர்ஜகதி விரளா:
ஸர்வதா ஸர்வதா தே ।

ய: ப்ராப்யேதாச்ரிதசமதமை: ஸம்யமே
ஸ்வாத்மரூப:
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து நஸ்
தாபசாந்த்யை ||

எந்தக் குஹப்பெருமானை அடைவதற்கு, தானம், தவம், யோகம், யாகம் முதலிய பலவிதமான வழிகளில், அமைதியையே செல்வமாகக் கொண்ட மஹான்கள் கூட்டம் கூட்டமாகப் பாடுபடுகின்றனரோ, அங்ஙனம் இவ்வுலகில் எப்பொழுதும் எல்லா வழியிலும் பாடுபடுகின்ற அடியார்களுள் அப்பெருமானை ஏதோ ஒரு சிலரே வந்தடைந்தனரோ, மனத்தையும் புலன்களையும் அடக்கிய சில பெரியார்களால் ஸமாதி நிலையில் தங்களுடை ஆத்மஸ்வரூபமாகவே எந்த குஹப்பெருமான் அனுபவிக்கப் படுகின்றாரோ, அத்தகைய குஹனாகிய பார்வதீ பரமேஸ்வரர்களுடைய ஆனந்தப்பெருக்கானது நம்முடைய மூன்றுவிதமான ஸந்தாபத்தைத் தணித்து நம்மைக் குளிரும்படி செய்யட்டும்.

५५ नाशापाशाकुलितमनसां भासते यत्प्रभावो-
ऽप्यात्माधारं निखिलकरणं नेक्षते यं पराक्त्वात् ।
जानन्त्यन्ये क्वचन समये यन्मयानेव सर्वान्
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

நாசாபாசாகுலிதமனஸாம் பாஸதே யத்ப்ர
பாவோ
ऽப்யாத்மாதாரம் நிகிலகரணம் நேக்ஷதே
யம் பராக்த்வாத் |

ஜானந்த்யந்யே க்வசன ஸமயே யன்மயா
னேவ ஸர்வான்
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நஸ்தாபசாந்த்யை ||

எந்தக் குஹப்பெருமானுடைய மஹிமையானது, மண், பெண், பொன், மக்கள் முதலிய பொருள்களிலிருக்கும் அறுக்க முடியாத பற்றினால் எப்பொழுதும் கலக்கமுற்றிருக்கும்உள்ளத்தை உடைய மாந்தர்களுக்கு விளங்குவதில்லையோ, எங்கும் அந்தர்யாமியாய் இருக்கும் குஹனிடத்திலேயே நிலைபெற்றிருப்பினும் கண், காது முதலிய புலன்கள் வெளியிலுள்ளப் பொருளையே நாடுகின்றவைகளாய், தனது ஆதாரமாக இருக்கும் எந்தக் குஹனைக் காண்பதற்குத் திறமை அற்றவைகளாகின்றனவோ, புண்ணியம் செய்த ஒரு சில மஹான்கள், ஸமாதி நிலையில், புலன்களை அடக்கி, உள்ளத்தை குஹப்பெருமானிடம் நிலைபெறச் செய்து, வெளி உலகம் அனைத்தையும் மறந்து, எல்லாவற்றையும் எந்தக்குஹவடிவமாகவே காண்கின்றனரோ, அத்தகைய குஹனாகிய பார்வதீபரமேஸ்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய தாபத்தைத் தணித்து நம்மைக் குளிரும்படிச் செய்யட்டும்.

[குறிப்பு: "पराञ्चि खानि व्यातृणत्स्वयम्भूः"
"பராஞ்சி கானி வ்யத்ருணத்ஸ்வயம்பூ:" பிரம்மதேவன் புலன்களை வெளிவிஷயங்களை நாடிச் செல்லும்படி படைத்திருக்கின்றான் என்பதும் 'कश्चिद्धीरः प्रत्यगात्मानमैक्षत्', "கச்சித்தீர: ப்ரத்யகாத்,

மானமைக்ஷத்'', உள்ளத்தை அடக்கிய மஹான் வெளிவிஷயத்தை நோக்காமல் உள்ளிருக்கும்படி தனது ஆத்மஸ்வரூபத்தைக் காண்கின்றான் என்பதுமான கடோபநிஷத்தின் பொருள் இங்கு பொருத்தப்படுகின்றது.]

५६ प्राणापानौ गलितगमनौ यत्र यत्रान्तरङ्गम्
निर्व्यासङ्गं निखिलकरणं यत्र लुप्तप्रमाणम् ।
तत्रासीना ददृशुरपरे भासुरान् यत्प्रसादान्
प्रेमासारः परवशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

ப்ராணாபானௌ கலிதமனௌ யத்ர யத்ராந் தரங்கம்
நிர்வ்யாஸங்கம் நிகிலகரணம் யத்ர லுப்த ப்ரமாணம் |
தத்ராஸீனா தத்ருசுரபரே பாஸுராந் யத் ப்ரஸாதான்
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து நஸ்தாபசாந்த்யை ||

எந்தக் குஹப்பெருமானுடைய உண்மை ஸ்வரூபத்தைத் துலங்கும்படிச் செய்வதற்குப் பிராணன், அபானன் என்ற வாயுக்களும் (அதுபோலவே, வியானன், உதானன், ஸமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்ஜயன் என்பபடும் உடலிலுள்ள மற்ற வாயுக்களும்) திறமை அற்றவைகளோ, யாதொரு குஹனை மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் எனப்படும் இதயத்தினுள்ளிருக்கும் அந்தக்கரணமும் அணுகமுடியாமல் அகன்று நிற்கின்றதோ, எந்த ஷண்முகனை அறிவ

தற்கு முற்பட்ட அறிவிற்கும் தொழிலுக்கும் கார ணமான, கண், காது, கை, கால் முதலிய புலன் கள் அறிவிக்க முடியாமல் ஸாமர்த்யத்தை இழந்து அழிந்து விடுகின்றனவோ, மாயைக்கும் அப்பால் இருக்கும் யாதொரு ஸுப்ரமணியஸ்வரூபத்தை உள்ளத்தில் தியானம் செய்யும் மஹான்கள் அவன் அருளால், ஸமாதியில் தோன்றும் பலவிதமான அதிசயங்களைக் கண்டு களிக்கின்றனரோ, அத்த கைய குஹஸ்வரூபமான பார்வதீ பரமேச்வரர்களு டைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய தாபத் தைத் தணித்து உள்ளத்தைக் குளிரச் செய்யட்டும்.

குஹக்கடவுளுடைய உண்மையான ஸ்வரூபம், பிராணன், புலன், மனம் ஆகியவைகளுக்கு எட்டா தது. வேதாந்தங்களால் உபதேசிக்கப்பட்ட முறை யைத் தழுவி உள்ளம் ஒடுங்கும் ஸமாதியால் மட்டு மே அறியத் தகுந்தது என்பது கருத்து.

௫௭ किं नीहारः किममृतकरः किं रविः किं नु धूमः :
किं खद्योतः किमु हुतवहः किं तटित् किं नु हीरः ।
इत्युल्लेख्यो भवति यमिभिर्यत्प्रसादः समाधौ
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

கிம் நீஹார: கிமம்ருதகர: கிம் ரவி: கிம் நு
தூம:
கிம் கத்யோத: கிமு ஹுதவஹ: கிம் தடித்
கிம் நு ஹீர: ।
இத்யுல்லேக்யோ பவதி யமிபிர்யத்ப்ரஸாத:
ஸமாதௌ
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நஸ்தாபசாந்த்யை ॥

யோகவழியில் கந்தப் பெருமானை வழிபடும் மஹான்கள், யோக சாஸ்திரத்தில் கூறியபடி, யம நியமங்களை அனுஷ்டித்து, ஓரிடத்தில் ஆஸனத்தில் அமர்ந்து, ப்ராணாயாம முறையில் உடலில் ஸஞ்சரிக்கும் ப்ராணன் முதலிய வாயுக்களை அடக்கி, புலன்களை வெளிவிஷயங்களில் செல்லாதபடி ப்ரத்யாஹாரம் என்ற முறையில் தடுத்து, உள்ளத்தில் ஒடுக்கி, அவ்வுள்ளத்தைக் குஹக்கடவுளிடம் நிலை பெறச் செய்து, தாரணை, தியானம் இவைகளின் வழியே ஸமாதி நிலையை அடைகின்றனர். அந் நிலையில், குமரகுருவின் அருளால், பனி, சந்திரன், சூர்யன், புகை, மின்மினிப் பூச்சி, அக்னி, மின்னல், வைரம், ஆகிய பொருள்களின் நிறம் போன்ற நிறமுள்ள ஒளியை அனுபவிக்கின்றனர். அத்தகைய குஹஸ்வரூபமான பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய தாபத்தைத் தணித்து உள்ளத்தைக் குளிரச் செய்யட்டும்.

[குறிப்பு: மோக்ஷத்தை விரும்பி யோக மார்க்கத்தினைக் கையாண்ட பெரியவர்கள் அவ்வழியைப் பலவிதமாகக் கூறுகின்றனர் "तस्मिन् शुक्लमुत नीलमाहुः पिङ्गलं हरितं लोहितं च" தஸ்மின் சுக்லமுத நீல மாஹு: பிங்கலம் ஹரிதம் லோஹிதம் ச" என்று பிருஹதாரண்யக உபநிஷத்தில் 4வது அத்யாயம் 4வது பிரமாணம் 9வது மந்திரத்தின் பொருள் இங்கு விளக்கப்பட்டது]

५८. मूलाधारे हृदि मणिपुरे स्वास्पदे तालुमूले
चेतस्स्थाने ध्रुवशशिगृहे नैकधा सिद्धिलुब्धाः।
यं कुर्वन्तः सपदि कृतिनः स्वेप्सितान्याप्नुवन्ति
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

மூலதாரே ஹ்ருதி மணிபுரே ஸ்வாஸ்பதே
தாலுமூலே
சேதஸ்ஸ்தானே த்ருவசசிக்ருஹே நைகதா
ஸித்திலுப்தா: ।
யம் குர்வந்த: ஸபதி க்ருதின: ஸ்வேப்ஸி-
தாந்யாப்னுவந்தி
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நாஸ்தாபசாந்த்யை ॥

யோக வயிழில் உள்ளத்தை ஒடுக்கியபின் அடையத்தகுந்த பலவிதமான ஸித்திகளை அடைவதற்கு விருப்பமுள்ள மஹான்கள்பலர் பலவிதமாகக் குஹனை வழிபடுகின்றனர். சிலர் உடலினுள் குஹ்யேந்திரியத்திற்குக் கீழே உள்ளதும், மலத்வாரத்திற்கு மேலே உள்ளதும், நெருப்பை ஒத்த நிறமுள்ளதும், व, श, ष, स என்ற எழுத்துக்களை உடையதும், நான்கு இதழ் கொண்ட தாமரைப்பூ வடிவமுள்ளதுமான மூலாதாரச் சக்கரத்தில் ஷண்முகனை வழிபடுகின்றனர். வேறு சிலர் குஹ்யேந்திரியத்திற்கு நேராக உள்ளே இருப்பதும், சூரியனை ஒத்த நிறமுள்ளதும், "ब, भ, म, य, र, ल" என்ற எழுத்துக்களை உடையதும், ஆறு இதழ் தாமரைப்பூ வடிவமுள்ளதுமான ஸ்வாதிஷ்டானச்

சக்கரத்தில் ஆறு முகனை உபாஸிக்கின்றனர். வேறு சிலர், நாபிக்கு நேராக உள்ளே இருப்பதும், சிவந்த நிறம் உள்ளதும், "ड, ढ, ण, त, थ, द, ध, न, प, फ" என்ற எழுத்துக்கள் கொண்டதும், பத்து இதழ் தாமரைப்பூ வடிவமுள்ளதுமான மணிபூரகம் எனப்படும் சக்கரத்தில் குஹனைத் தியானம் செய்கின்றனர். மற்றும் சிலர், மார்புக்கு நேருக உள்ளே இருப்பதும், தங்கத்தைப் போன்று மஞ்சள் நிறம் உள்ளதும், "क ख ग घ ङ च छ ज झ ञ ट ठ" என்ற எழுத்துக்கள் நிறைந்ததும், பன்னிரண்டு இதழ் கொண்ட பத்மத்தின் உருவம் உடையதுமான அநாஹதம் எனப்படும் சக்கரத்தில் பன்னிருகையனைப் பஜிக்கின்றனர். வேறுபலர் இருதாடைகளும் ஒன்று சேரும் இடமானதும், கழுத்திற்கு நேராக உட்புறத்தில் இருப்பதும், சந்திரனைப்போன்ற நிறம் உள்ளதும், "अ आ इ ई उ ऊ ऋ ॠ ऌ ॡ ए ऐ ओ औ अं अः" என்ற எழுத்துக்கள் உடையதும், பதினாறு இதழ் கமலத்தின் உருவம் கொண்டதுமான விசுத்தி சக்கரத்தில் ஸுப்ரமண்யக் கடவுளை உபாஸிக்கின்றனர். வேறு சிலர், புருவங்கள் இரண்டிற்கும் நடுவே நெற்றியின் உட்புறத்தில் உள்ளதும், மிகவும் சிவந்த நிறம் உள்ளதும் "ह क्ष" என்ற எழுத்துக்கள் கொண்டதும், இரண்டு இதழ் தாமரைப்பூ வடிவமுள்ளதுமான ஆஜ்ஞா சக்கரத்திற்கு மேல் பக்கத்தில் தலையின் நடுவே உட்புறத்தில் இருப்பதும், ஓங்காரமயமானதும், பாலைப்போன்று வெண்ணிறமான ஒளிகள் நிறைந்ததும், ஆயிரம் இதழ் கொண்ட பத்மத்தின் உருவம் உள்ளதும், நிலையான ஆனந்தத்திற்கு இருப்பிடமானதும், ஸதாசிவ

ஸ்வரூபமான ஸ்ஹஸ்ரார சக்கரத்தில் கார்த்திகே யனை ஆராதிக்கின்றனர். இவர்கள் அனைவரும் அங் ஙனம் குஹனை வழிபட்டு அவரவர்கள் விரும்பிய பயனைப் பெருகின்றனர். அத்தகைய குஹவடிவ மான பார்வதீ பரமேஸ்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது எங்களுடைய தாபத்தைத் தணித்து எங்களது உள்ளத்தைக் குளிரச் செய்யட்டும்.

௫௯. ब्राह्मीं ग्रन्थि प्रथममथ तां वैष्णवीं तां च रौद्रीम्
भित्त्वा केचिन्नियतमरुदाबद्धचेतश्शलाक्या ।
प्रौढोन्मन्यास्सुरतसमये यत्स्वरूपा भवन्ति
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

*ப்ராஹ்மீம் க்ரந்திம் ப்ரதமமத தாம் வைஷ்ண-
வீம் தாம்ச ரௌத்ரீம்
பித்த்வா கேசிந்நியதமருதாபத்த சேதச்சலா
க்யா ।
ப்ரௌடோந்மந்யாஸ்ஸுரதஸமயே
யத்ஸ்வரூபா பவந்தி
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நஸ்தாபசாந்த்யை ॥*

ஷண்முகனை ஸமாதியின் வழியாக வழிபடுவ தற்கு முற்பட்ட மஹான்கள் சிலர், பிராணாயாமம் என்ற முறையைத் தழுவி பிராணன் முதலிய வாயுக் களை அடக்கி அதன்மூலம் அடங்கிய சித்தமாகிய கட்டைப் பிளந்து எறியும் கெட்டியான இரும்புக் கம்பி போன்ற உபாயத்தால், உடலினுள் மூலா தாரத்தின் அருகாமையில் இருக்கும் "பிரும்மக்

ரந்தி" எனப்படும் கட்டையும் (முடிச்சையும்), மணிபூரகத்தின் பக்கத்தில் இருக்கும் "விஷ்ணு க்ரந்தி" என்ற கட்டையும் (முடிச்சையும்), அறவே அறுத்து (அவிழ்த்து), மிகவும் பெருமை வாய்ந்த "உன்மனீ" என்ற நிலையை அடைந்து பேரானந்தத்தை அனுபவிக்கும்போது யாதொரு குஹப்பெருமானுடன் இரண்டறக் கலந்துவிடுகின்றனரோ, அத்தகைய குஹாடிவமான பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப்பெருக்கானது நம்முடைய தாபங்களை அகற்றி நம்மைப் பேரானந்தத்திற்கு அழைத்துச் செல்லட்டும்.

௬௦. मुग्धस्मेराननकमलया नागराजन्यपुत्र्या
सौधे ज्योत्स्नास्फुरणविशदे निर्भयं केऽपि रन्त्वा ।
पादाब्जीयां मधुरमधुरां यस्य माध्वीं पिबन्ति
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

முக்தஸ்மேரானனகமலயா நாகராஜன்ய புத்ர்யா
ஸௌதே ஜ்யோத்ஸ்நாஸ்புரணவிசதே நிர்பயம் கேடபிரந்த்வா ।
பாதாப்ஜீயாம் மதுரமதுராம் யஸ்ய மாத்வீம் பிபந்தி
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோடஸ்து நஸ்தாபசாந்த்யை ॥

யோகி சிரேஷ்டர்களான சில மஹான்கள், (குண்டலமாக, வட்டமாக படுத்து உறங்கும் சக்தியை எழுந்து விழித்திருக்கும்படிச் செய்து) தாமரைப் பூ போன்று அழகிய சிரித்த முகத்துடன்

கூடிய குண்டலினீ சக்தியுடன், சரத்காலத்துச் சந்திரனுடைய சந்திரிகை போன்று வெண்மையாகப் பிரகாசிக்கின்ற, மேலே இருக்கும் (மாடி போன்ற) ஸஹஸ்ராரம் என்ற இடத்தை அச்சமின்றி அடைந்து, அச்சக்தியுடன் கூடி ஸந்தோஷித்து, எந்தக் குஹப் பெருமானுடை திருவடித் தாமரையிலிருந்து பெருகி வருகின்றதும், மிக்க இனிப்பானதுமான ஆனந்த ரூபமான தேனைப் பருகுகின்றனரோ, அத்தகைய குஹரூபமான, பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய தாபங்களை அகற்றி, நம்மைப் பேரானந்தத்தில் மூழ்கும்படிச் செய்யட்டும்.

---

६१. उत्तिष्ठन्त्यामुरगयुवतौ मञ्जुमञ्जीरनादम्
मन्दं मन्दं मुखसरसिजं मुक्तिमादर्शयन्तीम् ।
आलिङ्गन्ते सुलभमितरे यत्कृपापाङ्गसङ्गात्
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै

உத்திஷ்டந்த்யாமுரகயுவதௌ மஞ்ஜு
மஞ்ஜீர நாதம்
மந்தம் மந்தம் முகஸரஸிஜம் முக்திமாதர்ச
யந்தீம் ।
ஆலிங்கந்தே ஸுலபமிதரே யத்க்ருபாபாங்க
ஸங்காத்
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நஸ்தாபசாந்த்யை ॥

முந்திய பிறவிகளில் எண்ணிறந்த புண்ணியத்தைச் செய்ததன் பயனாய் யோக மார்க்கத்தில் செல்லும் சில மஹான்கள் அழகிய பாதச் சிலம்பின் ஒலி

போன்ற ஒலியை எழுப்பிக்கொண்டு பாம்பின் வடிவம் தாங்கிய குண்டலினீ சக்தி எனப்படும் பெண் விழித் தெழுந்து, முக்தியின் வாயிலான தன்னுடைய தாமரை போன்ற வதனத்தை மெல்ல அருகில் காண்பிக்கும்போது, அந்த மஹான்கள், யாதொரு குஹக் கடவுளின் கருணை நிறைந்த கடைக்கண் பார்வையின் சேர்க்கையால் எளிதி லேயே (சிறிதும் சிரமம் இன்றியே) அந்தச் சக்திப் பெண்ணைத் தழுவிக் கொள்கின்றனரோ, அந்த கைய குஹரூபமான பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய துயரங்கள் அனைத்தையும் துடைத்து நமக்கு பேரின்பம் கிடைக் கும்படி செய்யட்டும்.

६२. प्राज्ये राज्ये कलितहृदयाः केऽपि केऽप्यध्वराज्ये
योगैश्वर्ये कतिचन निजावाप्तिसौख्येऽपि केऽपि ।
संप्राप्तेष्टास्सपदि सकला यत्कृपापाङ्गसङ्गात्
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

ப்ராஜ்யே ராஜ்யே கலிதஹ்ருதயா: கேऽபி
கேऽப்யத்வராஜ்யே
யோகைச்வர்யே கதிசன நிஜாவாப்தி ஸௌக்ய—
க்யேऽபி கேऽபி ।
ஸம்ப்ராப்தேஷ்டாஸ்ஸபதி ஸகலா யத்க்ருபா
பாங்கஸங்காத்
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நஸ்தாபசாந்த்யை ॥

எல்லா விதமான செல்வச் சிறப்பும் நிறைந்த ஸாம்ராஜ்யத்தை அடைய விருப்பம் உள்ளவர்கள் அவர்களின் விருப்பப்படி ஸாம்ராஜ்யத்தையும், நெய், ஸமித், அன்னம் முதலிய பொருள்களை ஹோமம் செய்து யாகங்களை எப்பொழுதும் செய்து கொண்டிருக்க வேண்டுமென்ற விருப்பம் உள்ளவர்கள் அவ்விதமே வேள்விகளையும், அணிமாதி எட்டு ஸித்திகளைப் பெறுவதற்கு ஆசைப்படுகின்றவர்கள் அங்ஙனமே அஷ்டைச்வர்யத்தையும், அத்வைதமான ஸ்வரூபானந்தத்தையே பெறுவதற்கு ஆர்வம் உள்ளவர், அவர்கள் எண்ணியபடியே கைவல்யரூபமான ஸ்வரூபானத்தையும், இங்ஙனம் அனைவரும் அவரவர்கள் விரும்பிய பயனை, யாதொரு குஹப் பெருமானுடைய தயை நிறைந்த கடைக்கண் பார்வையின் சேர்க்கையால் அடைந்தனரோ அத்தகைய குஹரூபமான பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய துன்பங்களைத் துடைத்து நம்மை இன்பமுற்றிருக்கச் செய்யட்டும்.

६३. तारं तारं भवजलनिधेर्यन्मनोरग्रभागे
निक्षिप्यान्ये शरवणभवेत्यन्तरेवालपन्तः ।
आलिङ्गन्ते स्वयमुपनतां मुक्तिकान्तां प्रसन्नाम्
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

தாரம் தாரம் பவஜலநிதேர்யன்மனேரக்ர
பாகே
நிக்ஷிப்யாந்யே சரவணபவேத்யந்தரேவால-
பந்த: |
ஆலிங்கந்தே ஸ்வயமுபநதாம் முக்திகாந்தாம்
ப்ரஸந்நாம்
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோடஸ்து
நஸ்தாபசாந்த்யை ||

வேறு சில அடியார்கள் பிறப்பாகிய ஸம்ஸாரக் கடலிலிருந்து அடியார்களைக் கரையேற்றி விடுகின்றதான "ஓம்" என்ற எழுத்தை "சரவணபவ" என்ற மந்திரத்தின் முன்னதாகச் சேர்த்துக் கொண்டு உள்ளத்திலேயே அந்த மஹிமை வாய்ந்த மந்திரத்தை எப்பொழுதும் ஜபம் செய்துகொண்டு இருக்கின்றனர். அவர்களை ஸந்தோஷத்துடன் தானாகவே நாடிவந்த முக்தி என்னும் பெண்ணை அவர்கள் தழுவிக் கொள்கின்றனர். (முக்தியை அடைகின்றனர்). அத்தகைய குஹரூபமான பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய தாபத்தைத் தணித்து நம்மை ஸந்தோஷமுற்றிருக்கச் செய்யட்டும்.

६४. मायानूर्मनुवररविर्देशिकेन्द्रोदयाद्रेः
उद्यन्नेनस्तिमिरपटलीं शोचयन्शोकघूकान् ।
यस्यानन्दं दिशति परमं भक्तकोकावलीनां
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

மாயா நூருர்மனுவரரவிர்தேசிகேந்த்ரோ-
தயாத்ரே:
உத்யந்நேநஸ்திமிரபடலீம் சோசயந்சோக
கூகான் |
யஸ்யானந்தம் திசதி பரமம் பக்தகோகாவலீ
நாம்
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோSஸ்து
நஸ்தாபசாந்த்யை ||

கந்தப் பெருமானுடைய திருமந்திரங்களை நன்கு உணர்ந்த ஸத்குருவாகிய கிழக்குத் திக்கிலிருக்கும் உதய மலையிருந்து "மாயாபீஜம்" எனப் படும் "ஹ்ரீம்" என்ற எழுத்தாகிய அருணனை முன்னிட்டுக்கொண்டு, யாதொரு குஹப்பெருமானுடைய "சரவணபவ" என்ற திருமந்திரமாகிய கதிரவன் உதித்தவுடன் (வெளிவந்தவுடன்), அடியார்களுடைய உள்ளத்தில் இருக்கும் வருத்தங்களாகிய கோட்டான்கள் வருத்தமடைகின்றனவோ (தொலைந்து விடுகின்றனவோ), அறியாமை எனப்படும் (வேறு ஒரு ஒளிக் கூட்டத்தாலும் அகற்ற முடியாத) இருட்டுக் கூட்டமும் மறைந்துவிடுகின்றதோ, தன்னை வழிபடும் அடியார்களாகிய சக்ரவாகப் பறவைகளின் கூட்டம் எல்லையற்ற ஸந்தோஷத்தை அடைகின்றதோ, அத்தகைய குஹ வடிவமான பார்வதீ பரமேச்வர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய கவலைகளைக் களைந்து நமக்கு ஸகலவிதமான கல்யாணங்களையும் அளிக்கட்டும்.

६५. यन्मन्त्रस्यामरपुरतरोः काममूलस्य मूले
तिष्ठन्तो ये निखिलतरुणीनेत्रनीलोत्पलानाम् ।
जायन्ते तेऽप्यमृतरुचयो मूर्तिमन्तश्च कामाः
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

யன்மந்த்ரஸ்யாமரபுரதரோ: காமமூலஸ்ய
மூலே
திஷ்டந்தோ யே நிகிலதருணீ நேத்ரநீலோத்-
பலாநாம் ।
ஜாயந்தே தேऽப்யம்ருதருசயோ மூர்திமந்தச்ச
காமா:
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நஸ்தாபசாந்த்யை ॥

எல்லாவிதமான மங்களங்களையும் அளிப்பதற்குரிய திறமை வாய்ந்த "காமபீஜம்" எனப்படும் "க்ளீம்" என்ற எழுத்துடன் கூடிய குஹப்பெருமானுடைய "சரவணபவ" என்ற திருமந்திரமாகிய கல்பவிருக்ஷத்தின் அடியில், எந்த அடியார்கள் எப்பொழுதும் நின்று கொண்டிருக்கின்றனரோ (குஹப் பெருமானின் திருமந்திரத்தை இடைவிடாமல் ஆவர்த்தி செய்து கொண்டிருக்கின்றனரோ), அந்த அடியார்கள், இவ்வுலகிலுள்ள அழகிகளான எல்லாப் பெண்களுடையவும் நீலோத்பலம் போன்ற அழகிய கண்களுக்கு இன்பத்தை அளிக்கும் ஒளிகளுடைய உடல் அமைந்தவர்களாய், உருவத்தை அடைந்த மன்மதர்கள்போல விளங்கு

கின்றார்கள். அத்தகைய குஹரூபமான பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய ஆதிவியாதிகளை அகற்றி நமக்கு எல்லாவிதமான நன்மைகளையும் அளிக்கட்டும்.

६६. वागास्वाद्या मनुनवसुधा लिह्यते यैर्यदीया
तेषां वक्त्राद्वहति कविताकैतवात्स्व:स्रवन्ती ।
किञ्चाशेषं भुवनमयते दासतामीक्ष्यमाणं
प्रेमासार: परमशिवयो: सोऽस्तु नस्तापशान्त्यै ॥

வாகாஸ்வாத்யா மனுநவஸுதா லிஹ்யதே
யைர்யதீயா ।
தேஷாம் வக்த்ராத்வஹதி கவிதாகைதவாத்
ஸ்வ: ஸ்ரவந்தீ ।
கிஞ்சாசேஷம் புவனமயதே தாஸதா
மீக்ஷ்யமாணம்
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நஸ்தாபசாந்த்யை ॥

யாதொரு குமரக்கடவுளுடைய திருமந்திரமாகிய புதிய அமுதமானது, "வாக்பீஜம்" எனப்படும் "ஐம்" என்ற எழுத்துடன் சேர்ந்து, பாக்யம் செய்த எந்த அடியார்களால் நன்கு பருகப்படுகின்றதோ (நன்கு முறைப்படி ஜபம் செய்யப்படுகின்றதோ), அத்தகைய அடியார்களுடைய முகத்திலிருந்து "கவிதை" என்ற பெயரால் தேவங்கை பெருக்கெடுத்து ஓடுகின்றது. அந்த அடியார்களின் விருப்பப்படி உலகம் அனைத்தும் அடிமையாகி, அவர்

களுக்குப் பணி புரியக் காத்து நிற்கின்றது. அத்தகைய குஹரூபமான பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய துன்பங்களை அகற்றட்டும். நமக்கு வேண்டியவைகளைத் தந்தருளட்டும்.

६७. यन्मन्त्रेन्दुर्जलधितनयाज्योत्स्नया द्योत्यमानः
चित्ताकाशे स्फुरति विमले यस्य तस्योत्तमस्य ।
आपत्तापः प्रशममयते वृद्धिमामोदसिन्धुः
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

யன்மந்த்ரேந்துர்ஜலதிதனயா ஜ்யோத்ஸ்நயா
த்யோத்யமான:
சித்தாகாசே ஸ்புரதி விமலே யஸ்ய தஸ்யோத்
தமஸ்ய ।
ஆபத்தாப: ப்ரசமமயதே வ்ருத்திமாமோத
ஸிந்து:
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நஸ்தாபசாந்த்யை ।

முருகப்பெருமானுடைய திருமந்திரமாகிய சந்திரன், "லக்ஷ்மீபீஜம்" எனப்படும் "ஶ்ரீம்" என்ற எழுத்தாகிய நிலவுடன் சேர்ந்து, எந்த பக்தனுடைய தூய்மை வாய்ந்த உள்ளமாகிய வானத்தில் ஒளிகளுடன் துலங்குகின்றானோ (எந்த பக்தன் எப்பொழுதும் உள்ளத்தில் "ஶ்ரீம்" என்ற பீஜாக்ஷரத்துடன் "சரவணபவ" என்ற மந்திரத்தை இடைவிடாமல் தியானித்துக் கொண்டிருக்கின்றானோ),

அத்தகைய பக்தனுக்குப் பெரிய பெரிய விபத்துக்களால் நேரிடும் தாபமானது தணிந்து விடுகின்றது. அங்ஙனமே, விரும்பிய பொருள்கள் அனைத்தும் கிடைத்து, அதனால் ஏற்படும் இன்பமும் கடல் போன்று பொங்கி வளருகின்றது. அத்தகைய குஹரூபமான பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நமது பிணிகளைப் போக்கி நமக்கு எல்லா நலன்களுடனும் நீடூழி வாழ்வையும் அளிக்கட்டும்.

௬௧. मन्त्राकाराममरतटिनीं चन्द्रशैलाद्वहन्तीम्
यस्याचार्य प्रसृमरकृपासारपीयूषपूराम् ।
दिष्टयादृष्टया जगति विषयीकुर्वतां क्वाभितापाः ।
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

மந்த்ராகாராமமரதடினீம் சந்த்ரசைலாத்
வஹந்தீம்
யஸ்யாசார்ய ப்ரஸ்ருமரக்ருபாஸார பீயூஷ
பூராம் ।
திஷ்ட்யாத்ருஷ்ட்யா ஜகதி விஷயீகுர்வதாம்
க்வாபிதாபா:
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நஸ்தாபசாந்த்யை ॥

சந்திரனைத் தெய்வமாகக் கொண்ட மனதாகிய மலையிலிருந்து வெளித்தோன்றிய ஷண்முகப் பெருமானுடைய திருமந்திரமாகிய எந்தத் தேவகங்கையானது, ஸத்குருவினுடைய எல்லையற்ற தயையாகிய அமுதத்துடன் சேர்ந்து பெருக்கெடுத்து

ஓடுகின்றதோ, அத்தகைய கங்கையை, இவ்வுலகில் ஆனந்தமாக அனுபவித்து, அதனில் மூழ்கிக் கிடக்கும் பாக்யம் செய்த அடியார்களுக்கு ஒருவிதமான துன்பங்களும் நேருவதில்லை. (ஸத்குருவின் உபதேசத்தின்மூலம், ஒன்றுபட்ட மனத்துடன் எப்பொழுதும் "சரவணபவ" என்ற மந்திரத்தை உருவிடுவோருக்கு ஒரு குறையும் இல்லை என்பது கருத்து.) அத்தகைய குஹரூபமான பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நமது கஷ்டங்களை ஒடுக்கட்டும். நமது இஷ்டங்களைத் தடையின்றி ஏற்படும்படிச் செய்யட்டும்.

६९. त्रेधा साध्यं ज्वलनललनावर्मपाशाङ्कुशादीन्
शिष्टादिष्टे वपुषि विदधन् यन्मनोः कामधेनोः ।
दुग्धं दुग्धं पिबति कुशलं स्वेष्टमायासशून्यं
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

த்ரேதா ஸாத்யம் ஜ்வலனலலனுவர்மபாசா
ங்குசாதீன்
சிஷ்டாதிஷ்டே வபுஷி விததன் யன்மனோ:
காமதேனோ: ।
துக்தம் துக்தம் பிபதி குசலம் ஸ்வேஷ்ட-
மாயாஸ சூன்யம்
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நஸ்தாபசாந்த்யை ॥

எந்த ஒரு பக்தன் செம்பாலோ, வெள்ளியாலோ, பொன்னலோ, ஒரு யந்திரத்தைச் செய்து ,(தகட்டைச் செய்து), அதனில் மூன்று தடவைகள் ,இன்ன நக்ஷத்திரத்தில், இன்ன ராசியில் பிறந்த

இன்னை பெயருள்ளவனுக்கு விரும்பியவற்றை அளிப்பாயாக" "नक्षत्रे राशौ जातस्य शर्मणः अभीष्टं कुरु कुरु" ("நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய சர்மண: அபீஷ்டம் குரு குரு") என்று எழுதி, ஸ்வாஹா, கவசம், பாசம், அங்குசம் முதலியவற்றை எழுதி, ஸித்தி பெற்ற சிறந்த அறிவாளியான குருவின் உபதேசத்தின்படி, அடியார்களுக்கு விரும்பியவற்றை அளிக்கும் குஹமந்திரமான காமதேனுவையும் எழுதி, உடலில் தரிக்கின்றனே. அத்தகைய பக்தன், அந்தக் காமதேனுவிலிருந்து பெருகும் அபீஷ்டங்களான பாலைக் கறந்து, சிறிதும் சிரமம் இன்றிப் பருகுகின்றன். அத்தகைய குஹரூபமான பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நமது இன்னல்களை நாசம் செய்யட்டும். நமக்கு நன்மைகளை மேலும் மேலும் வளரும்படிச் செய்யட்டும்.

௭௦. षट्त्रिंशारैस्सहितमनुभिर्नागपत्रैस्सवीरैः
साङ्घ्रिभिः पर्णैस्सकमलवरास्त्रादिभिर्वृत्तभौमैः ।
युक्तं यन्त्रं दिशति भजतां यस्य सर्वान्पुमर्थान्
प्रेमासारः परमशिवयोः सोऽस्तु नस्तापशान्त्यै ॥

ஷட்த்ரிம்சாரைஸ்ஸஹிதமனுபிர் நாகபத்ரைஸ்
ஸவீரை:
ஸாங்க்ரிபி: பர்ணைஸ்ஸகமலவராஸ்த்ராதி
பிர்வ்ருத்தபௌமை: ।
யுக்தம் யந்த்ரம் திசதி பஜதாம் யஸ்ய ஸர்வாந்
புமர்தான்
ப்ரேமாஸார: பரமசிவயோ: ஸோऽஸ்து
நஸ்தாபசாந்த்யை ॥

ஒரு யந்திரத்தில் ஆறு ஆறுகோணங்களை எழுதி, முப்பத்தாறு கோணங்களுக்குள் குஹப்பெருமானின் திரு.மந்திரத்திலுள்ள அக்ஷரங்களை எழுதி, அதன்பின் எட்டிதழ் தாமரையை வரைந்து, அவ்விதழ்களில் 'அ' முதல் 'க்ஷ' வரை உள்ள வடமொழி எழுத்துக்கள் ஐம்பதையும் எழுதி, அதன்பின் எட்டிதழ் தாமரையை எழுதி, அவ்விதழ்களில் வரம், அஸ்திரம் முதலியவைகளை எழுதி, அதன்பின் ஒரு வட்டக்கோட்டையும், அதன்பின் "பூபுரம்" (भूपुरम्) எனப்படும் இரண்டு கோடுகளையும் எழுதி பெருமை வாய்ந்த குஹப்பெருமானுடைய யந்திரத்தை வழிபடுகின்றவர்களுக்கு அந்த யந்திரமானது அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் ஸகல புருஷார்த்தங்களையும் அளிக்கின்றது. அத்தகைய குஹவடிவமான பார்வதீ பரமேச்வரர்களுடைய ஆனந்தப் பெருக்கானது நம்முடைய துயரங்களைத் துடைத்து நமக்கு நன்மைகளை அளிக்கட்டும்.

७१. नाकाधीशविरोधिवामनयनाकोकावळीविस्फुर-
च्छोकांभोनिधिशारदाभ्रविलसद्राकानिशानायकम् ।
केकामञ्जुलपक्षिपुङ्गवरथं पाकारिजाकामुकम्
प्राकारं दृढमाश्रये दिविषदामेकाक्षराधं परम् ॥

நாகாதீசவிரோதி வாமநயநாகோகாவளீ
விஸ்புர-

ச்சோகாம்போநிதி சாரதாப்ரவிலஸத்ராகா
நிசாநாயகம் ।

கேகாமஞ்ஜுலபக்ஷிபுங்கவரதம் பாகாரிஜா-
காமுகம்

ப்ராகாரம் த்ருடமாச்ரயே திவிஷதாமேகாக்ஷ
ரார்தம் பரம் ॥

வானவர்களின் பகைவர்களான அசுரர்களு டைய மனைவிகளின் கூட்டமாகிய சக்கிரவாகப் பறவைகளுடைய வருத்தமாகிய கடலுக்குச் சரத் காலத்தில் வானவீதியில் துலங்கும், இரவினை உண்டு பண்ணுபவனான சந்திரனாக இருப்பவர். (இரவு நேரத்தில் பார்வை அற்ற சக்கரவாகப் பறவை துன்பமுற்றிருப்பது போன்று, கந்தப் பெருமானால் கொல்லப்பட்ட அஸுரர்களுடைய ஸ்திரீகள் துன்ப முற்றிருக்கிறார்கள் என்பது கருத்து.) கேகா என்று அழகிய ஒலியை எழுப்பும் மயிலை வாஹனம்ாகக் கொண்டவர். பாகாஸுரனைக் கொன்ற இந்திரனு டைய மகளான தேவஸேனையை மணந்தவர். ஓங் காரம் எனப்படும் ஏகாக்ஷரத்தின் பாதியான "ம்" என்ற அனுஸ்வார வடிவமானவர். தேவர்களைக் காக்கும் திடமான கோட்டையாக இருப்பவர். அத் தகைய குஹக்கடவுளையே அடைக்கலமாக அடைந் திருக்கின்றேன்.

௭௨. पाराशर्यवचः प्रपञ्चतटिनीपूरात्मकेलीलवो
दूरान्मुक्तशरप्रवाहशमितक्रूरासुरोषर्बुधः ।
माराराातिवधूशुभोदरसुधावाराशिचिन्तामणिः
घोरा दुःखपरंपराः शमयतु स्मेरामृतैरद्य नः ॥

பாராசர்யவச: ப்ரபஞ்சதடிநீபூராத்மகேளீ
லவோ
தூரான்முக்தசரப்ரவாஹசமிதக்ரூராஸுரோ
ஷர்புத: ।
மாராராதிவதூசுபோதரஸுதாவாராசி
சிந்தாமணி:
கோரா து:கபரம்பரா: சமயது ஸ்மேராம்ரு
தைரத்ய ந: ॥

பராசர முனிவரின் புதல்வர் வியாஸ முனிவரால் சிவபுராணம், ஸ்காந்த புராணம், மஹாபாரதம் முதலிய இலக்கியங்களில் அழகாக வருணிக்கப்படும் தனது திவ்விய கல்யாண குணங்களை உடையவர். வெகு தொலைவில் இருந்துகொண்டே தன்னுடைய அம்புகளாகிய மழையைப் பொழிந்து மிகக் கொடியவர்களும் கணக்கற்றவர்களுமான அஸுரர்களாகிய தீயை அணைத்தவர். காமனை எரித்த சிவனுடைய மனையாளான பார்வதீ தேவியினுடைய வயிறாகிய பாற்கடலிலிருந்து தோன்றிய சிந்தாமணி இரத்தினமாக இருப்பவர். அத்தகைய முருகக் கடவுள் இப்பொழுது தனது புன்சிரிப்பாகிய அமுதங்களை பொழிந்து மிகக் கொடியவைகளும் தொடர்ச்சியாய் ஏற்படுகின்றவைகளுமான துன்பங்களைப் போக்கடிக்கட்டும்.

७३. शेषाद्रीश्वरमौलिकेलिसदना भाषाधिदेव्युल्लसद्-
भाषा भूतगणामरारिपरिषद्द्वेषा परा देवता ।
एषास्तां मम मानसे शिवशिवोन्मेषा तुराषाड्भवद्
योषालिङ्गितविग्रहा प्रतिदिनं तोषाय भूषा श्रुते:॥

சேஷாத்ரீச்வரமௌளிகேளிஸதனா பாஷாதி
தேவ்யுல்லஸத்-
பாஷா பூதகணாமராரிபரிஷத்த்வேஷா பரா
தேவதா ।
ஏஷாஸ்தாம் மம மானஸே சிவசிவோந்மேஷா
துராஷாட்பவத்-
யோஷாலிங்கிதவிக்ரஹா ப்ரதிதினம்
தோஷாய பூஷா ச்ருதே: ॥

வெங்கடகிரி எனப்படும் திருப்பதித் திருத்தலத்தில் உயர்ந்த இடத்தில் கோயில்கொண்டு விளங்குபவர். சொல்லரசியான ஸரஸ்வதீ தேவியும் வியப்படையும் அளவிற்கு பேசும் திறமை உள்ளவர். கொடிய குணமுடைய பூதக் கூட்டங்களிடமும், வானவர்களின் பகைவர்களிடமும் வெறுப்பு அடைந்தவர். பார்வதியுடையவும், பரமசிவனுடையவும் கண்களுக்கு ஆனந்தத்தை அளிப்பவர். தேவேந்திரனுடைய மகள் தேவஸேனையால் அன்புடன் அணைத்துக்கொள்ளப்பட்டத் திருமேனியை உடையவர். வேதங்களுக்கு உயர்ந்த ஆபரணமாக இருப்பவர். அத்தகைய ஸுப்ரமணியக் கடவுள் எனப்படும் பெரிய தெய்வமானது தினந்தோறும் நான் ஸந்தோஷமுற்றிருக்க, என் உள்ளத்தில் எப்பொழுதும் வீற்றிருந்து தர்சனம் அளிக்கட்டும்.

[குறிப்பு: "शेषाद्रीश्वरमौळिकेलिसदना" "சேஷாத்ரீச்வரமௌளிகேலிஸதனா", "ஸ்ரீ வேங்கடகிரியின் சிகரத்தைத் தனது லீலைகளை வெளிப்படுத்தும் கோயிலாகக் கொண்டவர்" என்று ஸ்ரீ கோபாலகிருஷ்ண மஹாகவி" எனும் பெயர்கொண்ட இந்நூலாசிரியர் சுப்ரமண்யஸ்வாமியை வருணித்திருக்கின்றார். இக்கவி சுமார் 200 வருஷங்களுக்கு முன் இருந்த ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திரர் அவர்களின் சக மாணாக்கராவார்; "மஹாபாஷ்யம் கோபால கிருஷ்ண சாஸ்திரிகள்" என்று புகழ்பெற்று வடமொழி இலக்கண சாஸ்திரத்தினைப் பரப்புவதில் குலபதியாக (மூலபுருஷராக) இருந்தவர்; அக்கா

லத்திய புதுக்கோட்டை சமஸ்தானம் மஹாராஜா விற்குக் குருவாகத் திகழ்ந்தவர்; சிறந்த அறிவாளி; சுப்ரமண்ய பக்தர். அத்தகைய கவியின் இக்கூற்று மிகவும் பிரமாணமாகும். இதற்குத் தக்க சான்று களை இப்பெரியார் சிஷ்ய பரம்பரையின் வாயிலாகக் கூறியவைகளில் முக்கியமானவை பின்வருமாறு:

(i) குமாரனின் பிரசித்தி பெற்ற திருத்தலங், கள் பெரும்பாலும் குன்றின்மேலேயே அமைந்துள் ளது. உதாரணமாக முருகனது ஆறுபடை வீடுகள் மலைகளே. விஷ்ணு மூர்த்திக்குத் திருத்தலங்களாக மலைகள் காணப்படுவதில்லை.

ii) ஒவ்வொரு திருத்தலத்திற்கும் தலத்தின் தெய்வத்திற்குத் தீர்த்தமும் காணப்படுவது உண்டு. அத்தீர்த்தத்தின் பெயர் பெரும்பாலும் அத்தெய்வத்தின் தொடர்கொண்டதாக இருப்பது வழக்கம். உதாரணமாக, அனந்தை மா நகரில் ஸ்ரீபத்மனப திருத்தலத்திற்கு அருகாமையிலுள்ள தீர்த்தம் "பத்மதீர்த்தம்" என்று பெயர் கொண் டது. திருக்குடந்தையில் ஸ்ரீ ஆராவமுதப் பெரு மான் கோயிலை அடுத்திருக்கும் தீர்த்தம் "பொற் றாமரைக்குளம்" எனும் பெயர் கொண்டது. இவ் வாறே திருப்பதி திருத்தலத்தில் உள்ள தீர்த்தம் "ஸ்வாமி புஷ்கரணி" என்று அமைந்துள்ளதால் திருத்தலத்தின் தெய்வம் ஸ்வாமிநாதன் என்பது தெளிவு.

iii) தந்தை சொற்படி கந்தன் வேங்கடாசலத் தில் தவம் புரிந்ததாக வாமன மஹா புராணம் கூறுகின்றது.

iv) மூலஸ்தானத்தில் உள்ள மூர்த்திககு விஷ்ணுவைக் குறிக்கும் சங்கு, சக்கரம் இல்லாதது மட்டுமல்லாமல், சிவ குமாரனைக் குறிக்கும் சடையும், நாக ஆபரணமும் காணப்படுகின்றது. வைணவர்களால் போற்றிப் புகழப்படும் பிரசித்தமான மற்ற திருப்பதிகளில் இத்தகைய வேறுபாடு காணப்படுவதில்லை.

v) திருவேங்கடத்தில் சைவமான தெய்வங்களுக்கே உரியதான வில்வ இதழ்களால் அர்ச்சனை செய்யப்படுகின்றது. தேவிக்கும், குமரனுக்குமே திருமஞ்ஜனத்திற்கு உரியதான வெள்ளிக்கிழமை தோறும் திருமஞ்ஜனம் நடத்தப்பப்கின்றது. விஷ்ணுவிற்கு உரியதான விசேஷ ஆராதனை தினங்கள் வியாழனும் சனியும்தான். பூஜைக்குரிய இதழ்கள் துளஸியும், தாமரையுமே. மற்ற திருப்பதிகளில் இவ்விதம் வில்வ இதழ் அர்ச்சனையோ, வெள்ளிக்கிழமை திருமஞ்ஜனமோ கையாளப்படுவதாகத் தெரியவில்லை.

vi மற்ற திருப்பதிகளில் காணப்படுவது போல, திருவேங்கடத்தில் விஷ்ணுமூர்த்தியின் மூலஸ்தானம் உள்ள கோயிலுக்குள்ளேயே தாயார் சன்னிதியும் காணப்படுவதில்லை.

vii ஸ்ரீ வேங்கடேச ஸஹஸ்ரநாமத்தில் "सुब्रह्मण्याय नमः" "ஸுப்ரஹ்மண்யாய நம:" என்ற நாமமும் ஆயிரத்தில் ஒன்றுகக் கூறபபட்டுள்ளது. அதை அனுசரித்து, தென்னிந்திய ஆஸ்திகர்கள் "வேங்கட சுப்ரமண்யன்" என்ற பெயரை நாமகர

ணம் செய்து வழங்குவது எல்லோருக்கும் தெரிந்ததே.

viii உள் பிரகாரத்தின் முக்குகளில் சிங்கத்தின் சிலைகளே காணப்படுகின்றன. (வைஷ்ணவத் தலங்களில் காணப்படுவதான கருட, ஹனுமத் பிம்பங்கள் இல்லை)

ix நெடுங்காலமாக வட இந்தியர்கள் அனைவரும் திருவேங்கடப் பெருமானை "பாலாஜி" என்றே அழைக்கின்றனர். "बाल": (பால:) என்ற சொல் குழந்தைத் தெய்வமான சுப்ரமண்யஸ்வாமியையே குறிப்பதாகும். வேறு தெய்வத்தை அல்ல.

x பிரசித்த புராணங்களிலோ, பிரசித்த வைணவத் தலங்களிலோ ஜடை, நாகாபரணம் கொண்டும், சங்கு, சக்கரம் இல்லாமலும் ஸ்ரீ மஹா விஷ்ணு காணப்படவில்லை.

xi திலக ஸ்வாமீ — திலகத்தில் பிரியமுள்ள தெய்வம் திருமுருகன்:—

கி. பி. 9வது நூற்றுண்டில் மிதிலா தேசத்தில் வாழ்ந்துவந்த வாசஸ்பதி மிச்ரர் என்ற மஹா வித்வான் ஒருவர் அறு தர்சனங்களிலும் ஒப்புயர்வற்ற நூல்களை எழுதியுள்ளார். பிரும்ஹ ஸூத்ர சங்கரபாஷ்யத்திற்கு நிகரற்ற உரை ஒன்றை "பாமதீ" என்ற பெயரில் எழுதியுள்ளார். அதன் முகவுரையில் தன்னுடைய நூல் இடையூறின்றி நன்கு முடிவடைவதற்கு தெய்வங்களை வணங்கி மங்களம் செய்துள்ளார்.

"मार्तण्ड-तिलकस्वमि - महागणपतीन् वयम् ।
विश्ववन्द्यान् नमस्याम: सर्वसिद्धिविधायिन : ।।"

"மார்தண்ட-திலகஸ்வாமி-மஹாகணபதீன்
வயம் ।
விச்வவந்த்யான் நமஸ்யாம: ஸர்வஸித்தி
விதாயின: ॥

அனைவருடைய விருப்பத்தை நிறைவேற்றுப வர்களுமான ஸூர்யபகவான், திலகத்தில் மிக்க பிரியமுள்ள ஸுப்ரமண்யக்கடவுள், மஹாகணபதி இவர்களை வணங்குகின்றோம்"

என்ற செய்யுளில், ஸுப்ரமண்யரைக் குறிப்ப தற்கு "ஸ்வாமி" என்ற சொல்லையும், அவருக்குத் திலகம் இடுவதில் விருப்பம் அதிகம் என்றும் அறிவித்துள்ளார்.

கலியுகத்தின் தொடக்கத்திலேயே யாக்ஞவல்க் யர் என்னும் புகழ்பெற்ற முனிவர் தர்மசாஸ்த்ரம் ஒன்றை இயற்றியுள்ளார். அதில் முதலாவது அத்யாயத்தில் 'கணபதிகல்பம்" என்னும் பிரகர ணத்தில்,

"आदित्यस्य सदा पूजां तिलक स्वामिनस्तथा ।
महागणपतेश्चैव कुर्वन्सिद्धिमवप्नुयात् ।।"
[याज्ञ–अध्य–१–श्लो २९४]

"ஆதித்யஸ்ய ஸதா பூஜாம் திலக ஸ்வாமி
நஸ்ததா ।
மஹாகணபதேச்சைவ குர்வந்ஸித்திமவாப்நு
யாத் ॥"

என்ற செய்யுளில் "ஸ்வாமி" என்ற சொல்லால் முருகனைக் குறிப்பிட்டு, அவரை திலகம் இட்டுப் பூஜை புரிகின்றவன் அபீஷ்டத்தை அடைகின்றான் என்று தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

எனவே, "ஸ்வாமி புஷ்கரிணி" என்ற சொல்லில் "ஸ்வாமி" என்ற சொல் முருகனையே குறிப்பதாகும். என்று ஐயமற அறிய வேண்டும். மேலும் மூல விக்ரஹத்தின் நெற்றியில் திலகம் இருப்பதும் அதனை மறைப்பதற்கு பாதி கண்களை மறைக்கும் அளவிற்கு வேறு தலங்களில் எங்கும் காண முடியாதவிதம் பெரிய அளவில் பட்டை நாமம் சாத்தியிருப்பதும் மேல் கூறிய விஷயத்தைத் திடப்படுத்துவதாகும்.

xii திருவேங்கட க்ஷேத்திரம் ஒரு சக்தி பீடமாகும். அங்கு ஸப்தமாதாக்கள் நித்யஸாந்நித்தியம் கொண்டிருக்கின்றனர். அதற்கு அறிகுறியாகவே, சாரதா நவராத்ரிகாலத்தில் பிரும்மோத்ஸவம் நடைபெருகிறது.

xiii திருக்கோயிலில் மூலஸ்தானத்தில் கௌமாரி, வைஷ்ணவி என்ற இரு சக்திகள் அமைந்திருப்பதால் இரண்டு 18 முழம் அதாவது 36 முழம் பட்டுப்புடவையே மூலவருக்குச் சாத்தப்படுகிறது. கோயிலுக்கு காஞ்சீ பெரியவர்கள் எழுந்தருளியிருக்கும்போது கோயில் நிர்வாகிகள் பெரியவர்களுக்கு அந்த 36 முழ பட்டுப்புடவையை ஸம்மானம் செய்திருக்கிறார்கள்.

xiv இக்கலியில் ஆறுமுகம் தாங்கிய குஹப் பெருமான், ஒரு முகத்துடன் குமாரவடிவனுய் திரு வேங்கடமலையுள் தலைவனுக காணப்படுகிறுன்— "कलौ कुमाररूपेण षण्मुखो भगवान् गुहः। दृश्य एकमुखेनैव वेङ्कटाचलनायकः॥" என்று மார்க்கண்டேய புராணத்தில் உள்ளதாக வ்ரத சூடாமணி என்ற நூல் அறிவிக்கின்றது.

xv "தாழ்சடையும் நீண் முடியும், ஒண்மழுவும் சக்கரமும் (திருநாவாயிரம் 2344) சூழரவும், பொன்னுணும், தோன்றுமால், — சூழும் திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு இரண்டுருவம் ஒன்ருய் இசைந்து" என்று (கி–பி. 630–668) வாழ்ந்துவந்த பேயாழ்வார்—திருவேங்கடத்தானை சிவனுகவும் விஷ்ணுவாகவும் கண்டதாகக்கூறுகிறுர்.

७४. कान्त्या न्यक्कृतबालभानुसुमुखः शान्त्यादिभिस्सेवितः
क्षान्त्या काचन भूमिरेव भजतां भ्रान्त्यापदिध्मानलः।
भान्त्याव्याजकृपारसैरभिमुखं यान्त्या दृशां मादृशां
हन्त्याधीन्यदसौ किन्यदिह नो मान्त्यालमिन्द्रश्रिया ॥

காந்த்யா ந்யக்க்ருதபாலபானுஸுமுக:
சாந்த்யாதிபிஸ்ஸேவித:
க்ஷாந்த்யா காசன பூமிரேவ பஜதாம்
ப்ராந்த்யாபதித்மாநல: ।
பாந்த்யாவ்யாஜக்ருபாரஸைரபிமுகம்
யாந்த்யா த்ருசாம் மாத்ருசாம்
ஹந்த்யாதீன்யதஸௌ கிமன்யதிஹ நோ
மாந்த்யாலமிந்த்ரச்ரியா ॥

அழகிய தன் உடலின் ஒளியால் சிவந்த நிற முள்ள இளம் சூரியனுடைய ஒளியை மட்டமாகச் செய்து அழகிய வதனத்துடன் விளங்குபவர். சாந்தி முதலிய ஆத்ம குணங்களினுல் வழிபடப் படுகின்றவர். அடியார்களுடைய தவறுகளைப் பொறுத்துக் கொள்ளும் விஷயத்தில், எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டும், அவர்களின்குற்றங்களைப் பொறுத்துக் கொண்டும் இருக்கும் பூமியாகவே இருப்பவர். தன்னை வழிபடும் அடியார்களுடைய அறியாமை, கஷ்டங்கள் ஆகியகட்டைகளுக்குத் தீயாக இருப்பவர். அத்தகையமுருகப் பெருமான் என் போன்ற அடியார்களுடைய அருகாமையில் தயா ரஸத்தை பொழிந்துகொண்டு வந்து தரிசனம் அளித்து எங்கள் கண்களைகுளிரச் செய்து, எங்களுடைய எல்லாவிதமான கவலைகளையும் அகற்றி விட்டார். எனவே அளவில்லா ஐச்வர்யத்தைக் கந்தன் அருளால் அடைந்த பின்இந்திரனுடைய மிகச் சிறிய ஐச்வர்யம் எங்களுக்குத்தேவை இல்லை.

௭௫. भीमारातिवनानलस्सुरपुरीरामाभिरामाकृतिः
सामाभिष्टुतपादपद्मविभवस्सीमा दयासंपदाम् ।
सोमानन्दकरः परं सुमनसां क्षेमावहप्रक्रियः
कामानेष तनोतु नः प्रतिदिनं प्रेमालसैर्वीक्षणैः ॥

பீமாராதிவனுநலஸ்ஸுரபுரீராமா—
பிராமாக்ருதி:
ஸாமாபிஷ்டுதபாதபத்மவிபவஸ்ஸீமா
தயாஸம்பதாம் |

ஸோமானந்தகர: பரம் ஸுமனஸாம்
க்ஷேமாவஹப்ரக்ரிய:
காமாநேஷ தனோது ந: ப்ரதிதினம்
ப்ரேமாலஸைர்வீக்ஷணை: ||

அச்சத்தைத் தரும் பகைவர்களாகிய காட்டிற்கு நெருப்பாக இருப்பவர். வானவர்களின் பட்டணமான அமராவதியில் உள்ள பெண்மணிகளின் உள்ளங்களைக் கவரும் அழகு உடையவர். ஸாம வேதங்களில் நன்கு புகழ்ந்து துதிக்கப்பட்ட பெருமைமிகு திருவடித் தாமரையை உடையவர். தயையாகிய செல்வத்திற்கு எல்லையாக இருப்பவர். உமையுடன் கூடிய பரமசிவனுக்குப் பேரானந்தத்தை அளிப்பவர். தேவர்களுக்கு எப்பொழுதும் நன்மையைச் செய்வதிலேயே ஈடுபாடு உள்ளவர் அத்தகைய குஹக்கடவுள் தினந்தோறும் அன்பு ததும்பும் அழகிய கடைக்கண் பார்வையால் எங்களுக்கு எல்லாவிதமான அபீஷ்டங்களையும் அருளட்டும்.

௭௬. आदावाहितचेतसामनुदिनं वेदावलीनां सतां
नादाविष्करणक्षणे प्रकटयन्पादारुणं पावनम् ।
खेदान्खण्डयति स्म योऽतिविषमान् भेदान्धकारोदितान्
श्रीदाकाङ्क्षितसंपदं दिशतु मे मोदाकरः शूलिनः ।।

ஆதாவாஹிதசேதஸாமநுதினம் வேதாவலீ
னாம் ஸதாம்
நாதாவிஷ்கரணக்ஷணே ப்ரகடயன்பாதாரு
ணம் பாவனம் |

கேதான்கண்டயதிஸ்ம யோsதிவிஷமான்
பேதாந்தகாரோதிதான்

ஸ்ரீதாகாங்க்ஷிதஸம்பதம் திசதுமே மோதாகர:
சூலின: ||

தினந்தோறும் முருகனிடத்தில் உள்ளத்தை நிலைபெறச் செய்து முறையாக ஒப்புயர்வற்ற வேதங்களைப் பாராயணம் செய்ய முற்படும்போது முதலில் "ஓம்" என்று ஒலியை எழுப்பும்போது எந்த குஹப்பெருமான் தூய்மை வாய்ந்ததும், சிவந்திருப்பதுமான தனது திருவடியை அவ்வடியார்களுக்குத் தரிசனம் செய்துவைத்து, அவர்கள் உள்ளத்தில் இருக்கும் வேற்றுமை மனப்பான்மையாகிய இருளிலிருந்து தோன்றியவைகளும், பலவிதமான முறண்பாடுள்ள செயல்களால் ஏற்பட்டவைகளுமான துன்பங்களை துண்டித்து எறிந்தாரோ, சூலபாணியான பரமசிவனுக்கு ஸந்தோஷத்தை அளிக்கும் அந்த குஹக்கடவுள் எனக்குச் செல்வத்தை வாரிவழங்கும் கொடையாளிகளாலும் விருப்பப்படுகின்ற சிறந்த செல்வத்தை தந்து அருளட்டும்.

௭௭. नेता धर्मपथे सदैव चरतां जेताऽन्यथावर्तिनां
केतावाहितकुक्कुटः प्रतिरणं वेताळसङ्घस्तुतः ।
आताम्रैर्नयनाञ्चलैर्यदि स मां शीतांशुबिम्बस्पृशैः
प्रीतान्तः करणो निरीक्षितुमहं क्रेतास्मि शक्रश्रियाम् ।।

நேதா தர்மபதே ஸதைவ சரதாம் ஜேதாஸ
ந்யதாவர்திநாம்
கேதாவாஹிதகுக்குட: ப்ரதிரணம் வேதாள—
ஸங்கஸ்துத: |
ஆதாம்ரைர்நயநாஞ்சலைர்யதி ஸ மாம்
சீதாம்சுபிம்பஸ்ப்ருசை:
ப்ரீதாந்த:கரணோ நிரீக்ஷிதுமஹம் க்ரேதாஸ்மி
சக்ரச்ரியாம் |

அறவழியில் நடக்கும் தனது அடியார்களை எப்பொழுதும் அவ்வழியிலேயே தைர்யமாகச் சென்று கொண்டிருக்கும்படி ஊக்குவிப்பவர். தீயவழியில் செல்லும் மாந்தர்களை நேர்வழியில் நடக்கும்படிச் செய்பவர். கோழியை அடையாளமாகக் கொண்ட கொடியை உடையவர். வேதாளகணங்களால் போர்கள் அனைத்திலும் தன் வெற்றியைப் புகழ்ந்து துதிக்கப்படுகின்றவர். அத்தகைய குஹப்பெருமான் சந்திரனின் அமுத கிரணங்களைப் போன்று குளுமையானவைகளும், ஓரத்தில் சிவந்தவைகளுமான தனது கடைக்கண்களால் என்னை ஸந்தோஷத்துடன் ஒருமுறை பார்த்தாராகில், அக்கணமே, தேவேந்திரனுடைய அமராவதி என்ற பட்டணத்தையே விலைபேசி வாங்கும் அளவிற்கு நிறைய செல்வம் படைத்தவன் ஆவேன்.

७८. हेलाभर्जितसर्वलोकदितिभूहालाहलेनाङ्गुली-
लीलाभिः शिवयोः प्रमोदजलधेर्वेलावलीं प्लावयन् ।
ज्वालाजालजटालशक्तिविलसत्सालाभभास्वद्भुजः
खेलां नः पुरतस्तनोतु सुरराड्बालाविलोलान्तरः ॥

ஹேலாபர்ஜிதஸர்வலோகதிதிபூஹாலாஹ-
லேனாங்குலீ-
லீலாபி: சிவயோ: ப்ரமோதஜலதேர்வேலாவ
லீம் ப்லாவயன் ।
ஜ்வாலாஜால ஜடாலசக்திவிலஸத்ஸாலாப
பாஸ்வத்புஜ:
கேலாம் ந: புரதஸ்தனோது ஸுரராட்பாலாவி
லோலாந்தர: ॥

காளகூட விஷம் போன்று உலகம் அனைத்தை யும் துன்புறுத்தி வந்த அசுரர்களின் கூட்டத்தை வேடிக்கையாகவே தன் விரல்களை அசைப்பதன் மூலம் பொசுக்கிச் சாம்பலாக்கித் தன் தாய்தந்தை யர்களான பார்வதீபரமேச்வரர்களின் மகிழ்ச்சியா கிய கடலைக் கரை புரண்டு பொங்கி வடியும்படிச் செய்கின்றவரும், வட்டமான ஒளிக்கூட்டத்தின் நடுவே துலங்கும் சூலாயுத்தினைத் தாங்கி நிற்கின்ற தும், தேக்குமரத்தினைப் போன்று நீண்டு, பருத்து, திடமாக இருப்பதுமான கையை உடையவரும், தேவர்களின் தலைவனான இந்திரனுடைய மகள் தேவஸேனாதேவியிடம் மிக்க அன்பு கொண்டவரு மான குஹப்பெருமான் எனது முன்பு ஸந்தோஷ மாக லீலைகள் புரிந்து எனக்குத் தரிசனம் அளிக்கட் டும்.

७९. रंभादिस्फुरदाभिरूप्यविलसद्दंभावलोपिप्रभा-
जंभारातिसुताघनस्तनपरीरंभावगाढोरसे ।
स्तंभायाखिलविष्टपस्य कुशालारंभाय नाकौकसाम्
शुम्भादित्रिदशारितूलहुतभुग्डिंभाय भूयो नमः ॥

ரம்பாதிஸ்புரதாபிரூப்யவிலஸத்தம்பாவலோ
பிப்ரபா-
ஜம்பாராதிஸுதாகனஸ்தனபரீரம்
பாவகாடோரஸே ।
ஸ்தம்பாயாகில விஷ்டபஸ்ய குசலராம்பாய
நாகௌகஸாம்
சும்பாதித்ரிதசாரிதூலஹுதபுக்டிம்பாய
பூயோ நம: ॥

அழகிகளான ரம்பை முதலிய தேவலோகத்து அப்ஸரஸ் ஸ்திரீகளைக் காட்டிலும் மிகவும் அழகு வாய்ந்தவளும் ஜம்பாஸுரனைக் கொன்ற தேவ ராஜனுடைய புதல்வியுமான தேவஸேனையை மார்புடன் திடமாக அணைத்துக் கொண்டிருப்ப வர். பெரிய தூணைப் போன்று உலகம் அனைத் தையும் தாங்கி நிற்பவர். அமராவதியில் வாழும் வானவர்களின் க்ஷேமத்தைக் கவனித்து வருபவர். தேவர்களின் பகைவர்களான சும்பன், நிசும்பன் முதலிய அஸுரர்களாகிய பஞ்சு மூட்டைகளைத் தீ போன்று பொசுக்கிய பராசக்தியின் அருமைத் திருக்குமாரன். இத்தகைய மாண்புமிகு குஹப்பெரு மானுக்கு மீண்டும் மீண்டும் வணக்கங்கள்.

८०. क्षुद्राणां दनुजन्मनां च विनताभद्रावलीनामपि
छिद्राण्यप्रतिलभ्य बालकतया विद्रावणे दीक्षितः ।
रुद्राणीस्तननूतनामृतघटीमुद्रायितौष्ठाधरः
निद्रां द्रावयतान्ममाद्य बहुधाऽभद्रां स रुद्रात्मजः ॥

க்ஷுத்ராணும் தனுஜன்மனும் ச வினதாபத்ரா,
வலீநாமபி
சித்ராண்யப்ரதிலப்ய பாலகதயா
வித்ராவணே தீக்ஷித: ।
ருத்ராணீஸ்தனநூதநாம்ருதகடீமுத்ராயி—
தௌஷ்டாதர:
நித்ராம் த்ராவயதான்மமாத்ய பஹுதா-
ऽபத்ராம் ஸ ருத்ராத்மஜ: ॥

குஹப்பெருமான் சிறு குழந்தைப் பருவத்தின ராயினும், தன்னை மிகுந்த பக்தியுடன் அடிபணிந்து வழிபடும் அடியார்களுக்கு; முற்பிறவிகளில் செய்துள்ள பாவங்களின் மூலமாகவும், மிகவும் கொடூரமான இயல்யுடைய அஸுரர்களின் மூலமாகவும், நேரிடும் இன்னல்கள் அவர்களை அணுகாதபடி அவைகளை அடித்து விரட்டும் கார்யத்தில் கங்கணம் கட்டிக் காத்திருப்பவர். பார்வதீ தேவியின் ஸ்தனமாகிய புதிய அமுதம் நிறைந்த கும்பத்தின் முகத்தில் தனது கீழ், மேல் உதடுகளைப் பொருத்தி வைத்திருப்பவர். (பார்வதீ தேவியின் முலைப்பாலை ஆனந்தமாகப் பருகுகின்றவர்). மஹாதேவரின் அருமை மைந்தர். அத்தகைய குஹப்பெருமான், எண்ணிறந்த துன்பங்களுக்குக் காரணமானதும்

உண்மையான ஆத்மஸ்வரூபத்தை மறைத்து நீண்டகால தூக்கமாக இருக்கின்றதுமான மாயையை எனக்கு இல்லாமல் செய்யட்டும். குஹப்பெருமான் எனது ஆத்ம ஸ்வரூபத்தை விழித்துக் கொள்ளும்படிச் செய்யட்டும் என்பது கருத்து.

௯१. भासा सारसबान्धवं नयसुधाकासारमेवाशये
नासाप्रीणनसायकं तनुरुचा दासायिताशाधिपम् ।
या सानन्दमपेक्षते न रहसे का सात्र सोऽस्मन्मनो-
वासायाद्य कृतादरो वयमतः कासां श्रियां नाश्रयाः ।।

பாஸா ஸாரஸபாந்தவம் நயஸுதாகாஸார
மேவாசயே
நாஸாப்ரீணனஸாயகம் தனுருசா தாஸா-
யிதாசாதிபம் ।
யா ஸாநந்தமபேக்ஷதே ந ரஹஸே கா ஸாத்ர
ஸோ ऽஸ்மந்மனோ-
வாஸாயாத்ய க்ருதாதரோ வயமத: காஸாம்
ச்ரியாம் நாச்ரயா: ॥

கதிரவனைப்போன்று பிரகாசிக்கின்றவர் (உலகத்தின் ஒழுங்கை நிலைநாட்டுகின்ற) உலக நீதிகளாகிய அமுதங்கள் நிறைந்த பெரியதோர் நீர்த்தேக்கம் போன்ற உள்ளம் படைத்தவர். மலர்களை அம்புகளாகக் கொண்ட மன்மதனுக்குச் சமமான உடலழகு வாய்ந்தவர். இந்திரன் முதலிய திக்பாலர்களைத் தனது அடிமைகளாகச் செய்திருப்பவர்,

ஆனந்தவடிவர். இத்தன்மைகளையுடைய குஹப்பெருமானை இவ்வுலகில் எந்தப் பெண்மணிதான் தனிமையில் அடைந்து ஆனந்தமுற்றிருக்க விரும்பவில்லை? அத்தகைய குஹப்பெருமான் இப்பொழுது எனது உள்ளத்தில் (தனிமையில்) என்னுடன் வஸிப்பதற்கு ஸந்தோஷமாக வந்துள்ளார். நான் பேரானந்தத்தைப் பெற்றுவிட்டேன். எனவே, அஷ்டலக்ஷ்மிகளோ, அணிமாதி அஷ்டைச்வர்யங்களோ எல்லாவிதமான செல்வங்களோ என்னைவிட்டு அகலவில்லை.

---

குறிப்பு:- கடவுள் ஒருவரே உண்மையில் பூர்ணமான புருஷனும். ஜீவர்கள் அனைவரும் அவன் அடிமைகளான பெண்களுமாவர். கற்புள்ள பெண் தன் புருஷனை நாடுவது போன்று கடவுளை வழிபடுவதே ஜீவராசிகளின் கடமை. அதனாலேயே முடிவில் வீடு பெறவேண்டும். "स्त्रीप्रायमितरत्सर्वं पुंभूतोऽसौ जनार्दनः" "ஸ்த்ரீப்ராயமிதரத்ஸர்வம் பும்பூதோऽஸௌ ஜநார்தன:" என்ற புராண வசனம் இதன் பிரமாணமாகும்.

८२. गङ्गाविश्रुतकर्मनर्मसचिवापाङ्गामृतोर्मिच्छटा-
साङ्गामृष्टविशिष्ठशिष्टजनतातुङ्गाघसङ्घानलम् ।
शृङ्गारोज्ज्वलकेलिसंहतिनटीरङ्गायितेन्द्रात्मजा-
नङ्गाद्वैतमुपास्महे वयममी भङ्गाय तुङ्गापदाम् ॥

கங்காவிச்ருதகர்மநர்மஸசிவாபாங்காம்ரு
தோர்மிச்சடா—
ஸங்காம்ருஷ்டவிசிஷ்டசிஷ்ட ஜனதாதுங்காக
ஸங்காநலம் ।
ச்ருங்காரோஜ்ஜவலகேலீஸம்ஹ்ருதி நடீரங்காயி
தேந்த்ராத்மஜா—
நங்காத்வைதமுபாஸ்மஹே வயம்மீ பங்காய
துங்காபதாம் ॥

பாவத்தைப் போக்கி, புண்ணியத்தை அளிப்பவைகள், மிக்க சீதளமானவைகள் என்று புகழப்படும் கங்கையின் நீர்ப்பெருக்குக்கு இணையான தனது கடைக்கண் பார்வைகளாகிய அமுதப்பெருக்குகளில் மூழ்குகின்ற தனது அடியார்களுடைய தாங்க முடியாத பாபக்கூட்டமாகிய வெப்பத்தைத் தணிப்பவர். சிருங்கார ரஸம் நிரம்பிய பலவிதமான லீலைகளைப் புரிவதில் மிகத் திறமை வாய்ந்த தேவராஜனுடைய திருமகளான தேவஸேனைக்கு நிகரற்ற காமதேவனாக இருந்து இன்பத்தை அளிப்பவர். இத்தகைய குஹப்பெருமானை ஓங்கி வளர்ந்து வரும் எங்களுடைய துன்பங்களை வேருடன் அகற்றுவதற்காக எப்பொழுதும் வழிபடுகின்றோம்.

८३. शान्तान्तःकरणालये वृषसुताकान्ताभिरूप्ये कृपा-
क्रान्तान्दोलितशोणलोचनदलप्रान्तावधूतापदि ।
स्वान्तान्यादधते न ये शिवसुते भ्रान्तास्तु ते संशय-
श्रान्ताः सन्तु पदे पदे भवपथे किं तावता नः क्षतिः ॥

சாந்தாந்த: கரணுலயே வ்ருஷஸுதா
காந்தாபிரூப்யே க்ருபா-
க்ராந்தாந்தோலிதசோணலோசனதளப்ராந்
தாவதூதாபதி।
ஸ்வாந்தாந்யாததவே ந யே சிவஸுதே
ப்ராந்தாஸ்து தே ஸம்சய-
ச்ராந்தா: ஸந்து பதே பதே பவபதே கிம்
தாவதா ந: க்ஷதி: ॥

வெளி விஷயங்களைத் தேடி அலையாமல் உண்மையான தத்துவத்திலேயே நிலைபெற்று அமைதியுற்றிருக்கும் மஹான்களுடைய உள்ளத்தில் குடியிருப்பவர். இந்திரனின் மகனின் அழகிற்கேற்ற அழகு வாய்ந்தவர். தயாரஸம் நிறைந்த அசைவுள்ள, சிவந்த நிறமுள்ள அழகிய கடைவிழிகளாலே அடியார்களுடைய இன்னல்களை அகற்றுபவர். சிவபெருமானின் திருக்குமரனிடத்தில் எந்த மாந்தர்கள் தங்கள் உள்ளங்களை நிலைபெறச் செய்யவில்லையோ அத்தகைய அறிவிலிகளான மாந்தர்கள் "குஹக் கடவுளிடம் உள்ளத்தை அளித்தால் ஆனந்தம் பெற முடியுமோ இல்லையோ" என்ற ஐயப்பாட்டுடன் மீண்டும் மீண்டும் பிறப்பாகிய துன்பம் நிறைந்த ஸம்ஸாரப் பாதையில் சென்று கஷ்டங்களை அடைந்துகொண்டே இருக்கட்டும். (அவர்களுடைய விதிக்கு நாம் என்ன செய்வோம்) குஹககடவுளிடம் உள்ளத்தை நிலைபெறச் செய்த எங்களை அத்தகைய துன்பங்கள் ஒரு பொழுதும் தீண்டுவதில்லை.

८४. स्वेक्षाधीनचराचरोदयलयो लाक्षासदृक्षच्छविः
साक्षान्निर्जरकाननक्षितिरुहः प्रेक्षावतां काङ्क्षितः।
दीक्षामद्य दधातु दातुमति मे द्राक्षासदृक्षां गिरम्
रूक्षामाधिविजृम्भितां शामयितुं दाक्षायणीनन्दनः ॥

ஸ்வேக்ஷாதீநசராசரோதயலயோ
லாக்ஷாஸத்ருக்ஷச்சவி:
ஸாக்ஷாந்நிர்ஜரகாநநக்ஷிதிருஹ: ப்ரேக்ஷாவ
தாம் காங்க்ஷித: |
தீக்ஷாமத்ய ததாது தாதுமதி மே த்ராக்ஷா
ஸத்ருக்ஷாம் கிரம்
ரூக்ஷாமாதிவிஜ்ரும்பிதாம் சமயிதும்
தாக்ஷாயணீநந்தன: ||

அசையும் பொருள், அசையாப் பொருள் இவைகளின் வடிவமான இவ்வுலகத்தின் தோற்றத்தையும், மறைவையும் தன்னுடைய திருநோக்கலேயே நடத்துபவர். அரக்கு எனப்படும் பொருளைப் போன்று செந்நிறம் உடையவர் தன்னை வழிபடும் அடியார்களுக்கு அவர்கள் விரும்பிய பொருளை அளிக்கும் விஷயத்தில் வானவர்களின் நந்தன வனத்திலிருக்கும் கற்பக மரமாகவே இருப்பவர். அத்தகைய தாக்ஷாயணீ தேவியின் திருக்குமாரனுகிய குஹப்பெருமான் என் உள்ளத்திலுள்ள கவலைகளால் தோன்றுகின்ற துன்பங்களை அறவே அகற்றுவதற்கும், என்னுடைய நாவில் திராக்ஷைக்கனி ரஸம் போன்று இனிப்பான சொற்றொடரை ஏற்படுத்துவதற்கும் இப்போதே அருள் புரியட்டும்.

८५. वाचातीतपदाम्बुजातविभवं प्राचामृषीणां पुनः
नीचारिव्रजजीर्णपर्णदहनं खेचारिकेलीरथम् ।
मोचामर्मकृषा मनोज्ञवचसा याचामहे कं वरम्
धीचाञ्चल्यमपाकरोतु जगतामाचार्यवर्यो मम ॥

வாசாதீதபதாம்புஜாதவிபவம் ப்ராசாம்ருஷீணாம் புன:
நீசாரிவ்ரஜ ஜீர்ணபர்ணதஹனம் கேசாரிகேலீரதம் ।
மோசாமர்மக்ருஷா மனோஜ்ஞவசஸா யாசாமஹே கம் வரம்
தீசாஞ்சல்யமபாகரோது ஜகதாமாசார்யவர்யோ மம ॥

தவ வலிமையால் மந்திரங்களைக் கண்டுபிடித்த முன்னோர்களான முனிவர்களுடையவும் வாக்கினால் வருணிக்கமுடியாத தன் திருவடித்தாமரையின் பெருமையை உடையவரும், மிகவும் கெட்ட குண முடைய பகைவர்களின் கூட்டமாகிய உலர்ந்த இலைகளை எரித்துச் சாம்பலாக்குவதில் அக்நிதேவனாக இருப்பவரும், வானத்தில் பறந்து செல்லும் மயிலை, வேடிக்கையாக உலாவுதற்கான தேராகக் கொண்டவருமான குஹப்பெருமானிடத்தில் நான் இனிப்பான வாழைப்பழத்தைக் காட்டிலும் மிக்க மதுரமான தோத்திரங்களைச் செய்து எந்தவிதமான இஷ்டத்தைத் தந்தருளும்படி வரம் கேட்க வேண்டும். அங்ஙனம் எனக்கு வேண்டத் தகுந்த ஒன்றுமில்லை. எனினும் இவ்வுலகம் அனைத்திற்கும் குருவான சிவபெருமானுக்கும் குருவான ஸ்வாமி

நாதப்பெருமான் என் உள்ளத்தின் நிலையற்ற தன்மையை இல்லாமல் செய்யட்டும்.

८६. संसारामयभेषजं शमदमाहिंसापराराधितम्
हंसालंकृतकोमल श्रुतिशिरोत्तंसाङ्घ्रिपाथोरुहम् ।
पुंसानादिमर्ता प्रकाशितभुजाशंसापदानक्रमम्
कंसाराति सुताकपोलरुचिरोच्चांसाग्रमाराध्नुमः ॥

ஸம்ஸாராமயபேஷஜம் சமதமாஹிம்ஸாபரா-
ராதிதம்
ஹம்ஸாலம்க்ருதகோமலச்ருதி சிரோத்தம்ஸா
ங்க்ரிபாதோருஹம் ।
பும்ஸாஞுதிமதா ப்ரகாசிதபுஜாசம்ஸாபதான
க்ரமம்
கம்ஸாராதி ஸுதாகபோலருசிரோச்சாம்
ஸாக்ரமாராத்னும: ॥

பிறப்பு இறப்பாகிய பிணிக்கு மருந்தாக இருப்பவர். உள்ளத்தின் அடக்கம், புலன்களில் அடக்கம், பிறரைத் துன்புறுத்தாமை ஆகிய நற்குணங்கள் நிறைந்த மஹான்களால் நன்கு பூஜிக்கப்படுவர். பரமஹம்ஸர்களான துறவிகளால் போற்றிப் புகழப்பட்ட மறைமுடிகளைத் தன் திருவடித் தாமரைகளால் அழகுபடுத்துபவர். பார்வதீ தேவிக்குப் பரம புருஷனை பரமேச்வரனாலேயே எடுத்துரைக்கப் பட்ட தனது பாஹுபலம், லீலை முதலிய வைபவங்களை உடையவர். கம்ஸனைக் கொன்ற கண்ணன் வடிவம் தாங்கிய விஷ்ணுவின் திருமகளான வள்ளி தேவியின் அழகிய கன்னத்துடன் சேர்ந்து துலங்

கும் உயர்ந்த தோளை உடையவருமான குஹப்பெரு மானை நன்கு பஜிப்போமாக.

[குறிப்பு:— "कंसारातिसुता" "கம்ஸாராதிஸுதா" என்ற சொல்லால் மஹாவிஷ்ணுவின் மகள் என்று வள்ளீதேவியைக் குறிப்பிடுகிறார். இக்கூற்றிற்குக் குரிய காரணம் பின்வருமாறு:— முன்னொரு காலத்தில் மஹாவிஷ்ணு 'சிவமுனி' என்ற மனிதனாகப் பிறந்து காஞ்சீபுரத்திற்கு அருகாமையில் உள்ள மலையில் ஒரு மரத்தடியில் அமர்ந்து தவம் புரிந்து கொண்டிருக்கும்போது லக்ஷ்மீதேவி பெண் மான் வேடம் தரித்து விஷ்ணுவின் அருகில் ஸஞ்சரித்தாள். விஷ்ணுவும் மான் வேடத்திலிருந்த திருமகளிடம் காதல் கொண்டார். கந்தப் பெருமானைக் கணவனாக அடைவதற்கு முற்பிறவியில் தவம் புரிந்த ஸௌந்தர்யவல்லி தேவியார் அச்சமயம் திருமகளின் மகளாகப் பிறக்க விரும்பி திருமகளின் கர்ப்பத்தில் பிரவேசித்தாள். திருமகளும் உடனேயே "வல்லி"க் கொடியின் அடியில் உள்ள பள்ளத்தாகில் பெண்மகளையீன்றாள். வேடர் குலத்துதித்த விஷ்ணுவின் அம்சமான நம்பீசன் என்ற அரசன் அப்பெண்ணைக் கண்ணுற்றான். மக்கட்பேறில்லாத அவ்வேடன் ஸந்தோஷத்துடன் அக்குழந்தையை எடுத்து மனைவியிடம் அளித்து 'வள்ளி' என்ற பெயரையுமிட்டான். "வல்லீ பரிணய சம்பு" என்னும் நூலில் நாரதமுனிவர், கந்தப் பெருமானிடம் கூறுகிறார்.

"स्वामिन् पुरा शरवणोद्भव शार्ङ्गधन्वा केनापि मानुषतनुर्भुवि कारणेन । काञ्चीपुरीपरिसरे शिवमुन्यभिख्यः तेपे गिरौ

क्वचन भूरुहधूततापे। तस्मिस्तपस्यति मृगीतनुमन्तिकस्थां लक्ष्मीं निशामयति कामशरातुराङ्गे । गर्भं विवेश कृतपूर्वतपास्तदात्व्यै सौन्दर्यवल्ल्यभिधया प्रथिता तदीथम् ॥ सूता तया सपदि सा लवलीलताधः कुण्डेपु लिन्दपति वंशकृतोदयेन । इन्द्रानुजेन ददृशे जगृहे ददेच सन्तानलाभकुतुकेन तदङ्गनायै ॥ वल्लीति गौण पदभाग् वपुषैव बाला मुख्यं च तत्पदमिथं जनकेन नित्ये ॥"

(वल्ली परिणय चम्पू तरङ्गः १०) ]

८७. चापासित्रिशिखादिभूषितभुजव्यापारतुष्टामर–
स्त्रीपाण्यब्जविकीर्णकल्पकुसुमश्रीपाटलाङ्गद्युतिः।
पापात्मानुपलभ्यदिव्यनगरीभूपात्मजाकामुकः
तापान्नस्समपाकरोतु महितैः श्रीपादपद्मामृतैः ॥

*சாபாஸித்ரிசிகாதிபூஷிதபுஜவ்யாபார*
*துஷ்டாமர-*
*ஸ்த்ரீபாண்யப் ஜவிகீர்ண கல்பகுஸும-*
*ஸ்ரீபாடலாங்கத்யுதி: ।*
*பாபாத்மானுபலப்யதிவ்யநகரீபூபாத்ம*
*ஜாகாமுக:*
*தாபாந்நஸ்ஸமபாகரோது மஹிதை:*
*ஸ்ரீபாதபத்மாம்ருதை: ॥*

வில், கத்தி சூலம் முதலிய ஆயுதங்கள் தாங்கிய கைகளால் அஸுரர்கள் அழிக்கப்பட்டவுடன் மகிழ்ச்சி அடைந்த வானவர்களின் மங்கையர்களுடைய தாமரை போன்ற கைகளால் வருஷிக்கப்பட்ட கற்பக தருவின் மணமுள்ள மலர்களால் மிகுந்த சோபை அடைந்ததும், சிவந்த நிறமுள்ள

துமான திருமேனியை உடையவர். பாவச் செய்கைகளில் ஈடுபடும் மாந்தர்களுக்கு கிடைப்பதற்கு அரிய தான ஸ்வர்கலோகத்தின் தலைவனான இந்திரன் மகளான தேவயானையிடம் மிகுந்த அன்புகொண்டவர். அத்தகைய முருகப்பெருமான் மிகவும் பெருமை வாய்ந்தவைகளான தன்னுடைய திருவடித் தாமரையிலிருந்து தோன்றும் தயை நிறைந்த அருள் வடிவமான அமுதங்களால் நம்முடைய பல விதமான துன்பங்களாகிய வெப்பத்தை நனைத்து நம்மைக் குளிரும்படி செய்யட்டும்.

८८. वाहासञ्चिततीक्ष्णहेतिरुचिभिः स्वाहा सहायो मुहु-
र्हाहाङ्गीकृतवन्दिभावसरणिर्वाहायिताखण्डलः ।
नीहाराद्रिसुतात्मजो दिविषदां साहाय्यकारी मृधे
दाहानाशु धुनोतु नस्सुमनसामाहाररीत्या गिरा ॥

பாஹாஸஞ்சிததீக்ஷ்ணஹேதிருசிபி: ஸ்வாஹா
ஸஹாயோ முஹு:
ஹாஹாங்கீக்ருதவந்திபாவஸரணிர்வாஹா-
யிதாகண்டல: ।
நீஹாராத்ரிஸுதாத்மஜோ திவிஷதாம்
ஸாஹாய்யகாரீ ம்ருதே
தாஹானாசு துநோது நஸ்ஸுமனஸாமாஹார
ரீத்யா கிரா ॥

பன்னிரு கைகளில் துலங்குவதும், கூர்மையான முனைகள் கொண்டதுமான சூலம் முதலிய ஆயுதங்களின் ஒளியால் சூழப்பட்டு அக்நி தேவனைப் போல ஜ்வலிப்பவர். "ஹாஹா" எனப் புகழப் பெற்ற கந்தர்வனால் அடிக்கடி அழகாகத் துதி

பாடப்படும் நிகரற்ற மகிமையை உடையவர். ஒரு சமயம் மயில் உருவம் தாங்கிய தேவராஜனால் சுமக்கப்பட்டவர். பனிமலையான ஹிமவானின் திருமகளான பார்வதீ தேவியின் அருமை மைந்தர். போர்களில் தேவர்களுக்கு எல்லாவிதமான உதவியும் நல்கின்றவர். அத்தகைய குஹக்கடவுள் தேவாமிருதம் போன்று மதுரமான அருட்குரல் கொடுத்து (என்னைத் தேற்றி) என்னைப் பொசுக்குகின்ற துன்பங்கள் அனைத்தையும் தாமதமின்றியே நாசம் செய்யட்டும்.

௮௯. ईशानाङ्कमनोज्ञसौधममितक्लेशान्धकारारुणं
कोशागारमपेक्षितार्थविततेः पाशायुधाराधितम् ।
काशाच्छस्मितचूर्णमोहितहृषीकेशात्मजालोलुपम्
धीशान्त्यादिशुभाय सर्वविपदां नाशाय चाशास्महे ॥

ஈசாநாங்கமனோஜ்ஞஸௌதமமிதக்லேசாந்த
காராருணம்
கோசாகாரமபேக்ஷிதார்தவிததே: பாசாயுதா
ராதிதம் ।
காசாச்சஸ்மிதசூர்ணமோஹித ஹ்ருஷீகேசாத்
மஜாலோலுபம்
தீசாந்த்யாதிசுபாய ஸர்வ விபதாம் நாசாய
சாசாஸ்மஹே ॥

கைலயங்கிரியில் வீற்றிருக்கும் தந்தை மஹாதேவனுடைய மடியாகிய மாடிவீட்டில் வஸிப்பவர். கணக்கிலடங்காத துன்பங்களாகிய இருளை அகற்றுவதில் கதிரவனுடைய தேரோட்டியான அருணதேவனாக இருப்பவர். அடியார்களால்

வேண்டி விரும்பப்படும் பொருட்கள் அனைத்திற்கும் கஜானாவாக இருப்பவர். பாசத்தை ஆயுதமாகக் கொண்ட வருணதேவன், யமதர்மன் இருவர்களாலும் நன்கு வழிபடப்படுவர். (ஸுப்ரமண்ய பக்தனுக்கு அகால மரணம் ஏற்படுவதில்லை என்பது கருத்து). நாணல் பூ போன்று வெண்ணிறமான தனது புன்சிரிப்பாகிய வசீகரண சூர்ணத்தால் மயக்கப்பட்ட புலன்களை அடக்கி ஆளுபவரான விஷ்ணுவினுடைய திருமகளான வள்ளிதேவியிடம் மிகுந்த ஆசை கொண்டவர். அத்தகைய கந்தப்பெருமானை நம்முடைய எல்லாவிதமான இன்னல்களும் அகலுவதற்கும், உள்ளத்தின் அமைதி முதலிய நற்குணங்களைப் பெறுவதற்கும் வழிபடுகின்றோம்.

९०. अङ्ककल्पितदेवराजतनयं लङ्केशदर्पच्छिदम्
सङ्केतालयमादिवाङ्मृगदृशां पङ्केरुहं पादयोः ।
कङ्केलिद्रुमकुञ्जकेलिसदनं तं केशवानन्दनम्
किं केल्या नमतां च मुक्तिरिति चेच्छङ्कानलः
शीतलः ॥

*அங்கேகல்பிததேவராஜதனயம் லங்கேச*
*தர்பச்சிதம்*
*ஸங்கேதாலயமாதிவாங்ம்ருகத்ருசாம்*
*பங்கேருஹம்பாதயோ: ।*
*கங்கேலித்ருமகுஞ்ஜகேலிஸதனம் தம்*
*கேசவாநந்தனம்*
*கிம் கேல்யா நமதாம் சமுக்திரிதி சேச்சங்கே*
*நலச்சீதல: ॥*

தனது மடியில் இந்திரன் மகள் தேவயானையை அன்புடன் தாங்கிக் கொண்டிருப்பவர். இலங்கையில் வாழ்ந்துகொண்டு ஆயிரம் பிரம்மாண்டங்களை ஆண்டுவந்த சூரபத்மனுடைய கொழுப்பை அடக்கியவர். அனுதிகாலமாகக் புகழுடன் விளங்கிக் கொண்டிருக்கும் ஸ்ருதிகளாகிய பெண்களுக்கு தன்னுடைய திருவடித் தாமரைகளை ஸந்தோஷத்துடன் தனிமையாக இருக்குமிடமாகச் செய்திருப்பவர். "கங்கேளி" எனப்படும் (வேங்கை) மரத்தில் வல்லிகளால் (கொடிகளால்) அமைக்கப்பட்ட பரணை வள்ளிதேவியுடன் கேளிக்கைகள் புரியும் இல்லமாகச் செய்தவர். விஷ்ணுவின் திருமகளான வள்ளிதேவிக்கு மட்டில்லா மகிழ்ச்சி அளிப்பவர். அத்தகைய வேலாயுதப் பெருமானை வேடிக்கையாக வணங்கும் மாந்தர்களுக்கும் முக்தி கிடைக்கின்றது. இதில் சிறிதும் ஐயமில்லை. இவ்விஷயத்தில் ஐயப்பாடு உள்ளவர் மிகவும் உஷ்ணமான தீயை சீதளமானது என்று ஸந்தேகிப்பவரை ஒத்தவராவர்.

९१. सम्पातेन निजायुधस्य विलसच्छंपासनाभेजंग-
त्किम्पाकं कलयन्तमन्तकसभासम्पातुकं तारकम् ।
कम्पाक्रान्तधिया न धर्तुमनिशं यं पारयन्ते जनाः
तं पारे तमसां स्थितं कलयतां किं पामरैः पार्थिवैः ॥

ஸம்பாதேன நிஜாயுதஸ்ய விலஸச்சம் பாஸநா
பேர்ஜக-
த்கிம்பாகம் கலயந்தமந்தகஸபாஸம்பாதுகம்
தாரகம் ।

கம்பாக்ராந்த்தியா ந தர்துமநிசம் யம் பார
யந்தே ஜனா:
தம் பாரே தமஸாம் ஸ்திதம் கலயதாம் கிம்
பாமரை: பார்த்திவை: ||

வானத்தில் ஒளியுடன் விளங்கும் மின்னலைப் போன்று கண்ணைப் பறிக்கும் ஒளி மிகுந்த தனது ஆயுதத்தைப் பிரயோகித்து இவ்வுலகிற்கு மிகுந்த துன்பத்தை அளித்துவந்த தாரகன் எனப்படும் அஸுரனைக் கொன்று யமதர்மனுடைய ஸபைக்கு (குற்றங்களை விசாரிக்கும் அவைக்கு) அனுப்பிக் கொடுப்பவர். மண், மங்கை, மலர் முதலிய பொருள்களைத் தேடி ஓடுவதனால் நிலையற்ற உள்ளம் படைத்தவர்கள் கந்தப் பெருமானை எப்போதும் உள்ளத்தில் பாவனை செய்து வழிபட முடிவதில்லை. அங்ஙனம் பெருமை வாய்ந்தவரும், மாயை எனப்படும் இருளுக்கு அப்பால் துலங்குகின்றவருமான ஸுப்ரமண்யப் பெருமானை எப்பொழுதும் தங்களுடைய உள்ளங்களில் தியானம் செய்து வழிபடும் பாக்ய சாலிகளுக்கு ஒரு குறைவும் இல்லை. இத்தகைய அடியார்கள் இவ்வுலகில் இன்பமுற்றிருக்கத் தேவைப்படும் ஏதோ சில பொருள்களை மட்டும் அளிப்பதற்கான திறமை வாய்ந்த ஸாதாரண அரசர்களை ஒருபொழுதும் அணுகமாட்டார்கள்.

९२. गत्या शिक्षितदृप्तसिंहगमनैः शक्त्या स्फुरद्बाहुभिः
प्रीत्या पोषितभक्तलोकनिवहैः श्रुत्यात्तबन्दिक्रमैः ।
रत्याप्तैर्निजकान्तिभिः कतिपयैरेत्यात्र यद्भूयते
तत्या किं मम सांप्रतं दिविषदां भूत्याणिमाद्यापि च ॥

கத்யா சிக்ஷிதத்ருப்தர்ஸிம்ஹகமனை: சக்த்யா
ஸ்புரத்பாஹுபி:
ப்ரீத்யா போஷிதபக்தலோகநிவஹை:
ச்ருத்யா த்தபந்திக்ரமை: |
ரத்யாப்தைர்நிஜகாந்திபி: கதிபயைரேத்யாத்ர
யத்பூயதே
தத்யா கிம் மம ஸாம்ப்ரதம் திவிஷதாம்
பூத்யாணிமாத்யாபி ச ||

கம்பீரமாக, அச்சமின்றி ஒய்யார நடைபோட்டுக்கொண்டு செல்லும் விலங்கரசன் சிங்கத்தினைக் காட்டிலும் அழகிய நடை உடையவர். வேலாயுதத்தின் ஒளிக்கூட்டத்துடன் துலங்கும் கைகளை உடையவர். அன்புகனிந்த உள்ளத்துடன் தன்னைச் சிறந்த பக்தியுடன் வழிபடுகின்ற அடியார்களின் கூட்டங்களை நன்கு காப்பாற்றுகின்றவர். வேந்தர்களைப் புகழ்ந்து துதிபாடும் வைதாளிகர்களைப் போன்று வேததேவதைகளால் துதிக்கப்படுகின்றவர். அத்தகைய சரவணபவப் பெருமானைப் பக்திப் பெருக்குடன் அடைந்து ஆனந்தமுற்றிருக்கும் எனக்கு இப்பொழுது இந்திரன் முதலிய தேவர்களின் கூட்டத்தால் ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. அணிமா முதலிய எட்டுவித ஐச்வர்யங்களும் எனக்கு தேவை இல்லை.

९३. कालं दैवतविद्विषां गलवलन्मालं सुरेन्द्रात्मजा-
लोलं शक्तिशिखाविदारितमहाशैलं दिवश्चारिणाम् ।
सालं पादरुचाहताश्रुततमोजालं भवेद्रक्षितुम्
कोऽलं नो जगतां त्रयेऽपि च परो बालं विना शूलिनः ।।

காலம் தைவதவித்விஷாம் கலவலந்மாலம்
ஸுரேந்த்ராத்மஜா-
லோலம் சக்திசிகாவிதாரிதமஹாசைலம்
திவச்சாரிணும் |
ஸாலம் பாதருசாஹதாச்ருததமோஜாலம்
பவேத்ரக்ஷிதும்
கோऽலம் நோ ஜகதாம் த்ரயேऽபி ச
பரோ பாலம் விநா சூலின: ||

உலகத்திற்கு நன்மையைச் செய்யும் தேவர்களுக்குத் தீங்கிழைக்கும் கொடியவர்களான அஸுரர்களைக் காலனுக இருந்து அழிபப்வர். ஜாதி, சம்பகம், செங்கழநீர், ரோஜா, முல்லை முதலிய நறுமணம் வீசும் மலர்களாலான அழகிய மாலைகளைக் கழுத்துகளில் அணிந்திருப்பவர். நூறு அச்வமேத யாகம் செய்த இந்திரனுடைய மகளான தேவயானையிடம் நிகரற்ற அன்பு கொண்டவர். ஒளியால் ஜ்வலிக்கின்ற வேலாயுதத்தால் க்ரௌஞ்சம் எனப்படும் பெரிய மலையைப் பிளந்து எறிந்தவர். ஒரு பட்டணத்தைக் கோட்டையானது காப்பது போன்று வானவர்களை எப்பொழுதும் காப்பாற்றுபவர். தனது திருவடித் தாமரையின் ஒளியால் அடியார்களின் அகத்தில் இருக்கும் அறியாமையாகிய இருளின் கூட்டத்தை நாசம் செய்பவர். மூன்று உலகங்களிலும் அனைவரையும் காப்பாற்றுவதற்கு சூலபாணியான பரமசிவனின் திருக்குமரனை குஹப்பெருமானை அன்றி வேறு யார்தான் திறமை வாய்ந்தவர் இருக்கிறார்? ஒருவரும் இல்லை.

१४. घर्मान्तध्वनदभ्रविभ्रमधनुश्चर्मासिभास्वद्भुजो
वर्मालंकृतविग्रहः प्रतिदिनं शर्मापहो विद्विषाम् ।
धर्माद्यर्थशुभालयो मुनिमनोभर्मासनाधिष्ठतो
नर्माणि प्रतिपद्यतां मनसि मे मर्मादिवाक्सन्ततेः ॥

*கர்மாந்தத்வநதப்ரவிப்ரமதனுச்சர்மாஸி*
*பாஸ்வத்புஜோ*
*வர்மாலம்க்ருதவிக்ரஹ: ப்ரதிதினம் சர்மா*
*பஹோ வித்விஷாம் ।*
*தர்மாத்யர்தசுபாலயோ முனிமனோபர்மாஸ—*
*நாதிஷ்டிதோ*
*நர்மாணி ப்ரதிபத்யதாம் மனஸி மே -*
*மர்மாதிவாக்ஸந்ததே: ॥*

கோடையின் முடிவில் இடிமுழக்கத்துடனும் மின்னல்களுடனும் விளங்கும் மேகம் போன்று தோற்றமளிக்கும் அழகிய ஒளி மிகுந்த வில்லை உடையவர். கத்தி, கேடையம் (கையைக் காப்பாற்றும் தோலாலான பொருள்) இவைகளுடன் சோபிக்கின்ற கைகளை உடையவர். கவசத்தை அணிந்து உடலை மிகவும் ஸௌந்தரமாகச் செய்திருப்பவர். நாள்தோறும் நாட்டின் நலனைக் கெடுக்கும் தீயவர்களுக்குத் துன்பத்தை அளிப்பவர். அறம், பொருள், இன்பம், வீடு முதலிய மங்கலப் பொருள்களுக்குக் கோயிலாக இருப்பவர். ஸத்வகுணம் நிறைந்த ஸாதுக்களுடைய உள்ளங்களாகிய பொன்மயமான ஆஸனத்தில் வீற்றிருப்பவர். என்றென்றும் அழிவின்றி தோன்றிவருகின்ற வேதங்களின் உண்மைப் பொருளாக இருப்பவர். அத்

தகைய சரவணபவப் பெருமான் என்னுடைய உள்ளத் தாமரையில் கேளிக்கைகள் புரிந்துகொண்டு ஸந்தோஷமாக இருக்கட்டும்.

१५. स्वर्वासिश्रमशृङ्खलाः शिथिलयन्सर्वाश्च शर्वाज्ञया
कुर्वाणो विपदः प्रकाममवनीगीर्वाणविद्वेषिणाम् ।
अर्वाचीनवचस्सुदूरमहिमा दुर्वाससाभ्यर्चितः
गुर्वाज्ञावशवर्तिनां हरतु नो दुर्वारदुर्वासनाः ॥

ஸ்வர்வாஸிச்ரமச்ருங்கலா: சிதிலயன்ஸர்-
வாச்ச சர்வாஞ்யா
குர்வாணோ விபத: ப்ரகாமமவனீகீர்
வாணவித்வேஷிணும் ।
அர்வாசீனவசஸ்ஸுதூரமஹிமா துர்வாஸ-
ஸாப்யர்சித:
குர்வாஜ்ஞாவசவர்திநாம் ஹரது நோ
துர்வாரதுர்வாஸனு: ॥

தந்தை பரமசிவனுடைய உத்தரவின்படி அமராவதியில் வாழும் வானவர்களுக்கு சங்கிலி போன்று தொடர்ந்து தோன்றுகின்ற துன்பங்கள் அனைத்தையும் நாசம் செய்பவர். மண்ணுலகில் வானவர்கள் என்று போற்றப்படும் அந்தணர்களைத் துன்புறுத்தி வெறுக்கின்ற துஷ்டங்களுக்குக் கஷ்டங்களைக் கொடுப்பவர். (ஸுப்ரமண்யர் என்ற பெயரைப் பொருளுள்ளதாகச் செய்பவர்). வேதங்கள் அல்லாத வேறு சொற்களுக்கு எட்டாத (வருணிக்க முடியாத) தனது பெருமையை உடையவர். தூர்வாஸஸ் எனப்படும் முனியால் ஆதரவுடன்

ஆராதிக்கப்படுபவர். அத்தகைய சரவணபவப் பெருமான்தெய்வத்திற்கு இணையான எனது குரு நாதர் இட்டக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வாழ்க் கையை நடத்திவரும் எங்களுடைய உள்ளத்தில் முற்பிறவிகளின் வினைப்பயனால் உறைந்து கிடக் கின்றதும் எளிதில் என்னால் போக்க முடியாதது மானகெட்ட எண்ணங்களின் கறைகளை கரையும் படிசெய்து என்னைக் காப்பாற்றட்டும்.

९६. शिष्टानां विशिनष्टि तुष्टिममितां कष्टानि नष्टं नय-
त्यष्टाङ्गस्य पुरस्तनोति नयनाभीष्टान्शिशुत्वक्रमान् ।
क्लिष्टाक्लिष्टगती: पिनष्टि मनसस्तुष्टात्मनां संयमे
स्पष्टास्पष्टगिराद्य तेन शिशुना नष्टाखिलापन्मम ॥

சிஷ்டாநாம் விசிநஷ்டி துஷ்டிமமிதாம்
கஷ்டானி நஷ்டம் நய—
த்யஷ்டாங்கஸ்ய புரஸ்தனோதி நயநாபீஷ்டாந்
சிசுத்வக்ரமான் ।
கலிஷ்டாக்லிஷ்டகதீ: பிநஷ்டி மனஸஸ்துஷ்
டாத்மநாம் ஸம்யமே
ஸ்பஷ்டாஸ்பஷ்டகிராத்ய தேன சிசுனா
நஷ்டாகிலாபந்மம ॥

நல்லோர்களுக்கு எல்லையில்லாத எல்லாவித மான நன்மைகளையும் மேலும் மேலும் வளரும்படிச் செய்பவர். அவர்களுக்கு நேரும் தீமைகளை அவ் வப்போது அகற்றுபவர். ஹிரண்ய கர்ப்பர், பதஞ் ஜலி முதலிய மஹான்களால் உபயோகிக்கப்பட்ட

அஷ்டாங்க யோக முறையில் உள்ளத்தில் தன்னை தியானம் செய்கின்ற யோகிகளுடைய முன்னிலையில் குழந்தைப் பருவம் முதலான பலவிதமான நிலைகளிலுள்ள தன்னுடைய அழகிய திவ்ய மங்கள விக்ரஹத்தைக் கண்குளிரப் பார்க்கும்படி நிற்பவர். தியானம், தாரணை, ஸமாதி ஆகிய மூன்றும் சேர்ந்த ஸம்யமம் என்ற நிலையில் உள்ளத்தில் தன்னைக் கண்டு களிக்கின்ற பாக்யசாலிகளான யோகி சிரேஷ்டர்களுடைய, உள்ளத்தின் நிலையற்ற தன்மைக்குக் காரணமானவைகளும், க்லேசங்களைத் (அவித்யா, அஸ்மிதா, ராகம், த்வேஷம், அபிநிவேசம் இவைகளை) தருகின்றவைகளும், அல்லாதவைகளுமான எண்ணங்களை அறவே அழிப்பவர். மழலைச் சொற்களை மொழிபவரும் (உருவமுள்ளதும், உருவமற்றதுமான பரம்பொருளைப்பற்றிப் பேசுபவரும்) மஹாதேவனுடைய அருமைத் தவக் குழந்தையுமான அத்தகைய சரவணபவன் இப்பொழுது என்னுடைய துன்பங்கள் அனைத்தையும் ஒழித்து விட்டார். நான் தன்யனானேன்.

१७. आधाराम्बुजमध्यकेलिसदनो बाधावहोऽहंकृते:
बोधानन्दविवर्तभासुरतनुर्मेऽधोऽधिमूर्ध्वं ज्वलन् ।
राधावल्लभमानितात्मविभवोऽगाधां विधत्तां श्रियं
क्रोधादेर्विजयं शचीप्रियतमासाधारणीं च प्रथाम् ॥

ஆதாராம்புஜமத்யகேலிஸதனோ பாதாவ
ஹோऽஹம்க்ருதே:
போதாநந்தவிவர்தபாஸுரதநுர்மேऽ
தோऽதிமூர்தம் ஜ்வலன் ।

ராதாவல்லபமாநிதாத்மவிபவோடகாதாம்
விதத்தாம் ச்ரியம்
க்ரோதாதேர்விஜயம் சசீ ப்ரியதமா-
ஸாதாரணீம் ச ப்ரதாம் ||

மூலாதார சக்ரம் எனப்படும் (உடலினுள் இருக்கும்) நான்கு இதழ் தாமரைப்பூவின் நடுவில் இருக்கும் மொட்டை ஸந்தோஷமாகத் தான் வஸிப்பதற்கான வீடாகச் செய்து கொண்டவர். தீய செயல்களில் தூண்டிவிடுவதற்குக் காரணமான ஆணவத்தைத் தடை செய்பவர். உண்மை, அறிவு, பேரானந்தம் இவைகளையே தன் திருமேனியாகக் கொண்டு பிரகாசித்துக் கொண்டிருப்பவர். உடலினுள், அடிமுதல் முடிவரை தனது ஒளியால் ஜ்வலித்துக் கொண்டிருப்பவர். ராதையின் மணாளனை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினால் கௌரவிக்கப்பட்ட ஒப்புயர்வற்ற மஹிமையை உடையவர். (ஸ்ரீகிருஷ்ணரால் பூஜிக்கப்பட்டவர்). அத்தகைய சரவணபவப் பெருமான் எனக்குக் குறைவற்ற செல்வத்தையும், சினம் எனப்படும் பகைவனிடமிருந்து வெற்றியையும், தேவேந்திரனுடைய புகழுக்கு இணையான புகழையும் தந்து அருளட்டும்.

१८. गाढाभ्यासविनिद्रितोरगसुतालीढानिलानां सताम्
गूढावासमुपेत्य चेतसि परं सोढा समस्तैनसाम् ।
बाढाज्ञानपिशाचिकावृतमहामूढात्मनां दुर्लभः
षोढास्याम्बुरुहश्शुभानि जगतां वोढा विधत्तां मम ॥

காடாப்யாஸவிநித்ரிதோரகஸூதாலீடாநிலா
நாம் ஸதாம்
கூடாவாஸமுபேத்ய சேதஸி பரம் ஸோடா
ஸமஸ்தைநஸாம் ।
பாடாஜ்ஞாநபிசாசிகாவ்ருத மஹாமூடாத்ம-
நாம் துர்லப:
ஷோடாஸ்தர்ம்புருஹச்சுபாநி ஜகதாம்
வோடா விதத்தாம் மம ॥

யோகவழியில் திடமான பயிற்சியின் பயனாய் குண்டலினீ சக்தியை விழிப்புறச் செய்து பிராணன் முதலிய வாயுக்களை அடக்கியவர்களும், ஸமாதியில் நிலைத்து நிற்கும் திறமை வாய்ந்தவர்களுமான ஸாதுக்களுடைய உள்ளத்தில் தனிமையில் இருந்து கொண்டு, அந்த ஸாதுக்களுடைய பாவங்கள், துன்பங்கள் அனைத்தையும் பொறுத்துக்கொண்டிருப்பவர். (பாவங்களையும், துன்பங்களையும் வேருடன் அகற்றி ஸாதுக்களை அனுக்ரஹிப்பவர்). திடமானதும், கடினமானதுமான மாயையாகிய பிசாசத்தால் சூழப்பட்டு உண்மை அறிவை இழந்தவர்களான பெரும் அறிவிலிகளுக்கு எளிதில் அடைய முடியாதவர். பதினான்கு உலகங்களுடையவும் யோக க்ஷேமங்களை வேண்டியபடித் தாங்கிக் கொண்டிருப்பவர். தாமரைப்பூ போன்ற ஆறு திருமுகங்களைக் கொண்டவர். அத்தகைய முருகக்கடவுள் எனக்கு எல்லாவிதமான நன்மைகளையும் செய்யட்டும்.

९९. आगोपालविधातृतुल्यविभवे यागोपगेयप्रथे
वेगोद्भिन्नपुनर्भवांकुरमहायोगोपसर्गापदि ।
रागोत्सिक्तजनानवाप्यचरणे नागोपवीतानुजे
भूगोळेऽभिरतिं न को नु कलयेद्रोगो न चेद्राजसः ॥

ஆகோபாலவிதாத்ருதுல்யவிபவே யாகோ-
பகேயப்ரதே
வேகோத்பிந்தபுனர்பவாம்குரமஹாயோ
கோபஸர்காபதி ।
ராகோத்ஸிக்தஜனானவாப்யசரணே
நாகோபவீதானுஜே
பூகோளேऽபிரதிம் ந கோ நு கலயேத்ரோகோ
ந சேத்ராஜஸ: ॥

இடையர் முதலான ஸாதாரண மனிதர்களுக்கும், பிரும்மதேவன் முதலான வானவர்களுக்கும் வேறுபாடின்றி ஏற்றத்தாழ்வைப் பாராட்டாமல் அவரவர்கள் விரும்பிய பொருளை அளிப்பவர். தொடர்ச்சியாய், ஓய்வில்லாமல் முளைத்துக் கொண்டிருக்கும் (தோன்றிக் கொண்டிருக்கும்) மறுபிறப்பாகிய முளையை வளராமல் கருகிப் போகும்படிச் செய்யும், ஸூர்யன் முதலிய பல கிரஹங்களுடைய சேர்க்கையால் ஏற்படும் நாச காரணமான கொடிய தீ முதலிய பொருளாக இருப்பவர். பேராசை பிடித்து அலையும் மூடர்களால் அடைய முடியாத திருவடியை உடையவர். பாம்பை பூணூலாக அணிந்திருக்கும் விநாயகப் பெருமானுடைய அருமைத் தம்பியாக இருப்பவர். இம்மண்ணுலகில்

ரஜோகுணத்தின் மேலீட்டால் தோன்றும் பேராசை எனப்படும் பிணியால் பிடிக்கப்படாத மனிதன் எவனும் அத்தகைய சரவணபவப் பெருமானிடம் உள்ளம் பூரித்த மிகுந்த அன்பை வைக்காமல் இருக்கமாட்டான்.

१००. ओष्ठासञ्जितलोचनाय दिविजश्रेष्ठात्मजाया जग-
ज्ज्येष्ठानङ्गविवर्तविग्रहवते प्रेष्ठाय शिष्टावने ।
गोष्ठायादिगवां ततेर्भुवनवर्षिष्ठाय सभ्यान्तरे
निष्ठायाश्रितलोचनाब्जयुगनेदिष्ठाय
कुर्मोऽञ्जलिम् ॥

ஓஷ்டாஸஞ்ஜிதலோசனாய திவிஜச்ரேஷ்டாத்
மஜாயா ஜக—
ஜ்ஜ்யேஷ்டாநங்க விவர்தவிக்ரஹவதே
ப்ரேஷ்டாய சிஷ்டாவனே ।
கோஷ்டாயாதிகவாம் ததேர்புவனவர்-
ஷிஷ்டாய ஸப்யாந்தரே
நிஷ்டாயாச்ரிதலோசனாப்ஜயுக நேதிஷ்டாய
குர்மோऽஞ்ஜலிம் ॥

தேவராஜனுடைய சிறந்த மகளான தேவயானையினுடைய உதடுகளை ஆசையுடன் நோக்கிக் கொண்டிருப்பவர். இவ்வுலகில் முதலாவதாகத் தோன்றி உடல் இல்லாமலேயே உலகம் அனைத்தையும் மயக்கமுறச் செய்யும் மன்மதனிடமிருந்து தோன்றிய அழகு மிகுந்த உடலை அடைந்திருப்பவர். நல்லோர்களைக் காப்பாற்றுவதில் எப்போதும்

ஆதரவுடன் காத்திருப்பவர். ஸநாதனமான வே தங்களாகிய பசுக்களின் கூட்டத்திற்குக் கொட்டிலாக (வாழும் இடமாக) இருப்பவர். இவ்வுலகில் அனைவருக்கும் வயதில் மூத்தவராக இருப்பவர். (என்றென்றும் அழியாதிருப்பவர் என்பது கருத்து) ஸாது ஜனங்களுடைய உள்ளத்தை விட்டு அகலாதிருப்பவர். தன்னை மிக்க பக்தியுடன் வழிபடும் அடியார்களுடைய தாமரைப்பூ போன்ற இரு வழிகளின் அருகாமையிலேயே தரிசனம் அளித்துக் கொண்டிருப்பவர். அத்தகைய சரவணபவப் பெருமானை எப்பொழுதும் அஞ்ஜலி செய்து வணங்குவோமாக.

१०१. सीम्ने सद्गुणसंपदां नवमणीधाम्ने श्रितापद्द्विष-
न्नाम्ने शासितदैवतारिपरिषत्स्थेम्ने च हेम्ने श्रिया ।
व्योम्ने चिद्विमलाय सर्वजगतां धाम्ने निकेतीभव-
त्साम्नेऽनादिकुटुम्बिभाग्यलहरीभूम्ने परस्मै नमः ॥

ஸீம்னே ஸத்குணஸம்பதாம் நவமணீ
தாம்னே ச்ரிதாபத்த்விஷ-
ந் நாம்னே சாஸிததைவதாரிபரிஷத்ஸ்
தேம்னே ச ஹேம்னே ச்ரியா।
வ்யோம்னே சித்விமலாய ஸர்வஜகதாம்
தாம்னே நிகேதீபவ-
த்ஸாம்னேऽநாதிகுடும்பி பாக்யல
ஹரீபூம்னே பரஸ்மை நம: ॥

நற்குணங்களாகிய சிறந்த செல்வங்களுக்கு எல்லையாக (இருப்பிடமாக) இருப்பவர். புதிய

இரத்தினங்களால் இழைக்கப்பட்ட அழகிய இல்லத்தில் (கோயிலில்) இருப்பவர். தன்னை வழிபடும் அடியார்களின் துன்பங்களுக்குப் பெரும் பகைவனாக இருப்பவர். உலக நலனில் கருத்துள்ள தேவர்களைத் துன்புறுத்திப் பகைக்கின்ற அஸுரக் கூட்டத்தை நன்கு தண்டிப்பவர். பொன்னைப் போன்று துலங்கும் திருமேனியை உடையவர். வானத்தைப் போன்று மாசற்ற சைதன்ய வடிவனாக இருப்பவர். உலகங்கள் அனைத்தையும் தாங்கிக்கொண்டிருப்பவர். ஸாமவேதங்களுக்கு வீடாக இருப்பவர். (ஸாமவேதங்களால் நன்கு துதிக்கப்படுகின்றவர் என்பது கருத்து). இவ்வுலகின் முதலாவதான தாய் தந்தையர்களான பார்வதீ பரமேஸ்வரர்களுடைய ஸுக்ருதமாகிய அமுதப் பெருக்கின் வடிவமாக இருப்பவர். அத்தகைய பரம்பொருளான சரவணபவப் பெருமானுக்கு எண்ணற்ற வணக்கங்களைச் செய்வோமாக.

१०२. परयुवतिरतं मां शङ्कयित्वात्युदासे
तदपि मदवनं ते सांप्रतं सांप्रतं हि ।
त्यजति गुरुकलत्रव्यापृतं त्वात्पिता किम्
विमलकमलसंपद्द्रोहिणं रोहिणीशम् ॥

பரயுவதிரதம் மாம் சங்கயித்வாऽப் யுதாஸே
ததபி மதவனம் தே ஸாம்ப்ரதம்
ஸாம்ப்ரதம் ஹி
த்யஜதி குருகலத்ரவ்யாப்ருதம் த்வத்பிதா கிம்
விமலகமலஸம்பத்த்ரோஹிணம் ரோஹிணீசம்।

ஏ சரவணபவ! "பிறர் பெண்டிரைப் புணருகின்றவன்; மிகக் கொடியவன் இவன்" என்று என்னை ஸந்தேஹித்து உம்மால் கவனிக்காமல் இருக்க முடியாது. இப்பொழுது என் போன்ற துஷ்டனைக் காப்பாற்றுவது தங்களுக்கு ஒருவிதத்திலும் பொருத்தம் அற்றதாக ஆகாது. ஏனெனில், உமது தந்தை பரமசிவன், குருவின் (ப்ருஹஸ்பதியின்) மனைவியைப் புணர்ந்தவனும், மலர்ந்த தாமரை மலரின் லக்ஷ்மியை (சோபையை) அபஹரிக்கின்றவனுமான சந்திரனைக் கவனிக்காமல் தள்ளிவிட்டாரா? இல்லை. தலையில் வைத்துச் சுமக்கவும் செய்கின்றாரே!

१०३. परधनापहृतौ यतमाने नोचिता मयि तवेयमुपेक्षा ।
विस्मृतं किमु हिरण्यहरत्वं तत्त्वया तव विभोः
श्वशुरस्य ॥

பரதனாபஹ்ருதௌ யதமானே நோசிதா
மயி தவேயமுபேக்ஷா ।
விஸ்ம்ருதம் கிமு ஹிரண்யஹரத்வம்
தத்த்வயா தவ விபோ: ச்வசுரஸ்ய ॥

"பிறர் பொருளைக்கொள்ளையடிப்பவன் இவன்" என்று என்னை ஒருபொழுதும் ஒதுக்கித் தள்ளுவது உமக்கு உகந்ததல்ல. ஏனெனில், தங்களுக்கு மகளைக் கொடுத்த காரணத்தால் பெரியவரும், மாமனுருமான விஷ்ணுவானவர் ஹிரண்யத்தை (ஸ்வர்ணத்தை; ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு எனப் பெயர் பூண்ட அஸுரர்களை) அபஹரித்தார் என்ற

விஷயத்தை மறந்து விடாதீர். எனவே இக்காரணத்தால் என்னைத் தங்களால் காப்பாற்றுமல் இருக்க முடியாது.

குறிப்பு:- வடமொழியில் "ஹிரண்யம்" என்ற சொல் பொன்னையும், "ஹிரண்யம்" என்ற பதத்தை முன்னதாகக் கொண்ட பெயர் உடைய அஸுரர்களையும் குறிப்பதாகும். பீமஸேனனை பீமன் என்றும், ஸத்யபாமையை பாமை என்றும் கூறுவது போல,' ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு என்றவர்களை "ஹிரண்ய" என்று கூறுவதும் இயற்கையே. எனவே கவி இச்செய்யுளில் ச்லேடை அலங்காரத்தைப் பொருத்தி, பொன்னைத் திருடுபவனையும் கடவுள் காப்பாற்றவேண்டும் என்று வருணித்துள்ளார்.

१०४. अहिंसकानामिह हिंसकोऽपि न तेऽच्छिदं ब्रह्मशिरः पितेव ॥
अतीव लुब्धं किमुपेक्षते मां लुब्धात्मजा सापि तवाङ्कसंस्था ॥

அஹிம்ஸகானுமிஹ ஹிம்ஸகோSபி ந தேSச்
சிதம் ப்ரஹ்மசிர: பிதேவ |
அதீவ லுப்தம் கிமுபேக்ஷதே மாம் லுப்தாத்-
மஜா ஸாபி தவாங்கஸம்ஸ்தா ||

ஏ சரவணபவ! "இவ்வுலகில் யாதொரு துன்பத்தையும் செய்யாதவனுக்கும்கூட தீங்கிழைக்கும் கொடிய பாபி இவன்" என்று என்னைத்

தாங்கள் உதாசீனம் செய்ய முடியாது. ஏனெனில் உமது தந்தையான பரமசிவன், பிரும்ம தேவனுடைய தலையை வெட்டியதுபோல, நான் ஒரு பிராமணனுடைய தலையையும் வெட்டவில்லை. மேலும், என்னை மிகவும் லுப்தன் (பேராசைக்காரன்) என்று தள்ளிவிடலாம் என்று எண்ணுதீர். லுப்தனுடைய (பேராசைக்காரனுடைய; வேடனுடைய) மகனைத் தாங்கள் தங்கள் மடிமீது வைத்து அவனைச் சீராட்டிப் பாராட்டிக் கொண்டாடுகிறீர் என்பது நினைவில் இருக்கட்டும்.

கருத்து:- இச்செய்யுளில் கவி பேராசைக்காரன்; வேடன் என்ற இரட்டைப் பொருள் கொண்ட "लुब्ध" (லுப்த) என்ற சொல்லையும், பிரும்ம தேவன், பிராமணன் என்ற இரட்டைப் பொருள் கொண்ட "ब्रह्म" (ப்ரஹ்ம) என்ற சொல்லையும் பிரயோகித்து, பேராசைக்காரனுக்கும், கொலைபாதகம் செய்பவனுக்கும் கடவுள் அனுக்ரஹிக்கவேண்டும் என்று கவி குறிப்பிட்டிருக்கின்றார்.

१०५. मलिन सङ्गतिदूषितमेव मां किमु विलोकयितुं
परिशङ्कसे ।
न हि भवानिव भूतपिशाचिकासदसि सन्तत-
मासितुमुत्सहे ॥

மலின ஸங்கதிதூஷிதமேவ மாம் கிமு விலோக
யிதும் பரிசங்கஸே ।
ந ஹி பவானிவ பூதபிசாசிகாஸதஸி ஸந்தத
மாஸிதுமுத்ஸஹே ।

ஏ சரவணபவ! "மிக மட்டமான செயல்களைப் புரிகின்ற கெட்ட மனிதர்களின் கூட்டத்துடன் தொடர்புள்ளவன் இவன். எனவே இவனைக் காப்பதும் குற்றமாகும்" என்று எண்ணி என்னிடம் தங்களுக்கு ஐயப்பாடு வேண்டாம். ஏனெனில் தங்களைப் போன்று, (தங்கள் வீட்டுப் பணியாட்களான) பூதங்கள் ப்ரேதங்கள், பிசாசுகள், இவைகளுடைய கூட்டத்தில் எப்பொழுதும் நான் இருக்கவில்லை. துஷ்டர்களுடன் சேர்ந்திருப்பவர்களையும் கடவுள் காப்பாற்ற வேண்டும் என்பது கருத்து.

---

१०६. निष्किञ्चनोऽयमिति किं ननु मय्युदास्से
भिक्षाशनस्तव पिता भगवंस्तदास्ताम् ।
त्वं चापि भैक्षमटसि प्रकटं फलिन्याम्
तन्मां भजस्व सदृशी खलु बन्धुता नौ ॥

நிஷ்கிஞ்சனோऽயமிதி கிம் நநு மய்யுதாஸ்ஸே
பிக்ஷாசநஸ்தவ பிதா பகவம்ஸ்ததாஸ்தாம் ।
த்வம் சாபி பைக்ஷமடஸி ப்ரகடம் பலிந்யாம்
தந்மாம் பஜஸ்வ ஸத்ருசீ கலு பந்துதா நௌ ॥

ஆறுவிதமான கல்யாண குணங்கள் நிறைந்தவரே! ஏ ஆறுமுகா! "இவன் சிறிதும் செல்வம் இல்லாத ஏழை. எனவே, இவனைக் கவனிக்க வேண்டாம்" என்று என்னைத் தாங்கள் அனுதரவு செய்ய வேண்டாம். உமது தந்தை பெரிய பிச்சைக்காரர். தாங்கள் பழனிமலைமீது எல்லோரும் அறியும்படி

பிச்சை எடுக்கின்றீர். எனவே தந்தை பிச்சை எடுப்பவர்; மகனும் பிச்சை எடுப்பவர்; அவரை வழிபடும் பக்தனும் பிச்சை எடுப்பவன், என்று நம் மூன்று பேர்களுக்கும் பொருத்தமான உறவு இருப்பதை அனுஸரித்து என்னைக் காத்தருள்வீர்களாக.

१०७. परिपालयितुं तवाभिकाङ्क्षा
यदि दृप्तान्कृपणो त्तमाग्रवृत्त्या ।
किमु कीर्तिरितस्तवाप्यपूर्वा
विमला दीनदयालुतोपक्लुप्ता ॥

பரிபாலயிதும் தவாபிகாங்க்ஷா
யதி த்ருப்தாந்க்ருபணோத்தமாக்ரவ்ருத்த்யா ।
கிமு கீர்திரிதஸ்தவாப்யபூர்வா
விமலா தீன தயாலுதோபக்லுப்தா ॥

ஏ சரவணபவ! எல்லாவிதமான செல்வச் சிறப்பும் நிறைந்து (தமக்கு ஒருவரும் நிகர் இல்லை என்ற எண்ணத்துடன்) கர்வத்துடன் வாழ்ந்து வரும் மாந்தர்களைக் காப்பாற்றுவதன்மூலம், சிறிதும் செல்வம் இல்லாது வருந்துகின்ற ஏழைகளைக் காப்பாற்றுவதனால் ஏற்படும் புகழை, தாங்கள் ஒருபொழுதும் அடையமுடியாது. எனவே, என் போன்ற மிகவும் தீனர்களை (ஏழைகளை) தயவு செய்து காப்பாற்றினால், உமது புகழ் மாசற்றதாகவும், புதுமை உடையதாகவும், உலகில் மஹாஜனங்களால் வழங்கப்படும்.

१०८. अङ्गीकृतं मृगशिशुं न शशी जहाति
फालं तपन्तमपि नो दहनं त्रिणेत्रः ।
आशीविषं च विषमं न हि शेषशायी
तीक्ष्णस्वभावमपि मां न जहीहि पाल्यम् ॥

அங்கீக்ருதம் ம்ருகசிசும் ந சசீ ஜஹாதி
பாலம் தபந்தமபி நோ தஹனம்
த்ரிணேத்ர: ।
ஆசீவிஷம் ச விஷமம் ந ஹி சேஷசாயீ
தீக்ஷ்ணஸ்வபாவமபி மாம் ந ஜஹீஹி
பால்யம் ।

சந்திரன் தன்னால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மான்குட்டியை விலங்கினத்தைச் சார்ந்து இருப்பினும் விடுவதில்லை. முக்கண்ணனை மஹாதேவனும் நெற்றியின் நடுவே மூன்றாவது கண்ணில் எடுத்து வைத்துக் கொள்ளப்பட்ட அக்னியானது நெற்றியைப் பொசுக்கிக் கொண்டிருப்பினும் அதைத் தவிர்ப்பதில்லை. ஆதிசேஷன் என்ற பாம்பைப் படுக்கையாக அமைத்துக்கொண்ட நாராயணனும், கொடிய விஷமுள்ளதாக இருப்பினும் அந்தப் பாம்பை வேண்டாம் என்று தள்ளிவிடவில்லை. எனவே, "தங்கள் திருவடித் தொண்டன் காப்பாற்றப்பட வேண்டியவன்" என்று என்னை ஏற்றுக்கொண்டபின், க்ரூரமான நடத்தை உள்ளவன் என்று என்னைத் தள்ளிவிடாதிருக்கக் கடவீராக.

१०९. कण्ठे गडुर्भवति यच्छरदिन्दुकान्तेः
अर्धासनं भजति यत्सुरभोज्यलक्ष्म्याः ।
आचार्यतां भजति यन्नवमल्लिकाना–
मानन्दमावहति ते स्मितमेव तन्नः ॥

கண்டே கடுர்பவதி யச்சரதிந்துகாந்தே:
அர்தாஸனம் பஜதி யத்ஸுரபோஜ்ய
லக்ஷ்ம்யா: ।
ஆசார்யதாம் பஜதி யந்நவமல்லிகாநாம்
ஆனந்தமாவஹதி தே ஸ்மிதமேவ தந்ந: ॥

ஏ சரவணபவ! தங்களுடைய அழகிய புன்சிரிப்பானது; சரத்காலத்தில் இரவில் வானவீதியில் துலங்கும் பூர்ண சந்திரனுடைய ஒளியின் கழுத்திற்குப் பிளவை எனப்படும் ரணமாக இருப்பதாகும். (கழுத்தில் ரணம் உள்ளவனுக்கு நிமிர்ந்து பார்க்க முடியாதது போன்று, கந்தப்பெருமானின் புன்சிரிப்பின் முன் அழகு குறைந்த சரத்கால சந்திரனின் பிரபையானது நிமிர்ந்திருக்க முடியாமல் அவமானத்தால் தலைகுனிந்திருக்கிறது என்பது கருத்து) தேவலோக ராஜலக்ஷ்மி வீற்றிருக்கும் சிங்காஸனத்தில் பாதி இடத்தை வியாபித்துக் கொண்டிருப்பதாகும் (கந்தப்பெருமானுடைய புன்சிரிப்பின் பயனாகவே தேவராஜப் பதவி கிடைப்பதாகும் என்பது கருத்து). புதியதும், அழகியதுமான மல்லிகை மலர்களுக்கு (வெண்ணிறத்தை அளிக்கும் விஷயத்தில்) குருஸ்தானத்தை வகிப்பதாகும். (மல்லிகை மலரைக் காட்டிலும் கந்தனின் புன்சிரிப்பு

வெண்ணிறம் உள்ளதாகும் என்பது கருத்து. புன் சிரிப்பை வெண்ணிறம் உள்ளதாக வருணிப்பது கவிகளின் இயல்பு). அத்தகைய கந்தப்பெருமானு டைய புன்சிரிப்பானது எனக்கு எப்பொழுதும் மகிழ்ச்சியைத் தந்துகொண்டிருக்கட்டும்.

११०. अथवा क्षणिकाचलालवालो गुणपुष्पः परिसेवितो
द्विजेन्द्रैः ।
श्रुतिमुग्धलताञ्चितोऽङ्घ्रिशाखी तव दिव्यः
फलतीप्सितं ममैषः ॥

அதவா க்ஷணிகாசலாலவாலோ
குணபுஷ்ப: பரிஸேவிதோ த்விஜேந்த்ரை: ।
ச்ருதிமுக்தலதாஞ்சிதோऽங்க்ரிசாகீ
தவ திவ்ய: பலதீப்ஸிதம் மமைஷ: ॥

க்ஷணிகாசலம், தணிகாசலம் அல்லது திருத் தணி எனப்படும் தங்களது திருத்தலமாகிய பாத்தி யில் (மரங்களை வளர்த்துவதற்கான இடத்தில்) தோன்றியதும், லோகக்ஷேமத்திற்குக் காரணமான தங்களுடைய கல்யாண குணங்களாகிய மலர்களைச் சொறிகின்றதும், தங்களைச் சிறந்த பக்தியுடன் வழிபடுகின்ற சிறந்த அந்தணர்களாகிய பறவைக ளுக்குப் புகலிடமாக இருப்பதும், வேதங்களா கிய அழகிய வல்லிகளுக்கு கீழே விழாமல் தாங்கி நிற்கும் ஆதாரமாக இருப்பதுமான தங்களு டைய திருவடியாகிய கல்பகவிருக்ஷமானது எனக்கு வேண்டிய பழத்தை அளித்துக் கொண்டிருக்கின் றது. எனவே, எனக்கு ஒருவிதமான கவலையும்

இல்லை. (திருத்தணியில் கோவில் கொண்டிருக்கும் ஸுப்ரமண்யக் கடவுள் வேதங்களைக் காப்பாற்று கின்றவர். சிறந்த பக்தர்களான அந்தணர்களால் வழிபடப்படுகின்றவர். அத்தகைய பெருமானை நான் வழிபடுகின்றேன். பிறவிப்பயனைப் பெற்று விட்டேன். இனி, எனக்கு இவ்வுலகில் தேவைப் படுவது ஒன்றுமே இல்லை என்பது கவியின் உள்ளம்)

१११. किं वा विपदि विधेयं ध्येयं ते ध्यातृमङ्गलं चरणम् ।
संपदि किं करणीयं भूयो भूयोऽपरोक्षणीयं तत् ॥

கிம் வா விபதி விதேயம்
த்யேயம் தே த்யாத்ருமங்கலம் சரணம் |
ஸம்பதி கிம் கரணீயம்
பூயோ பூயோऽபரோக்ஷணீயம் தத் ||

துன்பம் நேரிடும் நேரத்தில் நாம் என்ன செய்யவேண்டும்? கஷ்டங்களையகற்றி மகிழ்ச்சிதரும் முருகனுடைய திருவடிவை தியானம் செய்ய வேண்டும். (இடையறுமல் எண்ணிக் கொண்டே இருக்கவேண்டும்.) செல்வம் சேர்ந்த காலத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்? உள்ளத்தால் முருகனது திருவடியை எப்பொழுதும் பாவனை செய்ய வேண்டும். திருத்தலங்களுக்குச் சென்று அவருடைய திவ்ய மங்கள உருவங்களைக் கண் குளிரக் கண்டுகொண்டே இருக்கவேண்டும்.

११२. बद्धादराः श्रितविपत्परितापशान्त्यै
दुग्धाब्धिगर्भभरितामृतवीचिवन्द्याः ।
मुग्धाब्जजन्मविफलीकरणस्वभावाः
श्रद्धालवोऽवितुममी तव मां कटाक्षाः ॥

பத்தாதரா: ச்ரிதவிபத்பரிதாபசாந்த்யை
துக்தாப்திகர்பபரிதாம்ருதவீசிவந்த்யா: ।
முக்தாப்ஜஜன்மவிபலீகரணஸ்வபாவா:
ச்ரத்தாலவோऽவிதுமமீ தவ மாம் கடாக்ஷா: ॥

ஏ சரவணபவ! தங்கள் கடைக்கண் பார்வைகளானவை தங்களுடைய திருவடியை வழிபடும் அடியார்களுக்கு நேரிடும் துன்பங்களால் அவர்களுடைய உள்ளங்களைத் தபிக்கும்படி (எரியும்படி) செய்யும் வெப்பத்தைத் தணிப்பதில் மிக்க ஆதரவுடன் இருப்பவைகளாகும். பாற்கடலின் நடுவே இருக்கும்-மிக்க இனிப்பான அலைகளால் வணங்கத் தகுந்தவைகளாகும். (பாற்கடலின் அலைகளைக் காட்டிலும் மதுரமான தயாரஸம் நிறைந்தவைகள் என்பது கருத்து). அழகிய தாமரை மலரின் பிறவியைப் பயனற்றதாகச் செய்யும் இயற்கை உள்ளவைகளாகும். (தாமரை மலரைக் காட்டிலும் அழகியவைகள் என்பது கருத்து.) அத்தகைய தங்களுடைய கடைக்கண் பார்வைகள் தங்களது திருவடித் தொண்டனை என்னை எப்போதும் காப்பாற்றுவதற்குக் காத்திருக்கின்றன. எனவே நான் கவலையற்றிருக்கின்றேன்.

११३. अमृतमिव सुराणां ब्राह्मणानां त्रयीव
प्रणव इव यतीनां योगिनामुन्मनीव ।
श्रुतिपथपथिकस्य श्रीमदेकं निदानम्
मम तु किमपि लब्धं लुब्धकन्याभिलुब्धम् ॥

அம்ருதமிவ ஸுராணும் ப்ராஹ்மணுனும்
த்ரயீவ
ப்ரணவ இவ யதீனும் யோகினுமுன்மனீவ ।
ச்ருதிபதபதிகஸ்ய ச்ரீமதேகம் நிதானம்
மம து கிமபி லம்தம் லுப்தகன்யாபிலுப்தம் ॥

வானவர்களுக்கு அமிருதம் போன்றும், அந்தணர்களுக்கு வேதங்கள் போன்றும், உலக ஸுகத்தை வெறுத்துத் துறவறம் பூண்டிருக்கும் ஸன்யாஸிகளுக்கு ஓங்காரம் போன்றும், அஷ்டாங்க யோகத்தில் எப்போதும் ஈடுபாடுடைய யோகிகளுக்கு "உன்மநீ" எனப்படும் ஒப்புயர்வற்ற நிலை போன்றும், வேதம் வகுத்த வழியில் வாழ்க்கை நடத்தி வருபவனுக்கு எல்லாவிதமான ஐச்வர்யங்களையும் பெறுவதற்கு ஒரே மூலகாரணமாக இருப்பதும், வேடப்பெண் வள்ளியிடம் மிகுந்த அன்பு கொண்டதும், வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாததுமான "ஸுப்ரஹமண்யம்" எனப்படும் தெய்வம் எனக்குக் கிடைத்துவிட்டது. எனவே நான் அடைய வேண்டியதை அடைந்துவிட்டேன்; செய்ய வேண்டியதைச் செய்து முடித்துவிட்டேன்; நான் தன்யனுனேன் என்று கவி தன்னுடைய ஜன்ம ஸாபல்யத்தை இச்செய்யுளால் அறிவித்துள்ளார்.

११४. पातय वा घातय वा पालय वा समवलोक्य लालय वा ।
लब्धं तव पदयुग्मं नाहं मुञ्चामि नापि दुर्वृत्तीः ॥

பாதய வா காதய வா பாலய வா ஸமவலோக்ய
லாலய வா ।
லப்தம் தவ பதயுக்மம் நாஹம் முஞ்சாமி நாபி
துர்வ்ருத்தீ: ॥

ஏ ஸுப்ரமண்யா! என்னைப் பள்ளத்தாக்கில் தள்ளவோ, கொல்லவோ, காப்பாற்றவோ, அன்புடன் நோக்கிக் கொண்டாடவோ உமது இஷ்டம் போல எதுவேண்டுமாலும் செய்யவும். நான் எனக்குக் கிடைத்திருக்கும் உமது திருவடிகள் இரண்டையும் ஒருபொழுதும் பிடி தவறவிடமாட்டேன். என்னல் தவிர்க்கமுடியாதபடி தொடரும் கெட்ட பழக்கங்களையும் விடமாட்டேன். (எனது கெட்ட பழக்கங்களை ஒவ்வொன்ருக அகற்றி என்னைத் தூய்மைப்படுத்திக் காப்பாற்றுவது தங்கள் கடமை என்பது கருத்து)

११५. नमो नमस्ते नगदम्भभेदिन्
नमो नमस्ते निगमान्तचारिन् ।
नमो नमस्ते खगराजयायिन्
नमो नमस्ते भगवन् परात्मन् ॥

நமோ நமஸ்தே நகதம்பபேதின்
நமோ நமஸ்தே நிகமாந்தசாரின் ।
நமோ நமஸ்தே ககராஜயாயின்
நமோ நமஸ்தே பகவன் பராத்மன் ॥

க்ரௌஞ்ச மலையின் கொழுப்பை அடக்கிய பாலஸுப்ரமண்யா! உமக்குப் பல தடவைகள் நமஸ்காரங்கள். வேதாந்தங்களில் ஸஞ்சரிக்கும் (உபநிஷத்துக்களில் அறியப்படும்) பரம்பொருளே! ஏ சரவணபவா! அனேகம் தடவைகள் வந்தனங்கள்! பறவைகளில் சிறந்த மயில்மீது ஏறி உலாவுகின்றவரே! ஏ குஹக்கடவுளே! ஆயிரக் கணக்கான வணக்கங்கள்! கல்யாண குணங்கள் ஆறும் நிறைந்தவரே! அனந்தகோடி நமஸ்காரங்கள். எப்போதும் எங்களை தயவு கூர்ந்து காப்பாற்றுவீராக!

११६. श्रीशङ्करात्मजगुणग्रथिता तदीय-
पादारविन्दमकरन्दकणावसिक्ता ।
मोदावहा भवतु सज्जनषट्पदानाम् ।
गोपालकृष्णकविवाक् सुरपुष्पमाला ॥

ஸ்ரீசங்கராத்மஜகுணக்ரதிதா ததீய-
பாதாரவிந்தமகரந்தகணவஸிக்தா ।
மோதாவஹா பவது ஸஜ்ஜநஷட்பதாணும்
கோபாலக்ருஷ்ணகவிவாக் ஸுரபுஷ்பமாலா ॥

இந்த "ஸுப்ரஹ்மண்ய கர்ணாம்ருதம்" என்ற நூலானது "மஹாபாஷ்யம் கோபாலகிருஷ்ண

சாஸ்திரிகள் எனப்படும் மஹாகவியால் அழகிய சொற்களாகிய தேவலோகத்து கல்பக மரத்தின் மலர்களால் செய்யப்பட்ட மாலையாகும். பரமேச்வரரின் திருக்குமாரரான ஸுப்ரமண்யக் கடவுளின் கல்யாண குணங்களாகிய நூல்களில் நன்கு கோர்க்ப்பட்டதாகும். அத்தகையக பெருமை வாய்ந்த இந்த துதிப் பூமாலையானது அப்பெருமானுடைய திருவடித் தொடர்களான ஸாது ஜனங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்துக் கொண்டு என்றென்றும் மனம் குன்றுது வாடாமல் விளங்கிக் கொண்டிருக்கட்டும்.

इति सुरपुष्पमालास्तोत्रापरपर्यायम्
सुब्रह्मण्यकर्णामृतम् सम्पूर्णम् ॥

இதி ஸுரபுஷ்பமாலாஸ்தோத்ரா—
பரபர்யாயம்
ஸுப்ரஹ்மண்யகர்ணம்ருதம் ஸம்பூர்ணம் ॥

ஸ்ரீ ஸுப்ரமண்ய கர்ணமிருதம் முற்றிற்று.

गुहप्रियाख्यं व्याख्यानं गुरुस्वामिप्रकल्पितम् ।
तेन प्रीतः प्रसन्नोऽस्तु गुहःकल्याणशेवधिः ॥

ஸ்ரீ ஸுப்ரமண்ய கர்ணாம்ருதத்தின் குஹப் பிரியை எனப்படும் தமிழுரையானது குருஸ்வாமி சாஸ்திரிகளால் செய்யப் பெற்றது. இதனால், ஸகல மங்களங்களுக்கும் இருப்பிடமான குஹப்பெருமான் ஸந்தோஷமடையட்டும்.

குஹப்ரியை எனப்படும் தமிழுரை முற்றிற்று

சுபம்